பஞ்சாமிர்தம்

ஒரு மாதாந்தரப் பத்திரிகை

நான் ஒரு மானுடன் : நான் மதியாதன
மானுட வாழ்வில் இலே.

மாலை–I ஆனி –1924 காசு-3

ஐஹா சம்பாஷணைகள்

மாஜி ஹைகோர்ட்டு ஜட்ஜ்
ஸ்ரீ. T. V. சேஷகிரி ஐயர், சென்னை

காத்மாஜி, எல்லோரும் எதிர் பார்த்த வண்ணமே, சொல் வஞ்சனை யில்லா மலும் குறிப்பாகவும் பேசி யிருக்கிறார். ஒத்துழையாமை என்ற கொள்கைக்கு, அவர், அஹிம்சாத்திலும் உட் கருத் திலும் பொருத்த மாகவே யிருக்கிறார். தடுக்கவோ கெடுக் கவோ உத்தேசித்துச் சட்ட சபைக்குள் புக நினைப்பது, உண்மையில் அஹிம்சைக்கு விரோத மாகும். அதனல் தான், அஹிம்சை யோடு கூடிய ஒத்துழையாமைக்குக் குரு பீடம் போன்ற இவர், சுயராஜ்யக் கட்சிக் காரர் நடவடிக்கையைக் கண்டித் திருக்கிறார். சிலர், காங்கிர லுக்குள் சுயராஜ்யக் கட்சிக்காரர் புகுவதையே மகாத்மா முற்றிலும் தடுத் திருக்க வேண்டு மென்றும்; அவ்வாறு செய்யாது அரை மனதாய்க் கண்டித்தது, அவர் நடக்கை முன் பின் பொருத்த மில்லாத தென்பதைக் காட்டு மென்றும், சொல்லுகிறார்கள். நான் இதை ஒத்துக் கொள்ள வில்லே. அபிப்பிராய பேதங்களே மேன்மை பாராட்டுவது மகாத்மாவின் குண மென்பது பிரபலம். காங்கிரஸின் தீர்மானங்களில் எதாயினும் அவர்கள் மனத்

திற்கேற்ற தாக வில்லா விட்டால் ஆக்ஷேபிக்கும் சுதந்திரத் தையும் கொடுத்து, அவர், மிதவாதிகளைக் கூட காங்கிர ஸைச் சேரும்படிக் கேட்டுக் கொண்டிருக்கிறார். அவர் முதலில் தேச பக்தர்; பிறகே காங்கிரஸ் கட்சிக் காரர். அவர் தாராள சிந்தனை யுள்ள மஹா னுதலால், தம்முடன் கண்ணெடு கண்ணைப் பார்க்காதவரைப் பழிப்ப தில்லை. ஒருவன் தனது தேசத்திற்குத் தன்னல் இயன்ற மட்டும் சேவை புரிவா னாகில், அவன் அபிப்பிராயங்களை மகாத்மா ஒத்துக் கொள்ள வில்லை என்ற விஷயத்தை மட்டும் அநுசரித்து, ஒருநாளும் அவனை விரோதியாகப் பாராட்டு கிற தில்லை. பண்டிதர் மதன்மோஹன் மலாவியாவைப் போன்றவர் காங்கிரஸ் மெம்பர்களாக விருப்பது இதற்கு நிதர்சனம். பண்டிதர் காங்கிரஸைச் சேர முடியு மானால், தாஸும் நேருவும் சேரக் கூடா தென்று அவர் எப்படிச் சொல்ல லாம்? மிஸ்டர் காமத்தின் அக்கிராசனத்தின் கீழ்க் கூடிய 'லிபெரல்' சபைக்கு மகாத்மா அனுப்பிய நற்செய்தியைப் பாருங்கள்: லிபெரல் கூட்டத்தார், ஒத்துழையாமைக்கு நேர் விரோதிகள். அப்படி யிருந்தும், மகாத்மா, அக்கூட்டம் புரியும் தேச சேவை முயற்சிகளை வாழ்த்தி யிருக்கிறார். இந்தியாவின் அரும் பெரும் புதல்வ ரான மகாத்மாவின் மனோ பாவத்தை ஒருவன் உண்மை யில் அறிவா னாகில், அவர் சொல்வதிலும் செய்வதிலும் முக்கியமாக விளங்குவது தேச பக்தி யென்பதைக் காண்பான். மற் றெல்லா நோக்கங்களும் இதற்குக் கீழ்ப் பட்டனவே.

சுயராஜ்யக் கட்சிக்காரரைப் பற்றி அவ்வாறு நான் சொல்ல முடியாது. எலக்ஷன் சமயத்தில் அவர்களெழுப் பிய "தடை" என்ற வீரம் நிறைந்த யுத்தத் தொனி, இப்பொழுது, 'துரைத்தன அதிக்கிரமத்தை எதிர்த்தல்' என்று, மெலிந்து விட்டது. மிகவும் விநயத்துடன், இது சற்றும் பொருத்த மில்லாதது என்று, தெரிவித்துக் கொள் கிறேன். ராஜீய விஷயங்களில் முயற்சிக்கும் ஒவ்வொரு வனும், அவன் லிபெரலானாலும், தனித் தேசிய உழைப் பாளி (Independent Nationalist) யானாலும், அதிகார தோரணையில் துரைத்தனத்தார் தேச விருத்திக்கு இடை யூறுகள் செய்தால், எதிர்க்கக் கடமைப் பட்டிருக்கிறான். ஆகையால், சுய ராஜ்யக் கட்சியி லுள்ளவர் களுக்கும் அவனுக்கும் வித்தியாசமாக என்ன சின்னம் இருக்

கின்றது? அக் கட்சியினர் நோக்கம் எவ்வளவு விரிவாகவும் மழமழப்பாகவும் இருக்கின்ற தென்றால், தேர்ந்தெடுக்கப் பட்ட பின்னர், எல்லாப் பதவிகளையும் வகிப்பதும் அதனுள்ளாகும். மாகாண ராஜாங்கத்தில் மந்திரிப் பதவி வகிப்பதும் இவ்வித நோக்கத்தில் அடங்கும். பிறகு, 'லிபரல் கட்சியினர் துரைத்தனத் துடன் ஒத்துழைப்பதால் தேசிய நன்மையைக் கெடுக்கின்றார்கள்' என்று இவர்கள் நிரூபிக்க முயல்வது என்ன நியாயம்? சபைகளில் உட்காருவதையும், அக்கிராசனப் பதவிகள் வகிப்பதையும், மந்திரிகளாகப் பகுதிகளை ஆள்வதையும் விட, வேறெப்படி ஒத்துழைப்பது? ஆகையால், எலெக்ஷன் சமயத்தில் அவர்கள் செய்த ஆர்ப்பாட்டம் எல்லாம், ஜனங்களை மயக்கு வதற்காகத் தான் என்ற முடிவை எதிர்க்க முடியாது. அவர்களின் கல்லதிர்ஷ்டம், பத்திரிகைகள் எல்லாம் இரவு பகலாய் அவர்கள் புகழையே பாடுகின்றன. மற்றவர்கள் எவ்வளவு உண்மையான நோக்கங் கொண்டவர்களாக விருப்பினும், பத்திரிகைகள் அவர்களை ஆதரவு செய்வ தில்லை.

எவ்வித தந்திரங்கள் யார் யார் உபயோகித்தாலும் ஒன்று மாத்திரம் நிச்சயம். ஒத்துழையாமை நெறிக்குத் தற்காலம் அநேகர் விரோத அபிப்பிராயப் படுகின்றனர். மகாத்மா மஹாஜன விருந்தும், அவரிடம் மிக்க வசிகசக்தி யிருந்தும், அவருடைய அஹிம்சையோடு கூடி ஒத்துழையாமைப் பயிர், நமது நாட்டில் வேரூன்ற வில்லை. அவருடைய சிஷ்யர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களை அவருக்குத் துரோகம் செய்து விட்டார்கள். அவருடைய உன்னத குணமும் மனத் தூய்மையும், அவர்கள் மனத்தில் ஒருவித எதிர் மொழியையும் கிளப்ப வில்லை. அவர் சிறைச் சாலை சென்ற நிமிஷமே, அவரையும் அவர் கொள்கைகளையும் அவர்கள் துறந்து விட்டு, ஜனங்களுக்குப் புதுப் போதனைகளைச் செய்து வந்தனர். அவர் கொள்கைகளுக்கு ஒவ்வொரு விஷயத்திலும் மாறுக நடந்து கொண்டும், அவரிடம் மெய் யன்பு பூண் டிருப்பதாக அவர்கள் செப்பியது, இந் நாட்டில் அநேகரை நம்பும்படிச் செய்து விட்டது. இம்மாதிரி மனிதர்களிடம் எனக்கு நம்பிக்கை யில்லை. ஆனால், தேசம் இவ் வழிகளால் நன்மை யடையு மெனில், அவர்கள் நடவடிக்கையை வெறுத்தாலும் கூட, நானும் மகாத்மா காந்தியைப் போல், அவர்கள் முயற்சியை வாழ்

த்துகிறேன் : பொல்லாக் காலத்திலும் வருந்தும் இந்தப் புண்ணிய பூமிக்கு எவ்வித மாவது நன்மையை அனுசரிப் பார்களே யானால், மகாத்மாவா யிருந்தாலும் சரி, பதிதனு யிருந்தாலும் சரி, அவனுக்கு ஈசுவர சகாயமும், கடைசியாக சத்திய பிரதிக்கையும் உண்டாக வேண்டு மென்று நான் பிரார்த்திப்பேன்.

திடப்படு வீரே! *

தன்னூற் காங்கில கவிதன் முன்னுரை,
இந்நூற்கியையப் பெயர்த்தெழுதியதிது.

ஞ்சா மிர்தத்தைப் பரிவுடன் படிக்கும்
மஞ்சர் பெரியவர் மகளிர் எல்லீரும்

தேக ஆரோக்யமும், போக போக்யங்களும்,
நாட்டில் அமைதியும், வீட்டுள் இன்பமும்,
ஓங்கிப் பொலிக! உமக்கொரு ரகசியம்
ஈங்கு நும் செவிக்குள் இயம்புவல் கேண்மோ :
எண்ணிலா மாந்தர்கள், மண்ணிலே வாழ்ந்தவர்,
கண்ணிய குறியெதும் கண்கலா, திதுவரை
இறந்து கழிந்த திறந்தனை மொழிந்திடும்
சரித்திரம் ; மற்றதன் காரணம் தான், இங்கு
ஒருத்தர் போல் யார்க்கும் ஒத்த தாம், ஒன்றே :—
அவர் அழிகாரணம் அவர் திடம் அழிதலே!

* Adapted from Rudyard Kipling's Preface to his *Land and Sea Tales for Scouts and Guides*.

உடல் கூன் குருடு முடம் உற்றவரும்,
அடல் வினைத் திறமை யிலாரும், அவ் வூனச்
சடலமும் மனம்போல் தகவுறச் செய்தலாம்:
உறுமன உறுதியால் ஊனுடல் ஊக்கிச்,
சிறு விளக் கேற்றிய தீப்போல் திகழ்வர்
மிகப்பலர்! அதனுல், ஊனர், மெலியவர்,
சுகக்குறை வுற்றோர், எவர்க்கும் சொல்கிறேன்:
திடப்படு வீரே! திடப்படு வீரே!
முதற்பட உள்ளம் திடப்படு வீரே!
செவ்விய தன்றுய், சிறியதாய், உள்ளம்,
வெவ்விய களிமண், விரிமனல் போன்றதாய்
இருக்கின், உடல்வலி பெருக்குவீ ராயின்,
தருக்கிய உடல், தன் வலி அதற் கூட்டி,
குதிரை வீரன், மிதியினுல், குரலினுல்,
கடிவா ளத்தினுல் கைவசப் படுத்தி,
மிக்கவர் திகைத்திட மிக்குயர் வேலியைத்
தாண்டல் போல், தகுதி யாக்கிடும்! அதனுல்
திடப்படு வீரே! திடப்படு வீரே!
அடித்தபடி உடல் திடப்படு வீரே!
கலிகள், வரன்கள், கவின் நடை நயங்கள்,
இலகுறு கீர்த்தி, செல்வம், எதுவுமே
உலகில் திடமிலாக் குறையை ஒழித்திட
அகில் பல்முறைகளை அணைத்திடு முறையிதே,—
திடப்படு வீரே! திடப்படு வீரே!
உடலும் உள்ளமும் திடப்படு வீரே!
அரிதாய்த் தளர்தரும் ஆற்றல்சால் இருதயம்,
இருதயம் விரும்புவ கருதிடு மூளை,
அளந்து கை கால்களை ஆண்டிடு கண்கள்,
தளர்ந் துடல் களைப்பினும் தளர்வுறு ஆன்மா,—
நவநவ புத்தி நயங்களின் மேலா,
இவைதான் அலுப்பாம் வாழ்க்கைக் கேற்றன;
ஆதலின், செல்வப் புதல்வீர், ஓதுகேன்:
திடப்படு வீரே! திடப்படு வீரே!
எடு புகழ் எண்ணித் திடப்படு வீரே!

என்றும் எவ்விடத்தும் ஒன்றும் ஓர்பாடம்,
மாறுவ கூறிடு மாரு ஒருமெய்,
ஆண்பெண் அனைவரும் மாண்புற ஒருவழி,—
திடப்படு வீரே! திடப்படு வீரே!
உடன் இனும் ஒருமுறை, திடப்படு வீரே!—அமுதகவி.

பூர்வீக

இந்தியக் குடியரசு நாடுகள்

ஸ்ரீ. ஓ. ப. தேசிகன், ஓரத்தி

வெகு காலமாய், மனுஷ்ய அறிவிற் கெட்டிய நாள் முதல், நமது தாய் நாடான இந்தியா வானது, மன்னர்களால் ஆளப்பட்டு வந்திருக்கிற தென்பது யாவரும் அறிந்த விஷயம். பண்டைக் கால ஹிந்து அரசர்களின் கீழ் நம்முடைய உரிமைகளும் அந்தஸ்தும், இப்பூ உலகிலுள்ள மற்றைய நாடுகளை விட எவ்விதத்திலும் குறைந்திருக்க வில்லை என்பதும், மறுக்கக் கூடாதோர் உண்மையேயாம். ஆயினும், இந்தியாவில் முழு ஜன நாயக தத்துவத்தைத் தழுவிய 'குடியரசு' நாடுகள் அதிகம் இருந்தன என்பதை யறிய, பலருக்கும் ஆச்சர்யமாயிருக்கலாம்.

புராதன இந்தியாவிலே குடியரசாட்சியா? இது வெறும் கட்டுரையாக வன்றே இருக்கிறது? இவ்வுலக வாழ்க்கையே நீர் மேற் குமிழி யாதலால், வாழ்வு சாஸ்வதமன் றென்னும் கொள்கையை அவலம்பித்துச், சதா பாரமார்த்திக விஷய ஆராய்ச்சியிலேயே முழுகிக் கிடந்த

இந்தியர் களுக்கு, ராஜீய விவகாரமோ, அல்லது மோக்கங்களோ, இவை யொன்றும் தெரியாது என்று சம்மில் அமேகர் கருதுகிறார்கள். நம்மையாளும் அதிகார வர்க்கத்தாரின் அபிப்பிராயமும், இதை யனுசரித்தே யிருக்கிறது. "பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் ஏற்படும் வரையில், ஜன நாயக ஆட்சியோ, அன்று, பார்லி மெண்ட் முறையை அனுஸரித்த ஆட்சியோ, எப்படி யிருக்கு மென்று இந்தியருக்குத் தெரியாது. அத்தகைய ஆட்சி முறையை அவர்கள் விரும்பியது மில்லை" என்று, சௌலட் கமிட்டி ரிப்போர்ட்டில் கூறப்பட் டிருக்கிறது. அஃதிதப் படி யாயினும் ஆகுக.

ஆனல், தற்காலம் 'ராஜ நீதி, ராஜ்ய தர்மம்' என்று பல்லாயிரக் கணக்கான புத்தகங்கள் வரைந்து, வெள்ளை ஜாதியாரின் மேம்பாட்டை ஓயாது பறை யறைவிக்கும் இம் மேனாட்டு 'மேதாவி' களின் மூதாதையர்கள், இப்பூவுலகில் ஜனித்து, மிருகங்கள்போல் வாழ்க்கையை நடத்தி வருவ தற்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பே, இந் நாட்டில், அரசியல் சாஸ்திரங்க ளென்ன, தர்ம சாஸ்திரங்க ளென்ன, யாவரும் அதிசயிக்கத் தக்க உயர்ந்த ஜன நாயக முறை ஆட்சி என்ன, இவைகள் பரி பூரணமாய்ப் பரவி யிருந்தன வென்பதில் ஐய மில்லை. சரித்திர ஆராய்ச்சிக் குத் தெளிவாய் ஏற்பட்ட வரையில், பண்டைக் கால இந்தி யாவின் சரித்திரத்தில், முக்கியமாய் மூன்று காலங்களில், பரிபூர்ண ஜன நாயக தத்துவத்தை யனுஸரித்த ஆட்சி முறை நடத்தப்பட்டு வந்தது என்று, சந்தேக மில்லாமல் கூற முடியும். எனினும், இரண்டொரு ருசிகரமான செய்திகளை இவ்விடத்தில் குறிப்பிடாம லிருக்க முடிய வில்லை.

வடமொழியில் 'கணம், ஸங்கம்' என்ற இவ்விரு பதங்களும் குடியரசு என்று பொருள் படுவதாக ஆராய்ச் சிக்காரர்கள் முடிவுக்கு வந்திருக்கிறார்கள். மஹாபாரதத் திலும் 'கணம்' என்ற வார்த்தைக்கு 'சுய ஆட்சி உரிமை பெற்று, யாதொரு மன்னரின் ஆளுகைக்கும் உட்படாமல், தங்களது காரியங்களைச் சர்வ சுதந்தரத்துடன் நிர்வகித்து வந்த ஓர் ஸமூகம்' என்று தெளிவாக அர்த்த மாகிறது. உதாரணமாக, சாந்திபர்வம் 107 ஆம் ஸர்க்கம் 23, 24, 30, 32, ஆம் சுலோகங்களில், 'கணங்களை' (குடியரசுகளை)ப் பற்றிக் கூறப்பட் டிருக்கிறது. அதில், கணங்கள், 'அவற்

றின் தன்மை, அவைகளின் பலம், தோஷங்கள் அரசனொருவன் அக்கணங்கள் விஷயமாய் அநுஸரிக்க வேண்டிய முறை, இவை யெல்லாம் விரிவாக எழுதப்பட்டுள்ளது. அவ்வத்தியாயத்தின் தொடக்கத்திலே, யுதிஷ்டிரர் பீமரை நோக்கி, "இது வரையில் ஸமூக அமைப்பு, சட்டம் (தர்மம்), பொருளாதார (வார்த்த) சாஸ்திரம், ராஜநீதி, அரசர்கள், அவர்களது கடமைகள், அமைச்சர்கள், பொக்கிஷம், ஸைந்தியம் ஆகிய இவைகளைப் பற்றி, ஒன்று விடாமல் கூறிக் கொண்டு வந்திருக்கிறீர். இப்பொழுது கணங்களைப் பற்றி ஏதாவது சொல்ல வேண்டும்; அதை யறிய ஆவலுள்ளவனாய் இருக்கிறேன். முக்கியமாய் அவைகளின் தன்மை என்ன? அவைகளின் அபிவிருத்திக்குக் காரணம் யாது? அவற்றின் பலம் எப்படிப் பட்டது? அதன் தன்மை என்ன? தங்களுக்கு வேண்டிய உதவியை அவர்கள் எப்படிச் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள்? எதிரிகளை எவ்வாறு ஜயிக்கிறார்கள்?" என்று கேட்பதற்குப் பீஷ்மர் சொல்லுகிறார்:—"ஒற்றுமை, பொது விஷயங்களில் தளராத ஊக்கம், எக்காரியத்தையும் ஒருமிக்கச் செய்வது, ராஜ்ய விவகாரங்களில் மிகவும் இரகஸ்யமாயும், ஜாக்கிரதையாயும் இருத்தல், தங்கள் தலைவர்களிடத்தில் உறுதியான நம்பிக்கை, இவைகளே அவற்றின் முக்கிய குணம்; அவர்கள் நன்றாய்ப் படித்தவர்கள், சுபாவமாய் அமைதியுள்ளவர்கள், சட்டத்திற்குக் கீழ்ப்படிந்த ஜனங்கள்; தங்களுக்குள் எக்காலத்திலும் ஒருவருக் கொருவர் பரஸ்பரம் உதவி செய்து கொள்ளுவதுமல்லாமல், அயலாருக்கும் உதவி செய்யப் பின்வாங்கமாட்டார்கள். எந்த விடத்தில் அவர்கள் பலசாலிகளாயும், தனவான்களாகவும், சாஸ்திரங்களிலும் போர்த்தொழிலிலும் வல்லவர்களாயும் இருக்கின்றனரோ, அந்த இடத்துக் குடியரசு ஜனங்கள், ஆபத்திலும் கஷ்டங்களிலும் மூழ்கிக் கிடப்போருக்கு ஒத்தாசை புரியாமலிருக்க மாட்டார்கள். அவர்களுடைய ஒற்றுமையையும், அதிசயிக்கத்தக்க பலத்தையும் கண்டு, அன்னிய நாட்டினர் கூட, அவர்களது நட்பை ஆவலுடன் கோருகிறார்கள்" என்றும்; தவிரவும், ஒரு மன்னன் தனக் கண்டையி லுள்ள குடியரசை அழித்து விட விரும்பினால், அவன் அந்நாட்டிற்குள், அந்நாட்டுத் தலைவர்களுக் குள்ளே பொறாமையைப் பூட்டி, ஒற்றுமையைக் குலைத்து, இராஜ்யத்தில் பிளவை உண்டாக்க வேண்டுமென்றும்; அன்றியும், அக்குடி-

யரசின் மந்திப்பு வாய்ந்தவராய் இருக்கும் தலைவர்களுக்குச் சாரணர்கள் மூலமாய் லஞ்சம் கொடுத்து, அவர்கள் ஒழுக்கத்தைக் கெடுத்து, இரகஸ்யங்களையும் அறிந்து கொள்ள வேண்டு மென்றும் யோசனை கூறுகிறார்.

கௌடில்யர், அவரது 'அர்த்த சாஸ்திரத்தில்' ஸங்கங்களைப் பற்றி ஒரு தனி அத்தியாயம் எழுதியிருக்கிறார் (BK XI 160–61 சாமசாஸ்திரியாரின் மொழி பெயர்ப்பு). அதினிடையே சந்திரகுப்த மன்னனின் சாகஸம் வாய்ந்த, தேர்ந்த ராஜதந்திரியான அக் 'குடில' மந்திரி, அந்தக் காலத்திலிருந்த குடியரசுகளைத் தகர்த்து, சின்ன பின்னப் படுத்தி, சந்திரகுப்த மன்னனின் இராஜ்யத்தை விஸ்தார மாக்கும் முறையை விரிவாய்க் கூறியிருப்பினும், முடிவில், ஒரு துணை யரசனுடைய ஸைன்யங்களின் ஒத்தாசையை நாடுவதை விடக் குடியரசுகளின் உதவியைச் சம்பாதித்துக் கொள்வதே சிறந்த தென்றும்; ஆதலால், அம்மன்னன் தன்பால் விரோத பாவம் கொண்டிராத குடியரசு நாடுகளின் நட்பைப் பெற முயற்சிக்க வேண்டு மென்றும் யோசனை கூறுகிறார். தவிரவும், அவருக்குத் தெரிந்திருந்த சுமார் 26 குடியரசு இராஜ்யங்களைப் பற்றியும் அதில் குறிப்பிட்டிருக்கிறார். அவைகளில் முக்கிய மானவை அங்க, மகத, காசி, கோஸல, வ்ரஜ்ஜிய, குரு, பாஞ்சால, அவந்தி, காந்தார, காம்போஜ, லிச்ஹாவி, சாக்கியக் குடியரசுகளே யாகும். அவற்றில் சிலவற்றின் குணங்களையும் கூட ஒருவாறு சொல்லியுள்ளார். உதாரணமாக, சுராஸ்ட்ரம், காம்போஜம் முதலிய குடியரசுகள், பெரும்பாலும் க்ஷத்திரியர்களால் ஆக்கப் பட்ட படியால், அவர்கள் இராணுவத் தொழில் ஜீவனோபாயமாய்க் கைக் கொண்டிருந்தார் களாம். மத்ரக, குரு, லிச்ஹாவி, வ்ராஜ்யக் குடியரசுகளின் ஒவ்வொரு குடிக்கும் 'ராஜன்' என்று பெய ரென்றும் அறிகிறோம். இவைகளில் சில, இதற்கு முன் முடியரசுகளாய் இருந்தன. சில காலத்திற்குப் பின், இன்னும் இவைகளில் சில, குடியரசுப் பதவி யினின்றும் மாறின. அங்க, சேதி, காசி, கோஸல, குரு, பாஞ்சால, காந்தாரக் குடி யரசுகள், கௌடில்யரது காலத்திலிருந்தது போலவே மஹாபாரதத்திலும் குடியரசு நாடுக ளென்று சொல்லப்பட்டிருக்கின்றன. அதே மாதிரியாக (கி. மு. 4-ம் நூற்றாண்டு) விதேக இராஜ்யமானது, பௌத்த காலத்தில் செல்வாக்குள்ள குடியரசாய் இருந்தது.

இனி நாம் சரித்திர ஆராய்ச்சிக்குத் தெளிவாய், தக்க ஆதாரங் களுடன் ஏற்பட் டுள்ள விஷயங்களைக் குறிப்பிடுவோம். முக்கியமாய் மூன்று காலங்களில் இந்தியாவில் ஜனநாயக ஆட்சி ஏற்பட்டிருந்த தாக நாம் ஏற்கனவே தெரிவித் திருக்கிறோம். அவைகளில் கடைசிக் காலத்தி லிருந்து தொடங்குவோம். கிறிஸ்து பிறந்த நான்காவது நூற்றாண்டில், பஞ்சாபிலும் கிழக்கு ராஜபுதனத்திலும், மாளவத்திலும், முழு பூல்வாதின முள்ள அநேகம் குடியரசுகள் இருந்தன. பஞ்சாபின் மத்திய பாகங்களில் மத்ரகர்களும், ஸத்லெஜ் நதியின் இரு கரைகளில் யௌதேயர்களும் ஆட்சி புரிந்து வந்தார்கள். இக் குடியரசுகளின் நாணயங்கள் கண் டெடுக்கப் பட்டதி லிருந்து சரித்திர ஆராய்ச்சி எவ்வளவோ முன்னேற்ற மடைந் திருக்கிறது. முடிபுனைந்த அரசர்களது நாணயங்களைக் காட்டி லும், இந் நாணயங்களே நமக்கு அதிகப் பயனை யளிக்க வல்லன வென்று சொல்லவும் வேண்டுமோ?

இரண்டாவது நூற்றாண்டில் ருத்ரதமனன் (கி. பி. 125-150) என்ற அரசன் அவர்களைத் தோல்வி யுறச் செய்தான்; ஆயினும் அதற்குச் சில நூற்றாண்டு களுக்கு முன் இந்தியாவின் மீது படை யெடுத்து வந்த மஹா அலெக் ஜாந்தர் சக்கர வர்த்தியை எதிர்த்து நிற்பதில் அவர்கள் காட்டிய தைரியமும் ஸாமர்த்தியமும் ஸாமான்ய மான தல்ல. அச்சமயம் யௌதேயர்கள் அந்த மிலேச்ச அரசனை, 60,000 காலாட்களும், 6000 குதிரைகளு மடங்கிய ஸைந்தியத்தினுல் எதிர்த்ததாய்த் தெரிகிறது.

அபிரர்களும், மாளவர்களும் சம்பல் நதிக்கும் பேத்வா நதிக்கு மிடையே யுள்ள பிரதேசத்தில், தங்கள் ராஜ்யங்களை ஏற்படுத்திக் கொண் டிருந்தார்கள். 'இந்திய நெப் போலியன்' என்று சொல்லத் தக்க ஸமுத்திர குப்த மன்னன் (கி. பி 330-375) நாடெங்கும் திக்கு விஜயம் செய்த காலையில், இக்குடி யரசு நாடுக ளெல்லாம் அவனுக்குக் கீழ்ப் படிந்து, கப்பஞ் செலுத்தி, தங்களுடைய உரிமைகளையும் அதிகாரத்தையும் காப்பாற்றி வந்தன. பின்னிட்டு, இரண்டாவது சந்திர குப்தன் காலத்தில், இவை யெல்லாம் தங்களுடைய அதிகாரப் பதவியை இழந்து, அவனது இராஜ்யத் தோடு சேர்த்துக் கொள்ளப் பட்டன.

ஆயினும், ஹிந்துக் குடியரசுகள், கி. மு. நான்காவது நூற்றாண்டிற்கும் ஆறாவது நூற்றாண்டிற்கு மிடையேயுள்ள காலத்தில் தான் விசேஷமாய் இருந்தன வென்று சொல்ல வேண்டும். இக்காலத்தில் தான் ஐரோப்பாவிலும் ஸ்பார்டா, ஏதென்ஸ், தீப்ஸ், ரோம் என்ற இடங்களில் குடியரசாட்சி நடை பெற்று வந்தது.

மௌர்ய பரம்பரையை ஸ்தாபித்த சந்திர குப்த மன்னன் (கி.மு. 302) ஸமஸ்தானத்தில் கிரேக்க தூதராயிருந்தவரும், அந்தக் காலத்தில் இந்தியா முழுவதும் சுற்றிப் பிரயாணம் செய்தவரு மான மேகஸ் தனீஸ் என்பவர், மகத இராஜ்யத்தில், டயோனியஸ் காலம் முதல் சந்திர கோடஸ் (சுந்திர குப்தன்) காலம் வரையில், 6042 வருஷ காலத்திற்குள் 153 அரசர்கள் ஆட்சி புரிந்து வந்திருக்கிறார்க ளென்றும்; இதன் மத்தியில் ஒரு குடியரசு மூன்று முறை ஸ்தாபிக்கப் பட்ட தென்றும் எழுதி யிருக்கிறார். கடைசியில் சில பட்டணங்களில் முடியரசாட்சி நீக்கப் பட்டு, அதற்குப் பதிலாய்க் குடியர சாட்சி ஏற்படுத்தப் பட்ட தென்றும் அவர் தெரிவிக்கிறார். மலை உச்சியில் பல பட்டணங்களைக் கட்டிக் கொண்டு, அரச னில்லாமல் ஸம சுதந்தரத் துடன் வாஸம் செய்து கொண்டிருந்த சில ஜாதி யினரைப் பற்றியும் அவர் எழுதி யுள்ளார். அவைகளி னின்றும், இவ் விரண்டு வித இராஜ்யங்களின் தன்மையும் வேவ்வேறு என்று அவர் கருதுவது, நமக்கு நன்கு விளங்குகிறது. இந்தியாவில் குடியரசைப் பற்றி உரைக்கும் அன்னிய நாட்டுச் செய்திகளில் இதுவே முதன்மையான தாகும்.

சந்திர குப்த மன்னன், ஆப்கானிஸ்தானத்துக் கிரேக்க ராசன் லெலூக்கஸ் என்பவனை ஜயித்து, மௌர்ய ராஜ்யத்தை ஸ்தாபிக்கு முன், அதாவது மேகஸ் தனீஸ் இந்தியாவிற்கு வருவதற்குச் சுமார் இருபது வருஷ காலத்திற்கு முன்னர், மஹா அலெக் ஜாந்தர் சக்கரவர்த்தியின் படையைச் சேர்ந்தவர்கள் இந்தியாவி லிருந்த சமயம் (303), நமது நாட்டில் குடி யரசுகளின் ஆட்சி முறை விசேஷ அளவில் வியாபித் திருந்தது. அக் காலத்தில் மந்திரா லோசனை சபைகளும், கூட்டங்களும், குடியரசுத் தலைவர்களும் இல்லாம லில்லை. கிரேக்கப் போர் வீரர்கள் பாடலி நகரத்தைத் தங்களுடைய தேசத்து ஸ்பார்டாவிற்குச் சமமாய்க் கருதினார்கள். லிந்து நதி டெல்டா

வின் முனையில் அந்த பிரஸித்தமான பட்டனம் இருந்தது. இந்த ஸமூகத்தில் யுத்தத்தின் லைஞி பதித்துவம் வெவ்வேறு வம்சத்தைச் சேர்ந்த இரண்டு மன்னர்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. இராஜ்யத்தையோ ஒரு பெரிய ஸபையார், பரிபூர்ண அதிகாரத்துடன் நிர்வகித்து வந்தார்கள்.

அலெக்ஜாந்தர் காலத்தில் சுய ராஜ்யாதிகாரத்துடனும் ஜனப் பொறுப்பாட்சியுடனும் ஆளப் பட்டு வந்த பற் பல ஜாதிகளுக்குள், 'அராஷ்ட்ரர்கள்' என்பவர்கள் முக்கிய மானவர்கள். அவர்களைத் திருடர்களுக்குச் சமமாய் மஹா பாரதத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆயினும், அவர்கள் சந்திர குப்த மன்னனுக்குப் பக்க பலமாய் நின்று, கிரேக்கர்களுடன் அவன் போர் புரிந்த ஸமயம் பல வழிகளிலும் அவனுக்கு உதவி செய்தார்கள். அவ்வாறு அவர்களுடைய திறமை யான உதவி யில்லாமல், ஸாமான்ய நிலையி லிருந்த சந்திர குப்தன், ஐரோப்பிய மிலேச்சர்களை, இந்த நாட்டி னின்றும் விரட்டி, ஹிந்து குச பர்வதங்கள் வரையில் தன்னுடைய இராஜ்யத்தின் எல்லையைப் பரவச் செய்திருக்க முடியாது.

மஹா பாரதத்தில் காணப்படும் வேறிரண்டு ஜாதியார்களும், கிரேக்கர்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறார்கள். அவர்கள் மாளவர்களும், க்ஷுத்ரகர்களுமாவார்கள். இவர்களில் மாளவர்களைப் பற்றி யுரைக்கும் போது, அர்ரயன், "அவர்கள் சுயேச்சை யுள்ள ஜாதிகள் ஒருவர்" என்று மாத்திரமே கூறி யிருக்கிறார். ஆனால் க்ஷுத்ரகர்களைப் பற்றி யுரைக்குப் போது, "அவர்கள் சுதந்தரத்தினிடத்தினும், ராஜ்யாதிகாரத்தின் மீதும் தாங்க முடியாத விசுவாஸ முள்ளவர்கள்" என்று வியக்கிறார். மொத்தத்தில், இவ்விரு ஜாதியினரும் மிகுந்த பராக்கிரம சாலிகள்; ஆண்மைத் தனம் வாய்ந்தவர்; போர்க் குணம் மேலிட்டவர்; அஞ்சா நெஞ்சம் வாய்ந்த சுத்த வீரர். இவ்விருவரும் அலெக்ஜாந்தரை எதிர்த்து நின்று, அவனைப் படாத பாடும் படுத்தி விட்டனர். மாளவர்களும் க்ஷுத்ரகர்களும் பரம் பரை விரோதிகள். ஆயினும், அவர்கள், தங்கள் விரோதங்களை யெல்லாம் மூட்டை கட்டித் தூர வைத்து விட்டு, அச்சமயம் நாட்டின் சுயேச்சைக்கே ஆபத்தை யுண்டாக்கிய மிலேச்ச அரசனை எதிர்க்கும் பொருட்டுத் தங்களுக்

குள் உடம்பாடு செய்து கொண்டு, ஒன்று கூடி விட்டனர். அவ் வுடன்பாட்டின் படி, அவ்விரு நாட்டி லிருந்தும், 10,000 கன்னிகைகளை ஒருவருக் கொருவர் கொடுத்து மணம் புரிந்து கொண்டார்களாம். ஒன்று கூடிய அவ் விரு நாட்டின் ஸைந்நியத்தின் மொத்தத் தொகை 90,000 காலாட்கள், 10,000 குதிரைகள், 900 ரதங்கள் என்று தெரிகிறது.

டயோடோரஸ் (Diodorus) என்பவர் எழுதி வைத் திருப்பதிலிருந்து ஸாபர்கே (Sabarcae) என்றொரு பரா க்கிரமம் மிகுந்த ஜாதியார் இருந்த தாகவும், அவர்க ளுடைய ஆட்சி முறை அரசர்களுக் குட்பட்ட தல்ல வென்றும் அறிகிறோம். அவர்களுக் குள்ளே அரசன் கிடையா தாயினும், யுத்தங்களை மூன்று லக்ஷ பதிகள் கூடத்தி வந்தார்கள். அவர்கள் ஸைந்நியத்தில் 600,000 காலாட்களும், 6000 குதிரைகளும், 5000 ரதங்களு மிருந்தன.

அலெக் ஜாந்தரை முதல் முதலில் யுத்தத்தில் சந் தித்த வேறிரண்டு ஜாதியார்களைப் பற்றி நாம் சொல்லாம லிருக்கக் கூட வில்லை. அவர்கள் அகலஸாய், நிசாயினர் கள் என்பவர்கள். அவர்களில் அகலஸாய் (Agalassoi) என்பவர்கள் அலெக் ஜாந்தர் சக்ரவர்த்தியை மிகவும் உக்கிரமாய் எதிர்த்துப் போர் புரிந்தார் களாயினும், சத் துரு விடம் தோல்வி யடைய நேர்ந்தது. தைரியமும் துணிச்சலும் வாய்ந்த அவ் வுத்தம தேசாபி மானிகள், மான மழிந்து அவமரியாதை யோடு உயிர் வாழ்வதைக் காட்டிலும் பிராணனை விட்டு விடுவதே மேலான தெனக் கருதி விட்டனர். எனவே, பட்டணம் மொத்தத் திற்கும் தீ வைத்து விட்டு, அப் பெருந் தீயினிடையே தங்கள் மனைவி மக்கள் குழந்தை களுடன் குதித்துப் பிராணனை விட்டு விட்டார்கள்.

நிசாயினர்கள் ஸ்வாதீன முள்ள ஜனங்கள்; அவர்க ளது இராஜ்யத்தைச் செல்வ வந்தர்களும், அதி மேதாவி களு மான மூன்னூறு பெயர்க ளடங்கிய ஒரு பெரிய ஸபை யார் பரி பாலனம் செய்து வந்தார்கள்; இவர்களுக் கெல் லாம் தலைமையாய் ஒரு ஜனதி பதியு மிருந்தான்.

ஆயினும், இந்தியாவின் மிகப் பெரிய குடியரசு நாடுக ளெல்லாம், வட இந்தியாவில் பிஹார் மகாணத்தில் தான் இருந்தன. கி. மு. ஐந்தாவது நூற்றாண்டிற்கும்

ஆறுவது நூற்றாண்டிற்கு மிடையே அவைகளின் காலம் என்றும் சொல்லப் படுகிறது. அவைகளில் ஏழு இராஜ்யங்களைப் பற்றி மட்டும் சரித்திர வாயிலாகச் சரியான தகவல்கள் நமக்குக் கிடைக்க வில்லை. இந்த இராஜ்யங்களில் மிகப் பிரசித்த மானவர்கள் கபில வாஸ்து நகரத்து சாக்கியர்களும், மிதிலா நாட்டு விதேகர்களும், வைசாலி நகரத்து லிச் ஹாவிகளு மாவார்கள். கடைசியில் சொல்லப் பட்ட இரண்டு ஜாதியினரும், ஒன்று சேர்க்கப் பட்டு வஜ்ஜியர்கள் என்ற பெயருடன் விளங்கினர்கள்.

மனுஷ்ய ஜாதியின் சரித்திரத்தில்—பண்டைக் கால உலகத்தின் சரித்திரத்தில்—எந்தக் குடி யரசும் புகழிலும் செல் வாக்கிலும் சாக்கியக் குடி யரசுக்கு இணையாகாது. கடந்த இரண்டாயிரத்து ஐந்நூறு வருஷங்களாய் எந்த ஸ்தலம் பௌத்தர்களின் காசி க்ஷேத்திர மாகவும், ஜப்பானியர்களின் மெக்கா வாகவும், சீன தேசத்தாரின் சுவர்க்க மாகவும் (Tienchu) கருதப் பட்டு வந்திருக் கிறதோ, அத்தகைய பெருமை வாய்ந்த புண்ணிய பூமி, அவர்களுடைய ஆளுகைக்குட்பட்டிருந்தது. சாக்கிய புத்தர் (புத்த பகவான்) சாக்கியக் குடி யரசின் குடிகளில் ஒருவர். அவரது தகப்பனாரும் மாதாவாரும் அந் நாட்டுத் தலைவர்களாய் இருந் திருக்கிறார்கள். புத்தார்த்தர் ராஜ்யாதிகாரப் பதவியைத் துறந்தார் என்று சாதாரண மாய்ச் சொல்லப் படுவது பிசகு. ஏனெனில், அவர் இளவரசரல்லர்; அக் குடி யரசு நாட்டின் தலைவருடைய புத்திரரே யாவார்.

சாக்கியர்களின் மொத்த ஜனத் தொகை பத்து லக்ஷம் பேராகும். அவர்கள் இராஜ்யம் கிழக்கு மேற்கில் ஐம்பது மைலும், ஹிமய மலையின் அடி வாரத்திலிருந்து தெற்கே முப்பது அல்லது நாற்பது மைல்கள் வரையும் வியாபித் திருந்தது. இந் நாட்டின் ஸகல விதமான நீதி நிர்வாக விஷயங்கள் யாவும், கபில வாஸ்துவில் பகிரங்க மான தொரு பொதுக் கூட்டத்திலே நடத்தப் பட்டு வந்தன. அம் மஹா நாடுகளைப் பெரும் பாலும் கபில வாஸ்துவி லுள்ள சபா மண்டபத்தில் நடத்தி வந்தார்கள். அக் கூட்டங்களில் முதியோரைப் போலவே வயதில் மிகச் சிறியோரும் ஆஜரா யிருந்து, இராஜ்ய பரிபாலன விஷயத்தில் அக்கரை யெடுத்துக் கொண்டு உழைத்து வந்தார்கள். ஒரு ஸமயம், அத் தகைய கூட்ட

மொன்றில், பிர சன்ன தீபன் என்ற அரச னுடைய பிரே சேபணை விவாதத்திற்கு வந்தது. கோஸல நாட்டு ராஜனை அம் மன்னவன், சாக்கிய நாட்டின ருடன் விவாக ஸம்மந் தம் செய்து கொள்ள விரும்பி, தனது அபிப் பிராயத்தை அக் குடி யரசின் சபையா ருடைய அங்கீ காரத்திற்கு அனுப்பினன். நீண்ட நேரம் விவாதித்த பின், அச் சபையார், "முடி யரசு இராஜ்ய மொன்றுடன் விவாக ஸம்பந்தம் வைத்துக் கொள்வது தங்கள் கௌரவத் திற்கு ஏற்ற தல்ல" என்று தீர்மானித்து, அப்பிரே சேபணையை நிராகரித்து விட்டார்கள். அதற் கடுத்த நூற்ருண்டில், கௌடில்யரது காலத்தில், கோஸல இராஜ் யமே குடி யரசு நாடாக மாறி விட்டது. இதிலிருந்து, முடியர சாட்சியி னிடம் சாக்கியர்கள் கொண்டிருந்த மனப் பான்மையும், உதா சீனமுமே அந்த நாட்டைக் குடி யரசாக மாற்றியதற்குக் காரணங்களி லொன்ருக இருக்கலா மென நாம் ஊகிக்க லாகும்.

சாக்கிய ஜனங்கள் தங்களுக்குள் ஒருவனைத் தலைவ னாகத் தெரிந் தெடுப்பது வழக்கம். அவன் பொதுக் கூட்டங்களில் அக்கிராஸனம் வகித்து, ராஜ்ய விவகாரங் களை ஒழுங்காக நிர்வகித்து வந்தான். குடியரசுத் தலைவ னை ஜனதிபதிக்கு ராஜா என்று பெயர். புத்தரின் தகப்பனா ரான சுத்தோதனரும், அவரது ஸ்கோதரனும் அந்நாட்டுத் தலைவர்களாய் இருந்திருக் கிறார்கள்.

வஜ்ஜியர்களின் குடியரசைத் தற்காலத்திய (U. S. A.) அமெரிக்க ஐக்கிய மாகாணத்திற்கு ஒப்பிடலாம். அது தனித் தனியாய் முழு ஸ்வாதீனம் படைத் திருந்த எட்டு வெவ்வேறு ஜாதியாரின் சேர்க்கையால் உண்டான குடி யரசுத் தொகுதி. இந்த ஐக்கியக் குடியரசிற்கு வேசாலி நகரமே முக்கிய பட்டணம். அக்குடியரசில் விதேகர்களும், லிச்ஹாவிகளுமே முக்கிய மானவர்கள் என்று சொல்ல வேண்டும். ஒரு காலத்தில் விதேகர்கள் பொன்முடி தரித்த பூபாலர்களின் ஆட்சிக் குட்பட் டிருந்தனர். அது காலே அவர்களது இராஜ்யம் 2300 மைல் விஸ்தீர ணமிருந்தது. லிச்ஹாவிகள் ராஜ்யாதிகாரத்தை நடத்த மூன்று தலைவர்களைத் தெரிந் தெடுத்து வந்தனர். "அந்தக் குடியரசில் 5000 பெயரடங்கிய சபை யொன் றிருந்தது. அச்சபையின் ஒவ்வொரு அங்கத்தினனும் ஒரு யானை வீதம் நாட்டிற்குக் கொடுத் துதவினன். இவர்களுக் கெல்

லாம் தலைமையாய் ஒரு உபராஜா அல்லது உபஸ்தானதிபதியும், அவனுடைய அதிகாரத்துக்குட்பட்டு லௌகிபதியொருவனும் இருந்தார்கள்" என்று (Lassen) லாஸ்ஸென் என்பவர் எழுதியிருக்கிறார்.

கௌதம புத்தருக்கு ஜன நாயக ஆட்சி முறையில் அதிக நம்பிக்கையிருந்தது. அவர் காலத்திலிருந்த குடியரசுகளிடத்தே அவர் அளவற்ற மதிப்பும் விசுவாஸமும் வைத்திருந்தார். குடும்ப இன்பங்களைத் துறந்த பின்னும், அவர், ஜன நாயக முறையை ஆதரித்து, அவ்விஷயமாய் ஓயாமல் பிரசாரம் செய்து வந்தார். அவருடைய பிரஸங்கங்களில், ஜாரிகள் மூலமாய் விசாரணை, ராஜாங்க நிர்மாணம், பெரும் பான்மையோரின் அபிப்பிராயத்தைத் தழுதை, அந்தஸ்திற் கேற்ப படிப் படியாய் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் ஒழுங்காய் நிர்வாகித்து வந்தார்கள். அவர்கள் முறையே நியாயாதிபதிகள், நியாயவாதிகள், (Lawyers), தர்ம சாஸ்திரிகள், ஒன்றுக்கப்பட்ட வஜ்ஜியக் குடியரசின் எட்டு ஸமூகத்தாரின் பிரதிநிதிக ளடங்கிய சபை, உபஸ்தானதிபதி, ராஜா அல்லது ஜனதிபதி என்பவர்களே யாவார்கள். மேற்கூறிய அதிகாரி ஒவ்வொருவனுக்கும் குற்றவாளியை விடுதலை செய்யும் உரிமையுண்டு. ஆனல் அவனைக் குற்றவாளி யெனக் கருதும் பக்ஷத்தில், அவர்கள் பிரஸ்தாப வியாஜ்யத்தைத் தனக்கடுத்த மேலதிகாரியின் பரிசீலனைக்கும் அபிப்பிராயத்திற்கும் அனுப்பிவிட வேண்டும். குடியரசின் ஜனதிபதியே நாட்டின் முடிவான நியாயாதிபதி யாவான். சட்டப்படி எவ்விதமான தண்டனையும் விதிக்க அவனுக்கு அதிகாரம் உண்டு.

இக் குடியரசுகளின் கிராமாந்தர விவகாரங்க ளனைத்தையும் ஆண்பிள்ளைகள் மட்டுமே கவனித்து வந்தார்களென்ப தில்லை. பொது நன்மைக்கு அத்தியா வசியமான காரியங்களை ஊக்கத் துடன் செய்வதில் ஸ்திரீகளும் அதிகப் பெருமை பாராட்டி வந்தார்கள். தோப்புக்கள், புஷ்பத் தோட்டங்கள் உண்டாக்கி விருத்தி செய்வது; சபா மண்டபங்கள், சத்திரங்கள், சாவடிகள் கட்டுவது; ஏரி, குளங்கள் வெட்டுதல்; ஒரு கிராமத்திலிருந்து வேறொரு கிராமத்திற்குப் புதிய பாதைகள் போட்டு, அவைகளை யடிக்கடி செப்ப னிடுவது; இவை போன்ற காரியங்களைப் புருஷர்களைப் போலவே ஸ்திரீகளும்

ஏற்றுக் கொண்டு, பலவழிகளிலும் உதவிபுரிந்து வந்தார்கள். பண்டைக் காலநாகரிகத்திலே, இந்தியா மகோன்னத பதவியை வகித்திருந்தது என்பதை மறுப்பார் ஒருவருமில்லை. மனுஷ்ய ஜாதியின் முன்னேற்றத்திற்கும், இப்பூமண்டலத்தின் நாகரிகத்தை விருத்தி செய்வதற்கும், புராதன இந்தியா—அதிலும் குடியரசு இந்தியா—உலகத்திற்கு அளித்த நன் கொடையை, மற்ற நாடுகளின் சரித்திரத்துடனும், நாகரீக அபிவிருத்தியுடனும் ஒப்பிட்டுப் பார்த்தால், நமது தாய் நாட்டின் அதிசயிக்கத்தக்க சாமர்த்தியம் நமக்கு நன்கு விளங்கும். (அடுத்த பக்கம் பார்க்க)

194-ம் பக்கத்தில் 12-வது வரிக்கும் 13-வது வரிக்கும் இடையே பின் வருவதைச் சேர்த்துப் படிக்கவும்:—

விய ஆட்சி, பொதுக் கூட்டங்களின் அவசியம், முதலிய வைகளைப் போலவே, பரகஷ மார்க்கம், அஹிம்சா தர்மம், ஜனங்களின் தர்க்க விவர்த்தி இவைகளுக்கு உபாயங்களை இடை விடாமல் கூறிக் கொண்டு வந்தார். வஜ்ஜியக் குடியரசினிடம் அவர் விசேஷ அக்கரை காட்டி வந்தார். அதன் மந்திரா லோசனை சபையாருக்கு, ராஜீய, பாரமார்த்திக விஷயங்கள் யாவற்றிற்கும் அவரே குரு. பிரஸித்தமான அக்குடியரசின் அந்திய காலத்தில் மகத ராஜ்யத்து அரசனை அஜாதசத்துரு என்பவர், "சக்தியும், ஸாமர்த்தியமும் வாய்ந்திருந்த போதிலும்," தான் அவர்களைத் துவம்சம் செய்து விடுவதாய்ச் சபதம் செய்ததினால், அவர்கள் மனங் கலங்கி யிருந்த போதும் கூட, புத்தருக்கு முடியரசினிடத்திலுள்ள வெறுப்பும், ஜன நாயக ஆட்சியினிடம் இருந்த விசுவாஸமுமே, அவர்களுக்கு ஓரளவு உற்சாகத்தையும் தைரியத்தையும் ஊட்டி, அந்த அரசனை எதிர்த்து நிற்கச் செய்தது. 1919ஹு ஜூலை மாதத்திய 'மாடர்ன்ரிவியூ' பத்திரிகையில், ஹேமசந்திரராய் சௌதுரி எழுதிய 'வைசாலி நகரத்து லிச்ஹாவியர்' என்ற வியாசத்தில் வஜ்ஜியக் குடியரசுத் தொகுதியின் நீதி விவகாரங்கள் நடத்தப்பட்ட காட்சியை வர்ணித்திருக்கிறார். அதைப் படிப்போருக்கு எத்தகைய மும்முறமான ஜன நாயக தத்துவம் அக்காலத்தில் சீவரூன்றி யிருந்தது என்பது புலப்படும். கிரிமினல் (குற்ற) சட்டத்

வனெனில் இக்காலத்தில் (கி. மு. 600-322) தான் நமது தேசம் சகல கலைகளிலும், ஞானத்திலும், கல்வியிலும், செல்வத்திலும், புகழிலும் மேன்மையுற்று, இப் பூலோகத்தின் ஆசார்ய ஸ்தானத்தை வகித்திருந்தது. எத்துறையில் நோக்கினலும் அக்காலத்தில் நமது நாட்டார் அற்புதத் திறமை வாய்ந்திருந்தனர். வேதாந்த, வைசேஷிக, சார்வாக, லோகாயத, பௌத்த மதங்களின் பெருமைக ளென்ன; இவ்வளவும் அனுஷ்டானத்திலிருக்கும் மநு, யாக்ஞ வல்கிய, தர்ம சாஸ்திரங்க ளென்ன; சுக்கிர நீதி சாஸ்திர மென்ன; மஹா நிபுணரான கௌடில்ய ரது அர்த்த சாஸ்திர மென்ன; சிறு குழந்தை முதல் ஒவ்வொரு ஹிந்து வுக்கும், ஏன், உலக முழுவதுமே, தெரிந்திருக்கும். ஒப்புயர் வற்ற மஹா பாரத ராமாயண காவ்யங்க ளென்ன; இவைகளைத் தவிர, வைத்திய சாஸ்திரத்தில்—உலகம் முழுவதும் இந்திய ஆயுர் வேத முறையே பல வித மாறு பாடுகளுடன் இப்பொழுது பரவியிருக்கிறது என்பதை நினைப்பில் வைக்க வேண்டும்—சஸ்திர முறைகள், மனித தேகக் கூறு பாடு சாஸ்திரம் முதலியவைகளில் சரக முனிவரின் நிபுணத்துவமும், அவரது ஒளஷத முறைகளும்; பாஷாந்தர விற்பத்தியில் தன்னிகரற்ற பாணினியின் சூத்திரங்களும்; பதஞ்சலி, நாகார்ஜுன முனிவர்களின் ரஸாயன சாஸ்திர ஆராய்ச்சிகளும்; பரத நாட்டியம், நாடகங்களும்; பகவத் கீதையின் முக்கிய சாராம்ச மென்று சொல்லத் தகும் நிஷ்காம்ய கர்மத்தின் ஆரம்பங்களும், இவை யெல்லா வற்றையும் விட, புத்த பகவானின் அஹிம்ஸா தர்மமும், உலக சகோதரத்துவமும், பரத கண்டத்தில் இக் காலத்திலே தோன்றி, வேரூன்றி யிருந்தன வன்றோ? இத்தகைய என்றுமழியாக் கீர்த்தியை இந்தியாவிற்குத் தேடிக் கொடுக்கும் பாக்கியத்தை, முடியரசுகள் மட்டுமேயன்றிக் குடியரசுகளும் பெற்றிருந்தன. கால சக்கிரம் இடைவிடாது சுழன்று கொண்டே வருகிறது. இப்போது நமது நாட்டின் பெருமையும் புகழும் எங்கே? மூவாயிரம் வருடங்களுக்கு முன்னிருந்த நமது கௌரவமும் அந்தஸ்தும் இப்பொழுது நமக் கிருக்கிறதா? சந்தேக மின்றி நாம் மிகவும் சீர் கேடான நிலைமையில் இப்பொழுது இருக்கிறோ மென்பதை மறுப்பவர் யாவர்?

XXXII 197

ஜப்பானும் ஜப்பானியரும்

Rev. F. கிங்ஸ்பேரி, B.A., சென்னை

(158-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஜப்பானியரின் தற்கால நிலைமை.

1. செல்வம்—இந்தியாவிலே மகா ராஜாக்கள், கோடீசுவரர், இலக்ஷாதி பதிகள், பலர் உண்டு. "அஷ்ட தரித்திரம்" பிடித்த கோவணாண்டிகளுக்கும் கணக்கில்லை. ஜப்பானிலோ இப்படி யில்லை; ஒரு பக்கத்திலே செல்வம் குவிந் திருப்பதையும், மறு பக்கத்திலே வறுமை வாட்டு வதையும், ஜப்பானிலே பார்க்க முடியாது. இந்தியா வி லுள்ள கோடீசுவரர்களு மங்கே யில்லை; இங்கே யுள்ள பிச்சைக் காரரு மங்கே யில்லை. எவனுக்கும் கொஞ்சம் சொத்துண்டு; சொத்தே யில்லாதவன் எவனு மில்லை. பெருத்த ஐசுவரிய வான்கள் அங்கே யில்லை. தேசத் திலே யுள்ள பொருள் பலருக் குள்ளும் ஏறக் குறையப் பரவி யிருக்கிறது.

2. கல்வி—இப் போதுள்ள சக்கரவர்த்தியா ரது தகப்பனார், தன் காலத்திலே ஒரு சமயம் சொன்ன தாவது:—"என் தேசத்திலே வாசிக்கத் தெரியாத ஒரு கிராமமும், கிராமத்திலே வாசிக்கத் தெரியாத ஒரு குடும்பமும், குடும்பத்திலே வாசிக்கத் தெரியாத ஒரு பிள்ளையும் இருக்கக் கூடாது."

சக்கர வர்த்தியின் சித்தமே தங்கள் பாக்கியம் என்று நினைக்கும் ஜப்பானியர், உடனே கிராமங்கள் தோறும் பள்ளிக் கூடம் ஸ்தாபித்து, ஆறு வயது பூர்த்தி செய்த சிறுவர் சிறுமியர் எவரும் பள்ளிக் கூடத்துக்கு எட்டு வருஷம் செல்ல வேண்டு மென்று கட்டாயக் கல்வி ஏற் படுத்தினர். படிப் பெல்லாம் ஜப்பானிய பாஷையி லேயே. இப் பள்ளிக் கூடங்களுக்கு மேல், இரண்டாந் தரக் கல்வி (Secondary Education) கற்பிக்கும் பள்ளிக் கூடங்கள் ஒவ்வொரு பட்டணத்திலு முண்டு. இவை களுக்கு மேல் உயர் தரக் கல்லூரிகள் உண்டு. சர்வ

காலஞ் சென்ற மிக்காதோ

கலா சாலைகள், நான் சென்று பார்த்த போது, இரண்டு இருந்தன. இப் பள்ளிக் கூடங்களிலும், கலலூரி களிலும், சர்வ கலா சாலைகளிலும், எவ் வகைப் படிப்பும் ஜப்பானிய பாஷையிலேயே படிப்பிக்கப் படுகின்றது. ஆங்கிலம், ஜெர்மன், பிரஞ்சு முதலிய பாஷைகளை, பாஷைக் காகப் படிப்ப தன்றி, சாஸ்திரங்களைக் கற்பதற் காகப் படிப்ப தில்லை. மேற் கூறிய பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள், வித்தி யாலயங்கள் தவிர, ஒவ்வொரு பட்டணத்திலும் கைத் தொழில், அனுவல், வியாபாரம், இவை படிப்பிக்கும் பள்ளிக் கூடங்களுக்குக் கணக் கில்லை. தற்சாலம், ஐரோப்பாவிலே, அமெரிக்காவிலே என்னென்ன நாகரிக யந்திரங்க ளுண்டோ, அவை எல்லாம் ஜப்பானிலும் காணலாம். நாகரிகத்திலே ஜப்பான் மேற் கத்து நாடுகளில் ஒன்றுக் காவது கீழ்ப் பட்ட தல்ல.

ஜின் ரிக்ஷா வண்டி யிழுக்கும் கூலிக் காரரும், கரு வாடு விற்கும் சிறுவிகளும், புல் லிற்கும் பெண் பிள்ளை களும், தின சரிப் பத்திரிகைகளை விலை கொடுத்து வாங்கி வாசிப்பார்க ளானால், வேறென்ன சொல்ல வேண்டும்?

3. பெண்கள் நிலைமை—எழுபது என்பது வருஷங் களுக்கு முன்னே, ஜப்பானியர் பெண்களைக் கேவலமாக எண்ணினார்கள். இப்பொழுதோ அவ்வெண்ணம் பெரும் பாலும் போய் விட்டது. சிறுவரைப் போலவே சிறுமி யரும் பள்ளிக் கூடங்களுக்குப் போவது கட்டாய மாகை யால், இவ் விஷயத்திலே ஆண் பெண் என்ற வித்தியாசம் இல்லை. பெண்களை அந்தப் புரத்தில் அடைத்து வைக் கும் வழக்கம் இல்லை.

> "சிறை காக்கும் காப்பெவன் செய்யும்? மகளிர் நிறை காக்கும் காப்பே தலை!"

என்று திருவள்ளுவர் கூறினர். ஜப்பானிலே திரு வள்ளுவர் பிறவா விட்டாலும், அவர் வாக்குக் கிணங்க நடக்கிறார்கள். ஜப்பானிலே தன் மார்க்க ஸ்திரீகள் (வேசையர்) பலர் உண்டல்லவோ என்று, என் உடனிந் திய சிநேகிதர் என்னைப் பல முறை கேட்ட துண்டு. நான் உண்மையைச் சொல்லக் கடமை பட் டிருக்கிறே னதை யால், தக்கத் தோடும் வெட்கத் தோடும், ஜப்பானிலே கூட வேசையர் உண்டு என்று சொல்கிறேன். ஆனால் அங்கே அவர்களுக்குத் தேவ தாசிகள் என்ற பெயரில்லை. கோயிற் பூசைக்கும் வேசைகளுக்கும் ஜப்பானிலே சம்

பந்த மில்லே. தென் இந்தியாவிலே மட்டும் திருக் கோயில்களிலே பன்னீராயிரம் தேவதாசிகள் உண்டாமே?

விவாகம்—ஜப்பானிய ஸ்திரீகள் சாதாரணமாக இருபது வயது பூர்த்தி செய்த பின்பு தான் விவாகஞ் செய்து கொள்கிறார்கள். சில வேளைகளில் 18 அல்லது 17 வயதிலும் செய்வ துண்டு. அதற்குக் கீழே பெண்கள் விவாகம் செய்வ தில்லே. இதை நான் எழுதுகையில், உத்தராயணத்திலே, வசந்த ருதுவிலே, எத்தனே சிறுமி கள் சென்னப் பட்டணத்திலே விவாகஞ் செய்யப் பட்டு, மோட்டார் வண்டிகளிலே ஊர் கோலம் செல்கிறார்கள்! அவர்கள் தகப்பன்மார் சிலர் B.A. B.L. பரீக்ஷை கொடுத்தவர்களே யன்றே? ஜப்பானிலே விவாகஞ் செய்த பெண், தன் கணவனே இழந்தால், அவளுக்குப் பிரிய மானால், அவள் திரும்பவும் கலியாணஞ் செய்து கொள்ளாமல் அவளேத் தடுப்பார் யாரு மில்லே. இந்தியாவிலே, இப்போது, பதினேந்து வயதுக் குட்பட்ட விதவைகள் 15,20,000 பேராமே! பத்து வயதுக் குட்பட்ட விதவைகள் 2,85,000 பேராமே!! ஐந்து வயதுக் குட்பட்ட விதவைகள் இருபத் தேழாயிரவ ராமே!!!

4. ஜாதி வித்தியாசம் ஜப்பானிலே யுண்டா?—மேலே நான் எழுதியது போல, எழுபது வருஷங்களுக்கு முன்னே ஜப்பானியருக் குள்ளே பல ஜாதிகள் இருந்தன. இன்றைக்கு ஐம்பது அறுபது வருஷத்துக்கு முன்னே, மிக்காதோ, ஒரு நாள் தம் பிரஜைகளேப் பார்த்து, "ஜாதி வித்தியாசம் இருப்பது நமது நாடு முன்னேறு வதற்குப் பெருந் தடை" யென்றே ராம். அடுத்த நாள் ஜப்பானிலே ஜாதி வித்தியாசம் இல்லே யாம். சம்பு வீர் களா? இது மெய், மெய், முழுதும் மெய்! நான் இதை எழுதுகையில், வைக்கத் தப்பனார் திருக்கோயிலுக் கருகே யுள்ள வீதியில், ஈழவர் கதி எப்படியோ என்று கருதுகிறேன். (நானும் ஈழவன் தான்; 'ஈழம்' என் பது இலங்கைக்குப் பெய ராகையாலே, இலங்கையி லிருந்து வந்து திருவாழ் கோட்டிற் குடி யேறினவரே ஈழவர் எனப் பட்டார்) திருச்சிராப் பள்ளியிலே, என் உடன் கிறிஸ்துவர்கள். "மேல் சாதி" "கீழ் சாதி" என்று சண்டை யிட்டுக் கொண்டு, திருக் கோயிலிலே, குத்திக் கொண்டும் வெட்டிக் கொண்டும் சாகிறார்கள். ஐயா, பத்திரி காசிரியரே, ஜப்பானேப் பற்றி எழுதச்

சொன்னீர்கள்; நானும் சம்மதித்து எழுதத் துவங்கினேன். என் எண்ணமெல்லாம் ஜப்பானிலும், என் உள்ளமெல்லாம் இந்தியாவிலும் இருக்கின்றன. என்ன செய்வேன்! என்ன செய்வேன்!!

5. மத விஷயத்தில் ஜப்பானியர் தாராள சிந்தை—ஜப்பானியருக்குள்ளே, ஷிந்தோ மதம், பௌத்த மதம், கன்பூசியம் என்னும் பழைய மதங்களோடே, தற்காலத்தில் கிறிஸ்து மதமும் பெருகி வருகிறது. மத விஷயத்தில் ஜனங்களுக்குள்ளே யாதொரு கட்டுப் பாடும் இல்லை. எவன் எவன் எவள் எவள் எந்தெந்த மதத்தை அநுஷ்டிக்க இஷ்டமோ, அவன் அவன் அவள் அவள் அந்தந்த மதத்தை அநுஷ்டிக்கலாம். மத அநுஷ்டானத்தைக் குறித்தாவது, அபிப்பிராயங்களைக் குறித்தாவது, யாதொரு கஷ்டமும் யாருக்கு மில்லை. ஜப்பானியரைப் பிரிக்க மத வித்தியாசங்களுக்குச் சக்தியில்லை. இந்தியாவிலோ, "வடகலை" யாரும் "தென்கலை" யாரும் வருஷந்தோறும் காஞ்சி புரத்தில் நாயும் பூனையும் போலச் சிறிச் சினப்பதை நிறுத்த, உடையவரே (ஸ்ரீ ராமானுஜரே) திரும்பவும் அவதரிக்க மாட்டாரா? இவர்கள் பாடே இப்படியிருந்தால், முகம்மதியருக்கும் ஹிந்துக்களுக்கும் ஐக்கியம் எப்போது உண்டாகுமோ! ஏழை நெஞ்சே, மகாத்மா காந்தி இருக்கிறார். அவரால் ஆகாதது முண்டோ?

கௌதம புத்தர்



கோயோடோகாவில் ஒரு மதகோபுரத்தின் மீது

"ஐக்கியத்தான் ஆற்றற் கல்லிசும்பு னோர் கோமான்
இக்கிரனே சாலுங் கரி."

6. பரஸ்பர மரியாதை—வலியற்றோர் வலியுள்ளாருக்கு எங்கும் மரியாதை செய்வார், காரணம் பயம். சமவலியுள்ளார் ஒருவருக்கொருவர் மரியாதை செய்வார்,

XXXVI

4 ஒரு ஷிந்தோ மத போதகர்

ஒருவருடைய உதவி ஒருவருக்குத் தேவையா யிருப்பதி னாலே. வலி யுள்ளார், தம்மிற் குறைந்தவர்களை மதிக்கும் மதிப்பே மதிப்பு. ஜப்பானிலே, உயர்ந்தவர்களைத் தாழ்ந் தவர் மதிப்பார், சம நிலை யுள்ளார் ஒருவரை யொருவர் மதிப்பார், உயர்ந்தவர்கள் தம்மில் தாழ்ந்தவர்களையும் மதிப்பார்; காரணம், மெய் மானுஷீகம் உடையவ ராயிருப் பதே. ஐரோப்பிய ஜனங்களுக் குள்ளே பிராஞ்சியரே மிக மரியாதை யுடையவர்க ளெனப் பெயர் பெற்றவர்கள். அவர்களைப் பார்க்கிலும் ஜப்பானியர் மரியாதையிற் பேர் போனவர்கள் என்று, பிராஞ்சு தேசத்திலே சிறிது காலம் வசித்துப் பின்பு ஜப்பானுக்கு வந்த ஐரோப்பிய ரொருவர், எனக்கு ஜப்பானிலே சொன்னார். நான் பிராஞ்சியர் சிலரை அறிவே னாயினும், பிராஞ்சிய ஜனங்களைக் குறித்துப் பேச எனக்குத் தகுதி யில்லை. ஜப்பானியரையோ நான் அறி வேன். அவர்களை விட மரியாதையாய் நடந்து கொள்ளும் வேறொரு தேசத்தாரை நான் அறியேன். கடைக்குப் போனாலும், செயில்வே ஸ்தலத்துக்குப் போனாலும், நாடக சாலைக்குப் போனாலும், எங்கே போனாலும், அவர்கள் பாராட்டும் மரியாதை ஒருநாளும் மறக்கத் தக்க தல்ல.

7. மெய்ச் சுயா தீனம்—இவ்வளவு மரியாதை பாரா ட்டினாலும், தங்கள் சுயாதீனத்தை ஜப்பானியர் இழந்த வர்க ளல்ல. உலகத்திலே முரட்டுத் தனத்துக்கும் சுயா தீனத்துக்கும் வித்தியாசந் தெரியாமல் நடப்பவர் பல்லா யிரவர். மரியாதைக்கும் அடிமைத் தனத்துக்கும் வித்தி யாசந் தெரியாமல் நடப்பவர் பல்லாயிரவர். "உனக்கு மேற் பட்டவர் 'யானை ஒரு பக்ஷி' யென்று சொன்னால், 'ஆம்' என்று சொல்வதே மரியாதை; அப்படி யின்றி 'யானை ஒரு பக்ஷி யல்ல, அது ஒரு மிருகம்' என்பா யானால், நீ அதனப் பிரசங்கி, உன் ஞானத்தை எடுத்துக் காட்டு கிறவன்," என்பார் நமது நாட்டிற் பலர். இப்படிப்பட்ட போலி மரியாதை ஜப்பானியர் அறியார். ஜப்பானியனை, தலையைப் பலமுறை வணங்கி, உயர்ந்தவரை விநயத்தோடு பார்த்து, 'ஐயா, யானை ஒரு காலத்தில் பக்ஷியா யிருந் திருக்க லாம்; அது எனக்குத் தெரியாது. ஆனால் இக் காலத்திலோ யானை மிருகந் தான்" என்று சொல்லிப், பின்னும் பலமுறை வணங்குவான். இதுவே மரியாதை யோடு கூடிய மெய்ச் சுயாதீனம்.

8. முன் செல்லல்—ஜப்பானியருக்குக் கண் முகத் திலே, நமது நாட்டாருக்கோ கண் பிடரியிலே என்றால்,

தப்பிதமா? பூர்வ காலத்திலே, நம் முன்னோர் எப்படியிருந்தார்களோ, அப்படியே நாமும் இருக்க வேண்டும்; பூர்வகாலத்திலே நம் முன்னோர் எது செய்தார்களோ, அதுவே நாமும் இப்போது செய்ய வேண்டும் என்பது, சாமானிய ஜனங்களுக்கு மட்டு மல்ல, மகாத்மா காந்தியடிகள் போன்ற மேதாவிகளுக்கும் கருத்து. ஜப்பானியருக்கோ இப்படிப் பட்ட எண்ணை மில்லை. தற்காலத்திலே தங்களுக்கும் தங்கள் தேசத்தாருக்கும் எது எது நன்மையோ, அதை யதைத் தேட வேண்டுவர். "நரகத்திலிருந்து நன்மை வந்தாலும் நாம் அதை யங்கிகரிக்க வேண்டும்" என்றார், ஒரு ஜப்பானிய சூரவர்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

என்று நம்முன்னோர் சொல்லி யிருக்கவும், பழையன எல்லாம் நல்லவை என்றும், புதியன எல்லாம் தீயவை என்றும், நினைப்பார் நம் நாட்டில் பலர். பழையன எல்லாம் தீயவை என்றும் புதியன எல்லாம் நல்லவை என்றும் நான் சொல்ல வில்லை. பழையவை களிலும் நல்லவை யுண்டு, புதியன வற்றிலும் நல்லவை யுண்டு, பழையவை களிலும் தீயவை யுண்டு, புதியவைகளிலும் தீயவை யுண்டு.

9. அழகிற் பிரியம்—ஜப்பானியர் அழகிற் பிரியர். நமது தேசத்தாருக்கும் அழகிற் பிரியம் இல்லையோ எனின், உண்டு, நிரம்ப உண்டு. நமது ஸ்திரீகள் தங்களையும் தங்கள் பிள்ளைகளையும் விலை யுயர்ந்த ஆடை யாபரணங்களால் அலங்கரிப்பதிலே அது விளங்குகிறது. ஜப்பானிய ஸ்திரீகளும், தங்களையும் தங்கள் பிள்ளைகளையும் அலங்கரிக்கிறார்களாயினும், ஜப்பானியர், ஆபரணங்கள் மிக அணிவ தில்லை. ஆடைகளும் உயர்ந்த விலை யுள்ளவைகளாய் இருக்க வேண்டும் என்று நினைப்ப தில்லை. கண்ணின் காட்சியைக் கவரச் செய்தால் அது போதும் என நினைப்பார்கள். ஜப்பானியர் இயற்கையின் அழகைக் கவனித்துக் களிப்பார்கள். மலைகள், பூ மரங்கள், அருவிகள், வரிகள் அழகைக் கவனிப்பார்கள். வீட்டிலே அறைகளையும் தட்டு முட்டுக்களையும் சுத்தமாய் வைத்திருப்பது மன்றி, அவைகளை எவ்வாறு ஒழுங்கு செய்தால் அதிக அழகு தரும் என்று சிந்திப்பார்கள். ஆயினும் இவ்விஷயத்தில் அதிகம் பணம் செலவிட வேண்டிய தில்லை யென்று அறிவார்கள்.

10. சந்தோஷப் பிரியம்—ஜப்பானியர் இந்தியரைப் போலத் தத்துவ விசாரணை செய்பவரல்ல. பேரின்பம் பேரின்பமாயினும், சிற்றின்பம் (= சிறு + இன்பம்) அதற்கு விரோதமன்று, என்னும் எண்ணம் உடையவர். சிற்றின்பம் என்று நான் சொல்வது, கேவலம் அசுத்தம் விளைக்கும் துர்க்காம வின்பமன்று. உலகத்திலே யுள்ள விஷயங்களை நியாயமான படி அனுபவித்துக் களி கூர்வது அக்கிரமமல்லவே.

11. ஜப்பானிய பக்தி—பக்தி என்று சொன்னால், தேவ பக்தி மட்டுமல்ல, குடும்ப பக்தி, இராஜ பக்தி, தேச பக்தி முதலிய வற்றையும் அடக்கும்.

குடும்பபக்தி—தாய் தந்தைய ரிடத்தில் ஜப்பானியருக் குள்ள பக்தி இவ்வள வென்று எடுத் துரைக்க முடியாது. பெற்றோரைப் பேணி, அவர்களுக்கு யாதொரு குறையு மின்றி ஆதரிப்பது தங்கள் கடன் என்பது, பிள்ளைகள் எவரும் அறிவார்கள். அறிந்தபடியே நடப்பார்கள்.

இராஜபக்தி—மிக்காதேவைக் கடவு ளுடைய அம்ச மென்றே இன்னும் நினைக்கிறார்கள். அவரும் குடிகள் எல்லாரையும் தமது சொந்தப் பிள்ளைக ளாகவே மதித்து, குடிகளது நன்மைக் காகவே வாழ்ந்து வருகிறார். நமது நாட்டிலே சில மகாராஜாக்கள் அப்படிப் பட்டவர் களே யாயினும், பலர், ஆடித் தன் ராஜா, ஸ்மேபட்டு ராஜாக்களே.

தேச பக்தி—ஜப்பானிய புருஷர், ஸ்திரீகள், பிள்ளைகள், ஒவ்வொருவரும் சுதேசாபி மானிகள், சுதேசத்துக் காக எதுவும் செய்வார், எப்பாடும் படுவார், உயிரும் விடுவார். நமது நாட்டிலோ சுப காரியப் புலிகள் எத்தனை பேர்! யார் கெட்டா லென்ன, நானும் என் குடும்பமும் வாழ்ந் தால் போதும் என்று நினைப்பவர், நமது நாட்டில் பல கோடிப் பேர். ஜப்பானிலோ ஒருவனு மில்லை. தங்கள் தேசத்துக் காகப் பிள்ளைகளை மனதாரச் சாகக் கொடுப் பார், பெற்றோர்; கணவர்களைச் சாகக் கொடுப்பார், மனைவி கள்; தங்களையே கொடுப்பார் எவருமே. இவ் வெண்ணம் நம்மை யாட் கொள்ளு மட்டும், நாம் அடிமைகளா யிருப் பது அவசியமே. இவ் வெண்ணம் நம்மை யாட் கொண் டாலோ,—பின் சொல்லவா வேண்டும்?

பூதேவி திருநாள்

மன்னுயிர் கொன்றது தின்றுதம் ஊனை வளர்த்திடல்
மாய்த்திடு நாள்,
மற்றதினும் கொடி தா மெலி யாரை வதைத்திடல்
ஓய்த்திடு நாள்,
இன்னுலகத் திறை யோன் அருளின் வழி ஏய்த்துள
இன்ப மெலாம்,
இற்ற நிறத்தினரும் இகலோரும் எலாருமே
வாய்த்திடு நாள்,
பன்னு கலாநிதி மேலவர் கீழவர் என்று பகா
தெவரும்
பற்றிடும் உல மதிக்கள வாக விழைந்து பயின்றுறு
நாள்,
உன்னி உழைப்பவரே விளை ஓண் பயன் உண்பவர்
என்றுறு நாள்,
உற்ற சகோதரம் நன்றுறு நாள், நம பூமகள்
திருநாளே.

II

மைந்தர்கள் மாதர் சுதந்தரம் ஒன்றிட வாழ்ந்து
மகிழ்ந் திடுநாள்,
மாறிய வர்ண மதங்களினால் வரு வைரம்
இகழ்ந்திடு நாள்,
சிந்தையில் காவினில் செய்கையில் வேறு படாது
சிறந்திடு நாள்,
சிரிய செல்வ வளம் பல பொங்கிட இன்மை
பறந்திடு நாள்,
தந்தம நெஞ்சினில் அஞ்சுதல் இன்றி தலைகள்
நிமிர்ந்திடு நாள்,
தாரணி மீதலை யாது நிறைந்து தம் ஊரில்
அமர்ந்திடு நாள்,
புந்தி முதிர்ந் தொளி துன்றிடு நாள், அறி யாமைகள்
குன்றிடு நாள்,
போர்கள் பொருமைகள் பொன்றிடு நாள், நம
பூமகள் திருநாளே—அழுதகவி.

தீண்டாமை என்னும் தீங்கு

(சித்திரைச் சிறப்புப் பரிசு பெற்ற கட்டுரை)

ஸ்ரீ. வே. ஆ. சிதம்பரப்பிள்ளை, யாழ்ப்பாணம்

இக்கால வழக்கத்தி லுள்ள தீண்டாமை, நீதியோ அநீதியோ என்று தீர்மானித்தற்கு, நாம் சில மூலாதார நியாயங்களை ஞாபகப் படுத்திக் கொள்ளல் வேண்டும். அவை யாவன: ஒரு விஷயம் சரியோ பிழையோ என்று தீர்மானித்தற்கு, சுருதி யுக்தி அநுபவம் ஆகிய மூன்றையுந் துணைக் கொண்டே ஆராய்தல் வேண்டும். ஈஸ்வர வாக்கியங்களும் (ஈஸ்வரன் பரம ரிஷிகளின் 'அறிவி னின்று குருவா யுணர்த்த' அவர்களது திருவாக்கா யெழுந்த வசனங்களும்), மேதாவிகள் தமது அநுபூதி ஞானங் கொண்டு ஆழ்ந்து சிந்தித்து வெளி யிட்ட வசனங்களும், சுருதி யெனக் கொள்ளற் பாலன. சுருதி யுக்தி அநுபவம் ஆகிய மூன்றும் ஒன்றினுக் கொன்று அவிநாபாவ சம்பந்த முடையன. ஆகவே, அவை மூன்றும் ஒரே உண்மையின் பல பெயர்களாம். யுக்தி அநுபவங் களுக்கு விரோதமாகச் சுருதி ஒரு காலும் இருக்க முடியாது. யுக்தி அநுபவங் களுக்கு விரோதமான வசனங்களை, கேவலம் ஐதிகமாய் வழங்கி வருகிற தென்ற காரணம் பற்றிச் சுருதி யென்று கொள்ளல் தவறுகும். எந்நூலி லாயினும் யுக்தி அநுபவங் களுக்கு விரோதமான கொள்கை யிருப்பின், அறிவாளிகள், அந்நூலின் துல்லியத் தன்மையில் சந்தேகங் கொள்ளல் வேண்டும். ஒன்று, அந் நூலாசிரியர் மற்றைய கொள்கைகளில் தவறு தவரா யிருப்பினும், அவ் வொரு கொள்கையில் குறைந்த ஞான முடையவ ராகவே யிருந் திருப்பார், அன்றேல், ஏதோ தவறு தந்திரங் களினால் அந் நூலில் அத் தவறான கொள்கை புகுத்தப் பட்டிருக்க வேண்டும். 'மயிர் விலக மலை விலகும்' என்ற வாறாக, முதலா லாசிரியர் ஒன்றினைக் கருத, வழிநூ லாசிரியர் விபரீதமாக மற் றொன்றைக் கருத, சார்புநூ லாசிரியர் இன்னொன்றைக் கருதி, ஈற்றில் முதலா லாசிரியன் கொள்கைக்கு முழு மாறான கொள்கையே சுருதி யென்று வழங்கப் பட்டிடவுங் கூடும்.

இது காறுங் கூறியவைகளை ஆதாரமாய்க் கொண்டே, தீண்டாமை நீதியோ அநீதியோ என்று நாம் ஆராய்தல், நடுவு நிலைமையின் பால தாகும். வைதிக சைவ சமயத்தில் தீண்டாமைக் கொள்கை யுண்டென்று கூறுவோர், இடைக் காலத்திலும் பிற் காலத்திலுந் தோன்றிய நூல்களையே தமது கொள்கைக் காதாரமான சுருதி யென்று கொள்ளு கின்றனர். பிற் காலத்து நூல்கள், வழி நூல், சார்பு நூல்க ளானதலால், யுக்தி அனுபவங் களுக்கு விரோதமான ஒரு கொள்கையைத் தாபிக்கும் விஷயத் தில், அவைகளை நாம் பிரமாண மாகக் கொள்ளல் உசித மன்று. ஆகவே, நாம் பண்டைய சுருதிகளையே ஆதாரமாகக் கொள்ளல் வேண்டும். பண்டைய சுருதிகளில் 'சண்டாளன்' என்ற பதப் பிரயோக மூல தாதல் பற்றி, அத்தகைய ஒரு சாதியா ரிருந்தார்க ளென்றும், அவ்வாறே எக்காலமும் ஒரு சாதியா ரிருக்க வேண்டு மென்றும், அங்ஙனமே இருப்பார்க ளென்றுஞ் சிலர் கருது கின்றனர். அன்னவர் தமது கொள்கைக் காதார மாக வழக்கத் தில் தீண்ட ாமை ஆசரிக்கப் பட்டு வருதலையும் பிரமாண மென்று காட்டு கின்றனர். வழக்கத்தில் தீண்டாமை ஆசரிக்கப் பட்டு வருதலையே நாம் பிரமாண மாகக் கொள்ளுங் கால், மற்றைய விஷயங்களிலும் இக் கால வழக்கா சாரங்களைச் சாஸ்திர சம்மத மென்று கொள்ளல் முறை யாகும். அங்ஙனங் கொள்ளுங் கால், நமது கோயில்களில் இக் காலம் நடை பெறுகின்ற தாசி நடனங் களையும் தாசியர்களின் வழக்க ஒழுக்கங் களையும் சாஸ்திர சம்மத மென்றே கொள்ள வேண்டி நேரிடும். தீண்டாமையைத் தாபிப் போர் அங்ஙனங் கொள்வார்களா?

எத்தனையோ அருமையான தத்துவங்களைத் தமது ஞான திருஷ்டியினல் அறிந்து வெளி யிட்ட மஹா ரிஷிகளும் ஞானி களும், இக் கால வழக்கத்தி லுள்ள சாதி பேதா சாரத்தை, ஒரு போதும் நீதி யென்று அநுமதிக்க மாட்டார்கள். அநுமதிப்பா ரென்று யாவரேனுங் கூறுவா ராயின், அவர், அம்மஹா ரிஷிகளை அவ மதிப்பவ ராகவே கருதப் படுவார். ஆதலால், இக் கால வழக் கத்தி லுள்ள சாதி பேதா சாரத்தைச் சாசுவத மாக வற்புறுத்து கிற நூல் வசனங்க ளெல்லாம், விபரீத வழக்கங் காரணமா யெழுந்த வசனங்க ளெனவே கொள்ளற் பாலன.

கேவலம் பிறப்புக் கருதித் தீண்டாமையை அநுசரித் தற்குச் சுருதியில் ஆதாரங் கிடையா தென்பதற்குப் பிரமாணங்கள் வருமாறு :—

சாதி குலம் பிறப் பென்னுஞ் சுழிப் பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்ல லறுத் தாட் கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரை மாய்த்து
கோதிலமு தானனைக் குலாவு தில்லைக் கண்டேனே.
(மாணிக்க வாசகர்)

சாத்திரம் பல பேசுஞ் சுழக்கர்காள்!
கோத்திரமுங் குலமுங் கொண்டென் செய்வீர்?
பாத்திரஞ் சிவ மென்று பணி நிரேல்
மாத்திரைக் குள் அருளுமாற் பேறரே. (அப்பர்)

சாதி யாவ தேதடா? சலந் திரண்ட நீரெலாம்
பூத வாச லொன்றலோ? பூத மைந்து மொன்றலோ?
காதில் வாளி காரை கம்பி பாடகம் பொ னென்றலோ?
சாதி பேத மோதுகின்ற தன்மை யென்ன தன்மையே!

ஒதும் நாலு வேதமும் உரைத்த சாத்திரங்களும்
பூத நூத்து வக்களும் பொருந்து மாக மங்களும்
சாதி பேத வண்மையும் தயங்கு கின்ற நூல்களும்
பேத பேத மாகியே பிறந்துழன் றிருந்தவே! (சிவவாக்கியர்)

எவ் வகை யாக நன்னீ தம்—அவை
எல்லா மறிந்தே யெடுத்து நீ போதி
ஒவ்வா தென்றே பல சாதி—யாவும்
ஒன்றென் றறிந்தே யுணர்ந்துற வோதி. (கடுவெளி சித்தர்)

பிறப் பொக்கும் எல்லா வுயிர்க்கும்; சிறப் பொவ்வா,
செய் தொழில் வேற்றுமையான். (திருவள்ளுவர்)

சாதிப் பிரிவிலே சி மூட்டுவோம் (பாம்பாட்டிச் சித்தர்)

சாதி பேதங் களைக் குறித்துத் தயங்கி மயங்கித் தனராதே
சாதி யாவ தெவரறிவார் சருவ வுடலு மொன்றுச்சே;
சாதி யாவ ரெவ ரென்னில் தன்னை யறிந்து சிவமான
சாதி பெரிய சாதி யென்று சாற்றும் மறைகள்; சத்தியமே
ஞானம் பதியா இழிகுலத்தோர் நாட்டிற் பிரித்தே சாதி
தன்னை
ஈன சாதி யாரென்றே இகழ்ந்தார் முத்தர் பத்தரையும்,
ஆன பெரியோர் தங்களையும் அவரி லொன்றுக் குறித்
துக் கொண்
டீன மூரைத்தே யருநரகில் இழிந்து போனு ரிகத்தோரே.
(சிவானந்த போதம்)

சாதி யிரண்டொழிய வேறில்லைச் சாற்றுங் கால்
நீதி வழுவா நெறி முறையில்—மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கு ளுள்ள படி. (ஔவையார்)

மேலே கூறிய பிரமாணங்கள் தமிழ்ச் சுருதிக ளெனத் தகும். இன்னும், ஸம்ஸ்கிருத வேதங்களிலும் சதுர் வர்ணங் களைப் பற்றியே பிரஸ்தாப முண் டென்றும், இக் கால வழக்கத்தி லுள்ள பலப் பல சாதி பேதங்களுக்கும் தீண்டாமைக்கும் அவை களில் தக்க ஆதாரங்கள் கிடையா வென்றும், வஜ்ரசூசிகோப நிடத்திலும் வியாஸ பாரதத்திலும் குணத்தைப் பற்றியே வர்ணங் கள் ஏற்படுகின்றன என்ற தாற்பரிய முள தென்றும், மேதாவிகள் அறிவர்.

இந்து சமயத்தில் பல வகை மனிதரின் பல வகைப் பரி பக்குவத்திற்கும் இயையப் பல வகை மதக் கோட்பாடு களுக்கும் இட முண்டு. வேதங்களுக்கு வியாக்கியான காரர்களும் சமயா சாரியார்களும் ஒன்றற் கொன்று விருத்த மான பல வித வியாக்கி யானங்கள் இயற்றி இருக்கின்றனர்; இயற்று கின்ற னர். ஆகவே, இந்த சமயி ஒருவன் எச் சாஸ்திரத்தைத் தனக்கு வழி காட்டி யாகக் கொள்வது என்பதில் பல சங்கடங்கள் ஏற்படு கின்றன. ஒருவன் ஒரு கொள்கையைத் தாபித்தற்கு ஒரு நூலி லிருந்து மேற்கோ ளெடுத்துக் காட்டு கின்றான். அக் கொள் கைக்கு மறு தலையான கொள்கை யுடையவனும் இன்னொரு நூலி லிருந்து, அல்லது அதே நூலி லிருந்து, மேற்கோ ளெடுத் துக் காட்டு கின்றான். இவைகளில் எதனைச் சுருதி யென்று கொள்வது? இவ்வித ஸந்தேக விஷயங்களில், யுக்தி அநுபவங்களுக் குப் பொருந்தியதையே சுருதி யென்று கொள்ளல் வேண்டும்.

மேலும், நமது தேசத்தில் சாஸ்திரங்களிற் கூறப் படாத அநேக சாதிகள் தோன்றியமைக்குக் காரண மென்ன? இச் சாதி பேதங்களை மஹரிஷிகள் ஏற்படுத்தினார்க ளென்பது உண்மை யன்று. ஏனெனில், மஹரிஷிகள் ஏற் படுத்தியவை களுக்கு மாறாக, நம்மனோர் இக் காலத்தில் தர்மத்தை அதர்ம மாகவும் அதர்மத்தைத் தர்மமமாகவும், தம் தம் சௌகரியப் படி ஆசாரங் களை அநுசரிக் கின்றனர். ஆகவே உண்மைக் காரணம் வேறு கவே யிருக்க வேண்டும். அஃதாவது:—

ஆதி காலத்தில் குண கர்ம வேறு பாடுகளினால் வர்ண பேதங் கள் ஏற் பட்டிருக்கும். அக் காலத்தில் வர்ண குணக் கலப்பு ஏற்

படாமல், பெற்றோரின் குணமே மக்களுக்கும் அமைந் திருக்க வேண்டும். ஆகவே, அவ்வவ் வருணத் தவர்க்குப் பிறந்த மக்களும் அவ்வவ் வருணத்தவராகவே கருதப் பட்டிருப்பார். கால கதி யடைவில், ஜீவர்களின் கர்ம பரிபாக சக்தி பேதங்களினால், அங்கப்பழு தற்றவனுக்கு அங்கப்பழு தற்றவனும், அங்கப் பழு தற்ற வனுக்கு அங்கப் பழுதற்றவனும் பிறத்தல் போல, மேல் வருணத் தவனுக்குக் கீழ் வருணத்துப் பிள்ளையும் கீழ் வருணத் தவனுக்கு மேல் வருணத்துப் பிள்ளையும் பிறக்க நேரிட்டது. மனிதருக்கு இயல்பா யுள்ள அகங்கார மமகார தோஷங்களினாலும், வழக்கத்தின் ஆதிக்கத்தி னாலும் அதிக்ர மிக்கப் பட்டு, மேல் வருணத்தவர்கள் தங்களுக் குதித்த கீழ் வருணத்தவனையும் மேல் வருணத் தொழிலுக்கே பயிற்றியும், கீழ் வருணத் தவனுக்கு உதித்த மேல் வருணத்தவனை, அசுயை பொறுமைகளினால் மேல் வருணத்திற்கு ஏற்காமலும் ஒழுகி வந்திருப்பார். பின்பு, காலாந் தரங்களில், இந் நால் வருணத் தவர்களிலும் அசுயை பொறுமை குரோதங்க ளுடைய மனத்தினர், தம் தம் வருணங்களிலே பல பிரிவுகளை யுண்டாக்க, அப் பிரிவினர், தத்தமக்கு ளுண்டான போட்டி யாதிய வற்றால் மேன் மேலும் பிரிவுகளை யுண்டாக்க, முடிவில், இக் கால வழக்கத்தி லுள்ள சாதிக ளெல்லாந் தோன்ற லாயின.

இனி, பரம்பரையாக வர்ணங்கள் ஏற்பட் டிருக்கின்றன வென்று கொள்ளுவ தாயின், பிராமணனுக்குப் பிறந்தவ னிடத்தில் பிராமணத்துவ குணங்களும், சுத்திரனுக்குப் பிறந்தவ னிடத்தில் சுத்திரத்துவ குணங்களும், சந்ததி தோறும் மாறுமலே வந்திருக்க வேண்டும்; இளியும் வர வேண்டும். ஆனால், அநுப வம் இதற்கு முழு மாறுகவு முண்டு என்பதை யாவரும் எங்குங் காணலாம். இதனை மறுப்பவர், சுருதி யுக்தி அநுபவங்களி லொன்றேனும் அறிந்தவ ரல்ல ரென்பது துணிபு.

ஒருவன், சுருணை சாந்தம் தியாகம் தத்துவ ஞானம் தெய்வ பக்தி பிரஹ்ம ஞான விருப்பு ஆதிய குணங்களுடைய ஞதல் பற்றியே பிராமண வருணத்திற் குரியனு கின்றான்.

வீரம் தீரம் தியாகம் பரோப காரம் சாதுரியம் துஷ்ட நிக்கிரகம் சிஷ்ட பரிபாலனம் ஆதிய குணங்களுடைய ஞதல் பற்றியே, ஒருவன் க்ஷத்திரிய வருணத்திற் குரியனு கின்றான்.

வியவகார சாதுரியம் கைத் தொழில் யூகம் வர்த்தக யுக்தி தர்ம கைங்கரியம் திருஷ்டி விருப்பு ஆதிய குணங்களுடைய ஞதல் பற்றியே ஒருவன் வைசிய வருணத்திற் குரியனுகின்றான்,

அவதானம் விபாவனம் உபமானம் ஞாபகம் பகுத் தணர்தல் ஆகிய மனே தத்துவங்களின் குறைவினல் ஆற்ற லற்றவர்க ளாயும், பிறரது எவலேச் செய்துக் கொண்டு அப் பிறரது ஆதரவி லேயே வாழ வேண்டிய வர்களாயு மிருத்தல் பற்றியே, ஒருவன் சூத்திர வருணத்திற் குரிய னுகின்றன்.

மேற் கூறிய குண விபாகங்கள் ஒவ் வொருவருக்கும் பிறவியி லேயே இயற்கைக் குணங்களா யமைகின்றன. இயற்கைக் குணங்கள் இவ்வாறு அமைந்த விடத்தும், அவரவர் ஒழுக்கத்திற் சிறத்தலும் தவறுதலும் வேறு விஷய மாகும். அதனுலே இயற் கைப் பிறவி வருணம் மாறு தென்பது பொது விதி. மிக அரி தாய், விசுவாமித்திர ரிஷியைப் போல, வெகு கால கஷ்டப் பிர யத்த னத்தின் பின், மேல் வருணத் தவனுய் மாறலுங் கூடு மென் பது சிறப்பு விதி.

இது காறுங் கூறிய வற்றுல், மனிதருள் இயல் பாக நான்கு வருணங்க ளுண்டென்பதும், அவைகள் இக் கால பிரத்தியக்ஷ அநுபவத்தில் சந்ததி மாறியுந் தோன்றலுண் டென்பதும் பெறப் பட்டன.

(தொடரும்)

கிராம வாசம்

ராவ் சாகிப்

ஸ்ரீ. M.S. சேஷாசலையர், திருவண்ணுமலை

ரு தேசத்தின் செல்வமும் பலமும் அந்த தேச முயற்சியையும், அம் முயற்சியின் பலனை வருவாயையும், பொறுத்தது. நம் இந்தியாவின் பலன் கிராமாந்திரங்களி லுள்ள கிராம வாசிகளின் நிலைமையையும் அவர்களின் உழைப்பையும் செல்வத்தையும் பொறுத்ததே யாகும். இந்தியா வெகு செல்வம் நிறைந்த நாடெனக் கருதுவோ ரனைவரும் நகர வாசிகளான சிலரைக் கண்டு பெய ரிட்ட தன்றி, கிராம

வாசிகளின் அந்தரங்க நிலைமையைப் பகுத் தறிந்து வெளி யிட்ட தல்ல. நகர வாசிகள் வெகுவாய் கிராம வாசிகளின் கஷ்ட வருமானத்தில், கிரமமாயோ அயோக் கியமாயோ, பங்கிட்டுக் கொண்டு வாழ் வோரே யன்றி, கிராம வாசிக ளின்றிச் சுயமாய் வாழும் சக்தி யுள்ளோ ரல்ல. ஆகவே, கிராம வாசத்தின் நிலைமை எப்படி யிருக்கிற தென நன்குணர வேண்டியது, நம் தேசத்தின் முன்னேற்றத்துக் குரிய தாகும். நம் தேசத்தின் முக் கிய தொழில் விவசாயம். நம் தேசத்தி லுள்ள ஜனங்கள், பயிரிடுவோர், வர்த்தகர், கைத் தொழி லாளர், உத்தியோ கஸ்தர், அனைவரும், தம் தம் குடும்பங் களுக்காகச் செல விடும் தொகை யனைத்தும், இந்த தேசத்தின் வருவாயி னின்றே செலவிட வேண்டும். இந்த மூல வரும்படி விசேஷமாய் விவசாயத்தி னின்றே எதிர் பார்க்கப் படுகிறது. தென் னிந்தியாவில் வர்த்தகர்க ளாகட்டும், உத்தியோகஸ்தர்க ளாகட்டும், யாரும் விவசாயிகளின் வருமானத்தில் பங்கு போடுபவர்களே. நிலவரி, உப்பு வரி, சாராய வரி, வருமான வரி, தொழில் வரி, வீட்டு வரி, தண்ணீர் வரி, விளக்கு வரி, ஸ்டாம்பு பதிவு வரி, பிராது வரி முதலிய எண்ணிறந்த வரிகளும், கடைசி யாய் யார் கொடுக்கிறார்களோ என்று தீர விசாரிப்போ மானால், கிராம வாசியான குடியானவனே கொடுக்கிறான். இடையி லுள்ள பல துறையாளர் களுக்கு வரி விதித்த பாவனையே யன்றி, ஒவ் வொருவரும் கிராம வாசியான மூல புருஷன் தலையிலேயே அத்தனை பளுவையும் சுமத்து கிறார்கள். இவ்வளவு பாரமும் அவன் தாங்குவது அவனுக்குத் தெரியாமலே நிகழ்ந்த போதிலும், தான் கூலி மடைந்து வருவதை நிதர் சனமாய்க் காண்கிறான். விவசாயியின் செல்வம் தன் பூமியும், பூமியைப் பயிர் செய்ய வேண்டிய கால் நடைகளும், தன் னுழைப்புமே. முக்கியமாய் நம் தென் னிந்தியாவின் செல்வ மெல்லாம் அதி லுள்ள பயிரிடும் பூமியும், கால் நடைகளும், விவசா யத் தொழிலாளிகளுமே. இந்த மூன்றினத்தாரும் எந் நிலைமை யுறுவார்களோ அதுவே நம் தேசத்தின் செல்வ நிலைமையைக் குறிக்கும். இம் மூவினங்களும் தற்காலம் சீர் கேடடைந்து உயிரற்றிருக் கின்றன வென்பதை யாவரும் அறிவர்; ஆயினும், பாதைகளில் ஓடும் மோட்டார் வண்டி களையும், நாடக சாலைகளையும், பகூணைக் கடைகளையும், உயர்ந்த பட்டுப் பட்டாடை களையும், விலை யுயர்ந்த நகைகளை

யும் எங்கோ லட்சத்திலொருவர் அனுபவிப்பதைக் கண்டு, நம் தேசம் உன்னத செல்வ நிலையி லிருப்பதாய் இதரர் கள் நினைப்பதோடு, நம் தேசப் பிரமுகர்களும் கருதுகிறார் கள். பயிரிடும் பூமியும் பசு மாடும் ஒன்றென்பார்கள். பசு மாட்டுக்கு எவ்வளவுக் கெவ்வளவு தீனி யிட்டுப் போஷிக்கிறோமோ அதற்கேற்பப் பலனளிக்கும். அப்படி யே பூமியும் அதற்கிடும் தீனிக்கேற்பப் பலனளிக்கும். குடி யானவரில் 100-க்கு 50 பேர் கடன் பட்டு நிலங்களை வெளியாருக்கு ஒப்படைத்து விட்டு, கூலிக் காரராகி விட் டார்கள். இப்படி நிலங்களை யடைந்த சுவான் தாரரோ சொந்தமாய்ப் பயிரிட யியலாதவ ராதலின் இந்தக் கூலிக் காரரைக் கொண்டு பயிர் நடக்கிறது. ஆதலின் பூமியின் ஸ்திரமான சூக்ஷமத்தைக் கருதுவோர் வசம் பூமி தற் காலம் வெகுவா யில்லை. தவிர, பரம்பரைக் குடியானவனும் தற்கால மேல் நாட்டு நாகரீகத்தால் கவரப் பட்டு, கிராம வாசம் மந்தித்துப் போய், நகர வாசத்தில் உத்தியோகத் தை நாடிய படியால், பூமி தேவி உபேட்சிக்கப் பட்டு, பயிரின் பலன் நிஷ்பலனாகி வருகிறது. என்ன நாகரீகம்! என்ன விந்தை! பத்துக் காணி நஞ்சையுடன் பாடு பட்டுத் தன் சுகம், ஆசாரம், கிரஹ தர்மம், இவைகளை யாதும் குறை வின்றித் திருப்தி யுடன் நடத்தி வந்த புருஷர், இதில் நாலு காணியை விற்று, பிள்ளைக்குப் புதிய கிராப் தலையும், பூட்சு டொப்பியும், சிகரேட்டும்; யாரிடமும் மரியாதை, தெய்வ பக்தி, பரோப காரம், சத்தியம் முதலிய தெதுவும் காணப் படாத தூர்ச் சகவாசமும், விலைக்கு வாங்கிக் கொடுத்து, பிள்ளை, துரையின் கீழ் குமாஸ்தாவாய் மாதம் 30 ரூபாய் சம்பளம் பெறுவதைக் கண்டு, அகமகிழ்ந்து, மீதி யிருக்கும் நிலத்தையும் தன்னால் பயிரிட முடியாமல், வாரத்துக்கு விட்டுத், தானும் நகரம் சேர்ந்து, தன்னசார மிழந்து, மனம் வருந்திச், செலவுக்கு போதாமல் கொஞ்சங் கொஞ்சமாய் மீதி நில மெல்லாம் விற்பனை செய்து மகிழ்கின்றனர்களே! இதனால் கிராமங் கள் பாழடைந்து விவஹாரிக ளெல்லாம் பட்டணம் செல்ல வே, ஒற்றுமை யின்றி, தலைமை நீங்கி, வம்பும் வழக்கும் குடியும் பெருகி, கிராம வாசம் நரகவாச மாயிற்று. ஏகரா வுக்கு 50 கலம் விளைந்த பூமியில் என்ன பாடு பட்டாலும் பத்துக் கலம் கிடைப்ப தில்லை. காட்டி லிருந்த தழை யெருவை எடுத்துக் கொள்வதைத் தடுத்து விட்டதால், அந்தத் தினமும் கிடையாது. இதற் கேற்ப, கால மழை

யின்றி யிட்ட பயிரும் பல னளிப்ப தில்லை. பூமியின் நிலைமை யிப்படி யிருக்க, விவசாய உபகரண மான கால் நடைகளின் ஸ்திதியோ மிக்க துக்ககர மானது. குடியான வரின் பெரும் செல்வம் கால் நடையே யாகும். பண்டை நாட்களில், ஒவ்வொரு நிலச் சுவான் தாரருக்கும், ஏராள மான ஆடு மாடுகள் உண்டு. தன் நிலத்தி லுள்ள வரு மானத்திற்குச் சமதையாய் இவைகளில் தக்க ஊதியம் கிடைத்து வந்தது. தற்காலம் உழவுக்கு வேண்டிய மாடு கூடக்கிடையாது; உள்ளவை களும் வாலுந் தோலுமாயுள. இதற்குக் காரணம், முக்கியமாய் மேய்ச் சற் றரைகளெல் லாம் அடைக்கப் பட்டதுடன், கால் நடைகள் ஏராளமாய் இதர தேசங்களுக்கு ஏற்றுமதி யாவது தான். சாதாரண மாய் 40 ரூபாய் விற்று வந்த கால் நடை, 200 ரூபாய்க்கு விற்கிறது. தீனி போடும் சக்தி குறையவே, கால் நடை களை விற்பனை செய்ய நேரிட்டது. நமது முக்கிய உணவுப் பொருளும் தேக ஆரோக்யத்தையும் திடனையும் அளிப்ப னவான பால் தயிர் நெய் இவைகளும், கிராமங்களில் அபூர்வ வஸ்துக்க ளாயின. வெள்ளாட்டுப் பால் மனிதர்களை வளர்க் கும் அமிர்த மெனச் சொல்வார்கள். காடுகளை வெள்ளாடு கள் அழிப்பதாய் அவைகளைக் கருவறுத்து விட்டார்கள். ராஜாங்கத்தாரும் இந் நிலையை யுணர்ந் திருக்கிறார்க ளன்றி, பரிகாரம் செய்ய வந்தா ரில்லை. இவை இப்படி நிற்க, குடியானவன் குடும்ப நிலையோ, அந்தோ, பரிதாபம்! தன் சொத்துக்களை யெல்லாம் கடன் காரருக் கழுது விட்டு, குந்தக் குடிசையும் குடிக்கக் கூழும் உடுக்க துணியு மின்றித் தவிக்கிறான்.

நம் தேசத்தின் செல்வ நிலைக்கு அஸ்திவாரமான கிருஷித் தொழில் இந் நிலைமையி லிருக்க, நம் தேசத் தலை வர்கள், இந்தக் குறையை நிவர்த்திக்க ஒன்று கூடிப் பாடு பட்டா லன்றி, முற் போக்கான மற் றெல்லாத் துறைகளும் பயனற்ற வாகும். சட்ட சபை யங்கத்தினர், தேசிய வாதிகள், ஒத்துழையாதார், ஆசாரத் திருத்தக் காரர்கள், ராஜாங்கத்தார், மற்றும் பொது நன்மைக் குழைப்போர், யாவரும் தம்தம் நோக்கங்களைப் பற்றி யோசிக்கு முன், கிராம வாசத்தைப் பண்படுத்த வேண்டும்.

பஞ்சாமிர்தத்தைப் பற்றிய

என் மனத் தேற்றம்

ஸ்ரீமதி
பண்டிதை அசலாம்பிகை யம்மாள்
திருப்பாதிரிப் புலியூர்.

ப் பெயரின் கண் விசேட துண் பொருள் அடங்கி யிருக்கு மென்ப தென் உள்ளத் துணிபு. அதற் கேற்ப தற்காலம் இந்திய சமூகத்தினை விசேட மாகவும் உலகப் பரப்பினை யே பொதுவாகவும் இருமைப் பயன்களையும் அடைவிக்கச் செய்யும் உபாய மாகக் கண்டு தட்டி யெழுப்பிய எமது மகாத்மா காந்தி யடிகளின் உபதேசங்க ளாக மிளிர்வது தெற்றென எண்ணத்தில் ஊடுருவிச் சென்றது. உண்மை யும் அன்பும் சூழப் படாத அறிவு எற்றிற்கு? ஒற்றுமை யும் உழைப்பும் இல்லாத முயற்சி, எப் பயன் றரும்? இந் நான்கினுற் கவரப்பட்ட இயற்கை யறிவன்றே அறிவு? இஃதமையா வறிவு புல்லறி வன்றே? இத் தகைய நல்லறி வை யன்றே, நமது பாரத தேசம் பெற வெண்ணி யெழுந்து நிமிர்ந்து நிற்கின்றது? இவ் வுண்மை யன்பு ஒற்றுமை உழைப்பு நவீன மொழிக ளன்று, தொன்மைப் டோன் மொழிகளே. எனினும், அதனை இந்திய ஜாதி மறந்தது, செல்வம் துறந்தது, பெருமை இறந்தது. எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் இறந்தவற்றை யுயிர்ப்பிக்கவும் மறந்தவற்றை நினைப்பிக்கவும் பெரியோர் ஒருவரைத் தோற்றுவித் துள்ளார். அவ் வறிவின் வேந் தர் இஞ்ஞான்று உபதேசித்து வரும் ஐம் மொழிகளையே கலசத்தின் உப பத்திரங்களில் தீட்டி எம்போல் வாரின் இருதயங்களைக் கவர்ந்த ஆசிரியரின் நுண்ணறி வுடைமை க்கு மறவா நன்றியும் மட்டற்ற வந்தனமும் செலுத்து கின்றேம்.

ஆசிரியர் அளித்த பஞ்சாமிர்த மென்பது எம்போல் வார்க்கு காந்தி பஞ்சாமிர்தமாக இன்ப மளிக்கின்ற தென்பதையே ஈண்டு மகிழ்ச்சி யுடன் வெளி யிடத் துணிந்தேன்.

பல துறைப் பொறுக்கு மணிகள்

பத்திரிகை ஆராய்ச்சி

(152–ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பால் கறத்தல்—பால் கறக்கும் போது மாட்டுக்கும் பாற் காரனுக்கும் அன்னி யோன்னிய அன்பு இருக்க வேண்டிய தவசி யம். ஏனெனில், கறக்கும் சமயத்தில் மாடு சாந்தமா யில்லா திருந்தால், பால் அளவு குறைவ தன்றி, அதன் வெண்ணெய்ச் சாரமும் குறைந்து, நய மில்லாத தாய் விடும். ஆதலால் மாட்டைக் கறக்கு முன் அதை அதட்டுதல், கோபித்துக் கொடுஞ் சொற் கூறல், உதைத்தல், அடித்தல் கூடாது. மாட்டின் நரம்புகள், (Nervous System) பால் சுரக்கும் கருவிக ளோடு (Lacteal Glands) நெருங்கிய சம்பந்தம் உடையனவா யிருப்பதால், மாட் டின் குணம் பால் சுரப்பதைப் பாதிக்கும். மடுவைப் புண் படுத்தி னலும், நன்றாகக் கறக்கத் தெரியாமல் கறந்தாலும், பால் குறையும். பாலை விரை வாயும், அமைதி யாயும், சாமார்த்தியத் தோடும் கறக்க வேண்டும். சுரக்கும் பால் முழுவதையும் கறக்காமல் விட் டால், பால் கொடுக்கும் காலம் நீடித் திராது. கடைசியில் பீர்ச் சும் பால் நயமாயும் வெண்ணெய்ச் சாரம் அதிக முள்ளதாயு மிருப்பதால், அதனை மடுவில் தங்க விடாது கறத்தல் இலாபகர மாகும். பால் கறக்கும்போது, விரல்களைப் பால் கறக்கும் பாத்திரத் தில் பீர்ச்சப் பட்டிருக்கும் பாலில் நனைத்துக் கொண்டு கறப்பது வழக்கம். இது, முலைக் காம்பு, ஈர மில்லாத விரல் உரைஞ்சிப் புண்ணாகா மிருப்பதற்கும், கறப்பது இலேசா யிருக்கும் பொருட் டும் செய்யப் படுகிறது. கறக்கு முன் சுத்த ஜலம் கொண்டு மடுவையும், முலைக் காம்புகளையும், கறப்பவன் கைகளையும் சுத்த மாகக் கழுவிக் கொண்டு கறந்தால், விரல்களை நனைப்பது அவ சிய மாம். பாலில் விரல்களை நனைத்துக் கொண்டு கறப்பதனால், பால், கையிலும் மடுவிலு முள்ள அழுக்கினால் அசுத்தமாய் விடும். சுருக்கமாக :—(1) பாலின் நயமும் அளவும் குறையா திருக்கற்கு மாட்டை அதட்டுதல், உதைத்தல், அடித்தல் ஒன்றும் கூடாது.

(2) பாலை விரை வாயும், அமைதி யாயும், சாமர்த்தியத் தோடும் கறக்க வேண்டும். (3) கை வலமாகக் கறக்கும் மாடுகளின் மடி வில் பால் தங்க விடாது பீர்ச்சிக் கறக்க வேண்டும். (4) பால் கறக்கும் போது மாட்டின் மடி, மூலைக் காம்பு, கறப்பவன் கைகள், பால் கறக்கும் பாத்திரம் ஆகியவைகளைச் சுத்த ஜலத்தால் நன்றாகக் கழுவ வேண்டும். (5) முழுக் கையையும் உபயோகித்துப் பால் பீர்ச்சுவது, விரல்களை மட்டும் உபயோகித்துப் பீர்ச்சுவதை விட நலமானது. (6) கூடிய வரை காலைக் கறவைக்கும் மாலைக் கறவைக்கும் இடையே சமமான நேரம் இருக்க வேண்டும். (7) ஒருவனே மாட்டை எப்பொழுதும் கறத்தல் நலம்—வெ. சு. ப.

கண்ணீர்.—மனிதரை வாட்டி வதைக்கும் நோய்களில் பல, கண்ணுக்குப் புலப்படாத சிறு விஷ ஜந்துக்களால் (bacteria) உண்டாகின்றன என்பது பிரபலம். இந்த விஷ ஜந்துக்களை நசித்து விடும் ஒரு வஸ்து, மனிதர் வடிக்கும் கண்ணீரில் இருக்கிறதாம். இதில் ஒரு சிறு சொட்டு, பல கோடி விஷ ஜந்துக்களைக் கொன்று விடும். கண்ணீரினின்றும் வேறாக இன்னும் இந்த வஸ்துவைத் தனித்துப் பிரிக்க முடிய வில்லை. அது சாத்தியமான வுடன் விஷ ஜந்துக்களை (bacteria) அழிக்கும், நமக்குத் தெரிந்த மற்றெல்லாப் பொருள் களிலும் உக்கிரமான தொரு வஸ்துவாய், அது பயன்படும். அப்பொழுது, கண்ணீரும் ஒரு விலை மதிப்புள்ள வியாபாரப் பொருளாகிவிடு மன்றோ? அப் பொழுது, ஏழைகள், இந்திய விதவைகள், போன்ற தர்ப்பாக்கியர் களுக்கும், ஒரு ஜீவனோபாயம் ஏற்பட்டு விடலாம்!

இரண வைத்திய ஆச்சரியம்.—ஐரோப்பிய யுத்த காலத்தில், ஏழு வருஷத்துக்கு முன் நேர்ந்த விபத்தால், ஒருவன் தன் இரண்டு கண் ணிமை களையும் இழந்து விட்டான். லிவர்ப்பூல் ராயல் ஆசுபத்திரியி லுள்ள சஸ்திர நிபுணர் ஒருவர், அவன் கையி லிருந்தே தோலை எடுத்துப், புதிதாய் அவனுக்கு இமைகள் உண்டாக்கி விட்டாராம்; இமை மயிரும் முளைத்து, இப்பொழுது அவன் கண்களை மூட முடிகிறதாம்.

ஜீவனோபாயம்.—பழைய காகிதம், வாள் தூள் (மரத் தூள்), காகித அட்டைகள் முதலியவற்றைக் கொண்டு, பால், மாமிசம் முதலிய ஆகார பதார்த்தங்களை உண்டாக்கு கின்றனர். இவை சத்துள்ள வைகளா யிருக்கின்றன வாம். ஆடு மாடுகள் இந்தத் தீனியைத் தின்று கொழுக்கின்றனவாம். மனிதரும் சாதாரண உணவுப் பொருள்க ளுடன் கலந்து சாப்பிடலாம்.

ஒரு நாட்டின் விலை.—அநாகரிக மான காட்டு ஜனங்கள் வாழும் நாடுகளுக்குப் புதிதாய்ச் சென்ற ஐரோப்பியர்கள், பலவகை விநோத கரமான அற்பப் பொருள்களைக் கொடுத்து அவர்களை ஏமாற்றி வந்தது சரித்திர உண்மை. அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களின் தலை நகர மாக விளங்கும் நியூயார்க் (New York) பட்டணம் இப்பொழு துள்ள பிர தேசத்தை, அதற்குச் சொந்தக் காரரா யிருந்த ஆதி அமெரிக்க இந்தியருக்கு, ஒரு குப்பி சாராயத் தைக் கொடுத்து, வெள்ளையர் விலைக்கு வாங்கினதாகச் சொல்வ துண்டு. இது எவ்வா றாயினும், இப்பொழுது கெண்டக்கி (Kentucky) மாகாணமாய் விளங்கும் பிர தேசத்தை, முதலில் அங்குச் சென்று குடியேறின வெள்ளையர்கள், அந் நாட்டு வாசிக ளுக்கு ஆளுக் கொரு உள்ளங்கி (வேஷ்டி) விலை கொடுத்து நாட்டை வாங்கிக் கொண்டன ரென்பது உண்மை.

மீன்களின் ஆயுள் காலம்.—சுக சௌகரிய வாழ்க்கையில் மீன்கள் பல் லாண்டுகள் ஜீவிக்கின்றன. விலாங்கு, வாளை இவை போன்ற மீன்கள் 60 முதல் 100 வருஷங்கள் வரை ஜீவிக்கின்றன; ஸால்மன் என்னும் மீன் 100 வருஷம் ஜீவிக்கும்.

கிளிப் பிள்ளைகளுக்குக் கலாசாலை.—அமெரிக்காவில் தென் மேற்கு மாகாணத்தில், பத்து இருபது வரை இங்கிலீஷ் வார்த்தைகளைப் பேசக் கிளிகளுக்குக் கற்பிப்பதற் கென்று, ஒரு கலா சாலை எற்பட் டிருக்கிறது. மெக்ஸிக்கோ வனந்தரங்களி லுள்ள இளங் கிளிப் பிள்ளைகளைக் கொண்டு வந்து பழக்கிப், பிறகு வேண்டுவோருக்கு விற்கின்றனர். எட்டு வாரத்துக்கு மூத்த கிளி மாணுக்கரை ஏற்றுக் கொள்வ தில்லை, வரிசையாயுள்ள கிளிக் கூண்டு களின் எதிரே நின்று, உபாத்தியாயர் சொற்களை உச்சரிக்கிறார். விரைவில் கற்றுக் கொள்ளும் கிளிகள், மேல் வகுப்புக்கு விரை வில் 'பிரமோஷன்' செய்யப் படுகின்றன. இதுவும் ஒரு வித்தையே எனினும், நமது நாட்டுக் கலாசாலை, பள்ளிக் கூடங் களிலும், கிளிகளுக்கே சமானமான பிள்ளைகள் பலரும், கிளிகளைப் பழக்குவதற்கே யோக்கியமான வாத்திகள் பலரும் இருக்கின்றனர் அன்றே? நமது தற்காலப் படிப்பில் பெரும்பாகம் கிளிப் பயிற்சி யே அன்றே?

உள்ளம் உளவு கருவி.—அமெரிக்காவிலே ஒரு கல்லூரிப் போதகர், ஒரு புதிய கருவி உண்டாக்கி யிருக்கிறார். அதைக் கொண்டு, மனிதனது உள்ளத்தில் நிகழும் பயம், சந்தேகம், பட படப்பு முதலிய உணர்ச்சிகளை அறிந்து விடலாம். உதாரணமாக: ஒருவன் ஒரு குற்றம் செய்தவனைச் சந்தேக மிருந்தால், அக் கருவி

யின் மீது அவன் கையை வைக்கச் சொல்லி, பிறகு அக் குற்ற சம்பந்தமான பேச்சை மெள்ளத் தொடங்குவர், "தன் னெஞ்சம் தானறி குற்றப் படுவதாயின்," அவன் மனத்துக்குள் தான் அறியாமலே எழும் குற்ற உணர்ச்சியையும் படபடப்பையும், அந்தக் கருவி அளந்து காட்டி விடும். நுண்ணிய இரத்தக் குழாய் களில் இரத்தம் ஓடும் வேகம், மனப்பாங்குக்குத் தக்க வண்ணம், வினாடிக்கு வினாடி, கூடியும் குறைந்தும் நிகழ்வதே, இதன் ஆதாரம். இக் கருவி இரத்த ஓட்டத்தின் நீவிர பேதங்களை நன்கு உணர்த்து கின்றது.

இலக்கங்கள்.—முதலில் இந்தியாவில் தான் (கி. பி. 2–வது நூற்றாண்டில்) வழங்கின வென்றும்; பிறகு 9–வது நூற்றாண் டில், அரேபிய கணித சாஸ்திரி ஒருவன், இந்தியாவி லிருந்து தெரிந்து கொண்டதைத் தன் நூலில் உபயோகப் படுத்தினா னென்றும்; அந் நூல் லத்தின் பாஷையில் 1202–ம் ஆண்டில் மொழி பெயர்க்கப் பட்டபொழுது தான், ஐரோப்பாவிலே, இலக்கங் கள் முதல் முதல் தெரிய வந்தன வென்றும், "கணிதாசிரியன்" என்னும் பத்திரிகை கூறுகிறது.

கிறிஸ்தவ மதப் பிரசாரம்.—பிரிட்டிஷ் புற நாட்டு விவிலிய வேத சங்கத்தார், 1923–ம் வருஷத்தில் மட்டும், 85½ லக்ஷம் விவிலிய வேதப் புஸ்தகங்களை, கிறிஸ்தவரல்லாத ஜனங்களுக்குள் வழங்கி யிருக்கின்றனர். கிறிஸ்தவ மதத்தினர் வாழும் ஐரோப் பிய நாடுகளில் வீடு தோறும் விவிலிய நூல் இருக்கு மென்பது நிண்ணம். அதைப் படித்து, அதன்படி ஒழுக முயன்று, பிரபஞ்ச நாசகாரண மாகும் யுத்தங்களை ஐரோப்பியர் நிறுத்தி விடுவாராயின், இதனினும் மேலாகும். "பிறர் கண்ணி லுறுத்தும் துரும்பைப் பாராட்டும் நீ, உன் கண்ணி லுள்ள தூணை யேன் கவனிப்ப தில்லை?" என்பது விவிலியக் கேள்வி.

நம் அற்பப் பிரபஞ்சம்.—வான வெளியிலே புதிய பிரபஞ்சம் ஒன்றிருப்பதாக வான சாஸ்திரிகள் கண்டு பிடித்திருக் கின்றனர். நமது சூரிய மண்டலப் பிரபஞ்சத்தினும் அது வேறானது. ஒளியினும் வேகமான பிரயாணி உலகத்தில் இல்லை. வினாடிக்கு 186,000 மைல் விகிதம் பிரயாணம் செய்யும் ஒளி யானது, சூரியனிடத்தி லிருந்து பூமிக்கு வர 8 நிமிஷமாகிறது; சூரிய மண்டலத்தை ஊடுருவிச் செல்ல 8–மணி யாகிறது; நமது பிரபஞ்ச முழுவதையும் குறுக்கிட 3½ லக்ஷம் ஆண்டுகள் ஆகின் றன! இப்பொழுது கண்டு பிடித்திருக்கும் புதிய பிரபஞ்சத்தி னின்றும் பூமிக்கு வர, ஒளிக்கு, ஐம்பது லக்ஷம் ஆண்டுகள் பிடிக்கு

மென்ரூல், அப் பிரபஞ்சம் எவ்வளவு தூரத்தி லிருக்குமோ எண்ணிப் பாருங்கள்! 6-க்குப் பின் 30 ஸுன்னங்கள் (0) போட்ட எண்ணிக்கை யுள்ள மைல்களே மதிப்ப தெப்படி?

சீன பாஷை.—இது காறும் சீன தேசத்திலே இலக்கிய பாஷையா யிருந்த சித்திராக்ஷர பாஷை மிகக் கடின மானது; சாதாரண ஜனங்கள் பேசும் பாஷைக்கும் அதற்கும் வெகு தூரம். இப்பொழுது அதற்குப் பதிலாக, சாதாரணப் பேச்சு மொழியே இலக்கியங்களுக்கும் உபயோகப் படுத்தப் படுகிறது. தற்கால நாகரிகத் துக்குப் பொருந்திய இலக்கங்களும் பத்திரிகைகளும் பெருகி வருகின்றன.

இந்தியத் தொழிலாளிகள்.—வேலைக்குத் தகுந்த கூலி பெறுமல் இவர்கள் பட்டினியும் பசியுமாய்க் கஷ்டப் படுவதும், அயல் நாடுகள் சென்று அங்கே பலவித அவமானங்களையும் குரூ ரங்களையும் அநுபவிப்பதும், யாவரும் அறிந்த விஷயம். நம் நாட்டிலே தகுந்த கூலி பெறுமையின் காரணம், முதலாளிகள் அதிகம் கூலி கொடுக்க முடியா தென்ப தில்லை; அவர்களின் பேராசையே என்பது, பின் வருவதால் நன்கு விளங்கும். சணல் தொழிற் சாலைகளின் முதலாளிகளுக்கு, யுத்த காலத்திலே, நூறு ரூபா முதலுக்கு வருஷத்துக்கு 150 முதல் 300 ரூபா வரை இலாபம் கிடைத்த தென்பது பிரசித்தம். சென்ற ஏப்பிரல் 1924 உடன் முடிவான 6 மாதத்தில், சில பருத்தி மில்களுக்குக் கிடைத்த லாப விகிதம் கீழே குறிக்கப் பட்டிருக்கிறது:—

மில்லின் பெயர்.	ஒரு பங்குக்கு 6 மாத லாபம்.	ஒரு பங்கின் முதல்.
	ரூ.	ரூ.
இந்தூர்—மால்வா.	30	100
பார்வி	100	250
ஸ்வான்	100	250
சோலாப்பூர்	400	1000
பீரார்	55	200
லக்ஷ்மி காட்டன்	250	1000
மோரார்ஜி கோகுல தாஸ்	250	1000
விஷ்ணு காட்டன்	100	500
ஸெண்ட்ரல் இந்தியா	30	100

உண்மை யிப்படி யாகவே, நூற்றுக்கு நாற்பது ரூ. வரை ஆறு மாதத்தில் லாபம் அடையும் முதலாளிகள், அந்த லாபத்தைச் சம்பாதித்துக் கொடுக்கும் வேலை யாட்களுக்கு வயிற்றுக்குப் போது

மான கூலி கெரடாது வருத்துதல் பேர் அநியாய மாகும். இதில் சர்க்கார் தலை யிட்டு, தக்க கூலி கொடுக்கும்படிச் செய்தல் பொருந் தும். அறியாமையும் இல்லாமையுமே மிக் குள்ள நமது தொழி லாளிகள், தங்கள் சுதந்தரங்களைத் தாங்களே பெறும் வலிமை யடை யும் வரை, அவர்களைப் பேணுவது ராஜாங்கத்தின் கடமையே.

ஆதிச் சீனர்களின் ராஜ்ய நிலைமையும் ஞானமும்.—சீனர் களின் நாகரிகம் மிகப் பழமை யானது; தற்கால நாகரிகங்கள் பல வற்றின் மூலத்தை அதிற் காணலாம். கிறிஸ்து பிறக்க 2400 வருஷங்களுக்கு, அதாவது, இற்றைக்கு 4300 வருஷங்களுக்கு முன்னரே, அரசனை நியமிக்கப்பட்டவன், குடிகள் ஒப்பி ஏற்றுக் கொண்ட பின்பே முடி புனைவதும்; முக்கிய விஷயங்களில், மந்திரிகளை மட்டு மின்றிக் குடிகளையும் அரசன் ஆலோசனைக் கேட் டொழுகுவதும்; பெரிய உத்தியோகஸ்தரை நியமிப்பதிலும், குற்றவாளிகளைத் தண்டிப்பதிலும் பொது ஜன நோக்கத்தை அரசன் நாடி நடப்பதும், சீனர்களுக்குள் வழக்கமா யிருந்தது. "கடவுள், நமது குடிகளின் கண்களால் கண்டு, காதுகளால் கேட் கிறார்" என்று, ஆதிச் சீன சக்கரவர்த்திகள் சொல்வ துண்டு. "அரசனிலும் குடிகளே முக்கியம்" என்பது அந் நாளைப் பெரி யோர் வாக்கு. இதனால் தான், 1911–ம் ஆண்டில் முடி யரசை நீக்கிக் குடி யரசை ஸ்தாபிப்பது, சீனர் களுக்குச் சுலபமா யிருந் தது... சீன மதா சாரியாரும் மகாரிஷியு மான கன் பூஷியஸ் என்பவர், மனிதர்களின் நாகரிக வளர்ச்சியை மூன்று படிகளாகப் பிரித் திருக்கிறார்: முதலாவது, ஒவ்வொரு நாட்டாரும், தாம் மட் டும் நாகரிக முற்ற குடும்பத்தா ரென்றும், மற் றெல்லோரும் மிலேச்ச ரென்றும் நினைக்கும் காலம்; இரண்டாவது, நாகரிக முற்ற பிற நாட்டாரையும் தம்முடன் சேர்த்து மதித்து, காட்டு மிராண்டிகளை மட்டும் மிலேச்ச ராகக் கருதும் காலம்; மூன்ரு வது, காட்டு மிராண்டி களும் கூட நாகரிக மடைந்து, மனித சாதி யனைத்தும் ஒரு பெருங் குடும்பமாய் வாழும் காலம். சீனப் போதகர்கள், யுத்தங் களையும், பிறரைக் கொள்ளை யடித்துத் தான் பெருகுதலையும் என்றுமே பாராட்ட வில்லை. "பிற நாட்டார் உங்களுக்குக் கீழ்ப் படிய விரும்பா விட்டால், உங்கள் பயிற்சியை யும் ஆசார அநுஷ்டானங் களையும் மேன்மை யுறச் செய்து, அத னால் அவர்க ளுடைய இருதயத்தையும் நிதான புத்தியையும் கவ ருங்கள்" என்று, கன் பூஷியஸ் போதித்தார். இம் மட்டோ? "தன் போர் வலியைப் புகழ்ந்து பேசுபவன் குற்ற வாளியே" என்றும், "போர்த் தொழிலில் சிறந்தவர்களைப் பொது விரோதிக ளாகப் பாவித்துக் கொன்று விடுதலே தகுதி" என்றும், மென்சி

யஸ் என்பவர் கூறி யிருக்கிறார். போர் வலியை என்றுமே பாராட்டாது, தர்ம மார்க்கத்தையே பின் பற்றி வந்தார்கள் ஆதிச் சினர்கள். ஆதிச் சீனவிலே, கி. மு. 20-வது முதல் 5-வது நூற் றாண்டு வரை, நில மெல்லாம் பொதுவான ராசாங்க உரிமை யாக வும், ஜனங் களுக்குள் பிரத்தியேகமான பூஸ்திதி யென்ப தில் லாமலும் இருந்தது. ஒவ்வொரு மனிதனும், 20 வயதான வுடன், ராசாங்கத் தாரிடம் பயிரிடும் பூமி பெற்று, 60 வயது வரைப் பயிரிட் டனுபவித்து, பின்பு பூமியை ராஜாங்கத தாரிடம் ஒப்படைத்து விடுவான். 20 வயதுக்குக் கீழான வர்களையும் 60 வயதுக்கு மேலான வர்களையும், இராசாங்கமே பேணிக் காப் பாற்றி வந்தது. 'ஒருத்தன் உழையா விட்டால், ஒருத்தன் பட் டினியே கிடப்பான்; ஒருத்தி நூல் நூற்கா விட்டால் ஒரான் ஆடை யின்றிக் குளிரால் நடுங்கும்' என்பது சீனப் பழ மொழி. உழைப்பது ஒவ்வொரு வனுக்கும் கடமை யாகும். அரசனும் கூட உழுது பயிரிட வேண்டு மென்று போதித்த சீனரு முண்டு. "ஜனங்கள கொஞ்சமா யிருக்கிறார்க ளென்று வருந்த வேண் டாம்; ஒவ் வொருவனுக்கும் சமபாகமான பலன் கிடையா விட்டால் மட்டும் வருந்த வேண்டும். ஜனங்கள் ஏழைக ளென்று வருந்த வேண்டாம்; செல்வம் சமமா யின்றி, சிலரிடம் அதிகமும் சில ரிடம் குறைந்து மிருப்பதால், அதிருப்தி யுண்டானால் மட்டும் வருந்த வேண்டும்" என்பது கன்பூஷியஸின் வாக்கு. மிக்க செல்வமும் மிக்க வறுமையும் கூடா தென்பது ஆதிச் சீனர் கொள்கை. சீனவிலே, செல்வர்களும் கூட, சாதாரண ஜனங் களைப் போலவே, ஆடம்பரம், அமித போக்கியங்கள் ஒன்று மின்றி, சாமானியமாய் வாழ்கிறார்கள். இதனால், வறியோர் செல் வர்களை வெறுப்ப தில்லை...மத விஷயங்களிலே எப்பொழுதும் சீனர்களுக்குள் துவேஷமும் அசூயையும் கிடையாது. மத சம்பந்த மான போர்கள் நடந்ததே யில்லை. எவனுமே தன் மனச் சாக்ஷிப் படி நடக்கலாம்; "மனப் பட்ட தொன்றை" வணங்கலாம்.

ஐரோப்பிய நாகரிக மூலங்கள்.—ஐரோப்பியர் மற் றெல்லா ரிலும் மேலானவ ரென்றும், ஐரோப்பியர்களுக் குள்ளும் வட நாடு களில் லுள்ளவர் மேலானவ ரென்றும், ஓர் அபிப்பிராயம் பரவி வரு கிறது. சரித்திர உண்மை யாதெனில், ஆசியா கண்டத்தினர் முதல் முதல் கண்டு பிடித்து விருத்தி செய்த விஷயங்களை, கிரேக்கர்களும் ரோமர்களும மைக் கொண்டு பின்னும் விருத்தி செய்தனர்; அவ்வாறு தென் ஐரோப்பியர் விளங்கிய பொழுது, வட ஐரோப்பியர் கேவலம் காட்டு மிருண்டிக ளாக வாழ்ந்து வந்த னர்; ஆசியாவை மூலஸ்தானமா யுடைய கிரேக்க ரோம நாகரிகமே,

தற்கால ஐரோப்பிய நாகரிகத்தின் அடிப்படை. உதாரணமாக, கிருஷித் தொழிலும், காட்டுக் குதிரையை மனிதனுக்கு உபயோக மாகும் படி பழக்கினதும், ராட்டினமும், ஆசியாவின் மத்திய பாகத்தில் உற்பத்தி யானவைகளே; தற்காலவான சாஸ்திரத்துக்கு, பேபிலோனியரும் ஹிந்துக்களும் எகிப்தியருமே மூல புருஷர்கள்; கண்ணுடியை முதலில் உண்டாக்கினவர் எகிப்தியர்; காகிதத்தை யுண்டாக்கினவர் சீனர்; கணித சாஸ்திரத்தில் ஸுன்னம் என்னும் குறியை இந்தியரிட மிருந்து கற்றுக் கொள்ளும் வரை, ஐரோப் பியர் அறியா ராயினும், மத்திய அமெரிக்காவி லுள்ள மாயர் என்னும் காட்டு மிருண்டிகள் அதை அறிந் திருந்தனர்; இரும்பைப் பதனிட்டு வேண்டிய படி வேலை செய்யும் சூழ்ச்சிகளை முதலிற் கண்டு பிடித்தவர் நிகரவர் என்னும் காட்டு வாசிகள். எனவே, எந்தச் சாதியும் தான் மற் றெல்லோர்க்கும் பிறவியி லேயெ மேலான தென்று பெருமைபேச இடமில்லை யென்பது விளங்கும்.

வங்காளத்தின் பெரு நஷ்டம்—தனது புத்திரர்களில் உத் தம சிரேஷ்டர்க ளான ஸர் அஸுடோஷ் சௌதிரியையும், ஸர் அஸுடோஷ் முகர்ஜியையும் சமீபத்தில் இழக்க நேர்ந்தது வங் காள மாகாணத்துக்குப் பெரு நஷ்ட மாகும். இவ் விருவரும் ஹை கோர்ட்டு ஜட்ஜுகளாக விளங்கினவர்; மகா மேதையர்கள்; தீவிர தேச பக்தர்கள்; தங்கள் தாய் நாட்டுப் பெரியோர்களின் முதல் வரிசையி லிருந்து, அரும் பெருந் தொண்டுகள் பல இயற் றினவர். "மற்றொரு நாட்டாரின் கீழே குடிகளாய் வாழ் வோருக்கு ராஜீய வியவகார மில்லை" என்று சௌதிரி கூறின மையே, அவர் மனப் போக்கை நன்கு விளக்கும். அவரும் அவர் மனைவி யாரும் ஸங்கீதம் சித்திரம் முதலிய கலைகளைப் போஷித்து விருத்தி செய்து வந்தனர். ஸர் அஸுடோஷ் முகர்ஜி இன்னும் பிரபல மானவர். கல்கத்தா யூனிவர்ஸிடி இப்பொழு திருக்கும் பெரு நிலைக்கு இவரே முக்கிய காரணர். சென்னை யூனிவர்ஸிடி யார் கவனியாது விட்ட ஸ்ரீ. C. V. ராமன், ஸ்ரீ. S. ராதா கிருஷ் ணன் போன்ற மேதாவிகளை, இவர் அழைத்துக் கொண்டார். இவர் பிடிவாத முள்ளவர்; எதற்கும் எவரையும் அஞ்சாத நெஞ்சி னர்; பல துறைகளில் பயின்று தேர்ந்தவர். வித்தியா போதனை விஷயத்தில், இவர் அபிப் பிராயங்களை வேத வாக்குப் போல் மதிக்கலாம். ஐரோப்பிய துரைத்தன அதிகாரிகள் எவ்வளவு பெரியோர் ஆயினுமே சரி, வேண்டிய போது, அவரை அஞ்சாது

எதிர்த்துத், தான் கொண்டதையே சாதிக்க வல்லவர். வைதீக சம்பிரதாயப் பற்றுள்ளவ ரெனினும், தன் மூத்த மகள் வைதவ்ய முற்ற பொழுது, அவளுக்குப் புனர் விவாகம் செய்வித்தார். இவ ருடைய காரிய நிர்வாக சாமர்த்தி யத்தையும் சூழ்ச்சிகளையும் விய வாதார் எவர்? வித்தியா விஷயங்கள் விவாதத்தி லிருக்கும் இச் சம யத்தில் இவரிறந்தமை, இந்தியாவுக்கோர் பெரு நஷ்டமாகும்—மா.

ஸ்ரீ. வே. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C., வேள்ளக்கால்

டியில் வரும் கம்ப ராமாயணப் பகுதி, * குகப் படலத்தில் கூச முதல் எக முடிவாக உள்ள எட்டுப் பாட்டுக்கள் அடங்கியது. இந்தப் பகுதி கம்பர் கவித் திறத்தைக் காட்டும் சிறந்த பகுதிகளுள்ளே சிறந்த வற்றுள் ஒன் றென்பதை, கற்ற ரனைவரும் ஒரு மனமாக ஒப்புக் கொள்வர். இப் பகுதியே எப் பகுதியினுஞ் சிறந்த தென்பாரும் உளர். காட்டுக்குச் சென்ற இராமரை நாட்டுக்கு அழைக்கச் சென்ற பரதர் கங்கை யாற்றைக் கடக்கும் போது நிகழ்ந்தது இதில் கூறப் படுகின்றது.

பரதர் முதலியோர் தோணி யேறிச் செல்லல்.

தன்னன தம்பியும் தாயர் மூவரும்
சொன்னதேர் வலவனும் தூய தோழனும்
துன்னினர் ஏறலும், துழா துடுப்பெனும்
நன்னயக் காலினல் நடத்தல் மேயினன்.

---

* தறிப்பு.—மூதனூலான வான்மீகி ராமாயணத்திலே, குகனுக்குத் தன் தாய்மாரைப் பரதன் தெரிவிப்பதாகக் கூறும் இப் பகுதி யில்லே. பரத்வாஜரது ஆசிரமத்திலே, அம்முனிவர் கேட்க, அவருக்குத் தன் தாய்மாரைத் தெரிவிப்ப தாகவே கூறியிருக்கிறது. மூலத்தினின்றும் விலகி இவ்வண்ணம் வேண்டு மென்றே கம்பன் எழுதி யிருப்பது கவனிக்கத் தக்கது—ப-ம் ப-ர்.

பொழிப்புரை—பரதர், தம் தம்பி சத்துருக்கரும் தாய் மார் (கோசலை கைகேயி சுமித்திரை யென்பார்) மூவரும் மந்திரி சுமந்திரரும் தோழர் குகரும் தாம் வறிய தோணியில் ஏறின உடனே, அவர்களோடு கங்கை யாற்றிற் செல்வாராயினர்.

விசேடவுரை—தோணியிற் சென்றான் என்பதைத் துடுப்பெனும் காலினால் நடந்தான் என்று கூறிய நயம் சுவனிக்கத் தக்கது. இவ்வாறே "பிறர் காலால் இயங்கும் மாது" என்று சிவிகை யேறிச் சென்ற மாயையைச் சிவப் பிரகாசர் கூறியது, இக் கருத்துத் தூண்டக் கூறியது போலும்.

கோசலா தேவியை "யார்?" என்று குகன் கேட்கப் பரதர் கூறுதல்

சுற்றத்தார் தேவரொடும் தொழ நின்ற கோசலையைத்
தொழுது நோக்கி,
"வெற்றித் தார்க் குரிசில்! இவர் ஆர்? என்று குகன்
வினவ, "வேந்தர் வைகும்
முற்றத்தான் முதல் தேவி, மூன்றுலகும் ஈன்றானை
மூன் ஈன்றானைப்
பெற்றத்தால் பெறுஞ் செல்வம் யான் பிறத்த லால்
துறந்த பெரியாள்" என்றான்.

பொழிப்புரை—(பரதரோடு இராமரைக் காணவந்த) உறவினரும் (பரதர் இராமரைக் காணச் செல்வதைப் பார்க்க வந்த) தேவர்களும் (தம்மை நோக்கிக்) கும்பிடா நிற்க (த் தோணியிலே) நின்று கொண்டிருந்த கோசலா தேவியைக் குகர், கும்பிட்டுக் கொண்டு பார்த்து, "பரதரே! இவர் யார்?" என்று கேட்க, (அவர், "கண்டு தொழச் சமயம் நோக்கிக் காத்துக் கொண்டு) அரசர்கள் தங்கியிருக்கப் பெற்ற முற்றத்தை யுடைய தசரத சக்கரவர்த்தியின் முதல் மனைவி, மூன்று உலகங்களையும் பெற்ற பிரம தேவரைப் பெற்ற (ஸ்ரீமந் நாராயண மூர்த்தியாகிய) இராமரைப் பெற்றதனால் அடைந்த செல்வத்தை நான் (ஒரு பாவி) பிறந்ததனால் இழந்த பெருந் தகைமை உடையாள்" என்றார்.

விசேடவுரை—சாமானிய ரல்லாத உயர்ந்த அரசரான சுற்றத்தாரே யன்றித் தேவரும் தொழுது கொண்டிருக்கும் ஒரு வரைத் தெரிய விரும்புவோர், அவரைக்

கைந் நீட்டிக் சுட்டிக் காட்டி "இவர் யார்?" என்று கேட்டல் தகாத முறை யென்று கூறுமற் கூறித், தக்க முறை இது வென் றுணர்த்து வாராய்க் "கோசலையைத் தொழுது நோக்கி.....இவர் ஆர்? என்று குகன் வினவ" என்றார்.

மேலும், 'இவர் ஆர்' என்ற கேள்விக்குத் 'தசரதர் தேவி' 'இராமர் தாய்' என்ற விடைகள் இயல்பான விடைகளா யிருக்க, அவ் விடைகளை அவ்வாறே கூறாது, அவற்றைக் கூறும் முகத்தால், 'வேந்தர் வைகும் மூற்றத்தான்' எனத் தசரதரைச் சிறப்பித்தும், 'முதற் றேவி' எனக் கோசலையாரை மேம் படுத்தியும், 'மூன்று லகும் ஈன்றாளை முன் ஈன்றான்' என இராமரை விதந்தும் கூறுவானேன்? எனில்,—அக் கேள்வி கேட்ட சமயத்தில், கோசலா தேவியைச் சுற்றத்தாரும் தேவரும் தொழுத வண்ணமா யிருந்தன ராதலால், அத் தேவியைக் கைந் நீட்டிக் காட்டலாற் சுட்டாது, கை கூப்பி நோக்குதலாற் சுட்டின குகர், 'சுற்றத்தார் தொழுவானேன்?' 'தேவர் தொழுவானேன்?' என்று தெரிய விரும்பினு சென்பது ஊகித் துணர்தற் பாலது. இவ் வாறுகக், குகர், கேளாது கேட்ட கேள்விகளுக்கு விடைகளாகப் பரதர், 'அரசர் வணங்கும் சக்கர வர்த்தியாகிய தசரதர் பட்ட மகிஷி யாதலால், சுற்றத்தார் தொழுகின்றார்கள்; மகா விட்டுணு வின் அவதாரமான இராமரைப் பெற்றவ ளாதலால், தேவர்கள் வந்தனை செய்கின்றார்கள்' என்று தெரிவிக்க, அவ்வாறு விசேஷித்துக் கூறினுரென்க.

இன்னும், 'இவர் ஆர்?' என்ற வினவுக்குச் 'சக்கர வர்த்தியாகிய தசரதருக்குப் பிரதம ராயகி, திருமாலாகிய இராமருக்கு மாதா' என்று கூறிய தன்மேல், இராமரைப் "பெற்றதாற் பெறும் செல்வம் யான் பிறத்தலால் துறந்த பெரியாள்" என்று பரதர் ஏன் கூறினு ரெனில், அவர் மேற் கூறிய விடைகளை அளிக்கும் போது, கோசலா தேவி முன் இருந்த ஆனந்த நிலையும் இப்போது உள்ள துக்க நிலையும் அவர் மனத்தில் இயல்பாகத் தோன்றி வருத்தம் செய்ய, 'ஐயோ! நான் ஒரு பாவி பிறவா திருந்தால், இவ் அன்னையாருடைய ஆனந்த நிலை மாறி யிராதே!' என்ற எண்ணம் தோன்ற, அதனை அவசராப் வெளி யிட்டுக் கூறினுரென்க.

இனி, பரதர் தாம் பிறந்ததனால் கோசலா தேவி செல்வத்தை யிழந்தா ரென்றது, தாம் பிறக்க வில்லை

யானுல், தமக்காகத் தம் தாயார், தசரதர் இராமருக்குக் கொடுத்த இராச்சியத்தைப் பிடுங்கிக் கொண்டு இராமரைக் காட்டுக்கு ஓட்டி யிரா ரென்றும், அவர் அவ்வாறு செய்யா திருக்கவே, கோசலா தேவி தசரதர் இறவா திருக்கும் மாங்கலியப் பாக்கியத்தையும் இராமர் முடி சூடி யாளும் இராச்சியச் செல்வத்தையும் இழந்திரா ரென்ப தையும் குறிப் பித்தது.

(இன்னும் வரும்)

இராஜாங்கத்தின் கடமைகள்*

[உட்ரோ உல்ஸன்]

ராஜாங் கத்தின் கடமைகள் யாவை? இது மிகவும் கடின மான கேள்வி. இக் கேள்விக்கு, இராஜாங்கங் களின் சரித்திர விஷயங்களே நன் கறிந்தவனும் கூட, ஒரு சாஸ்திர நிபுணன் சாஸ்திர விஷயத்திற்குப் பதி லுரைப்பது போல, குருட்டுப் பாடமாக விடை யளித்தல் முடியாது. எந்த ராஜாங்கம்? என்ற சந்தேகம் பிறக்கும்; ஏனெனில், ராஜாங்கங்கள் பலவகைப் பட்டன. தவிரவும், இந்தக் கேள்விக்கு ஒரே பதில் தான் என்பது மில்லை. இதே கேள்வியை, "ராஜாங்கத்தின் கடமைகள் யாவை யாக இருக்க வேண்டும்?" என்று மாற்றி விட்டால், அபிப்பிராய பேதத்திற்கு எல்லை யிராது. ஆகையால், இரண்டு கேள்வி களையும் நாம் வேற்றுமைப் படுத்திக் கொள்ள வேண்டும்.

குறிப்பு :—* அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களின் தலைவரா யிருந்து, ஐரோப்பிய யுத்த சமாதானத்தில் சிரேஷ்டராய் விளங் கினவரும், தேசாந்தர அதிகாரத்தில் தலை யிடுமுன் புகழ் பெற்ற சரித்திர சாஸ்திர போதகரா யிருந்து அரிய பெரிய நூல்களை இயற்றினவரும், சமீபத்தில் காலஞ் சென்ற வருமான, உட்ரோ உல்ஸன் என்பவரது இராஜாங்கம் என்னும் நூலி லிருந்து, சிர. மா. அநந்த நாராயணன் சுருக்கி எழுதியது.—ப-ம் ப-ர்.

இனி, ராஜாங்கத்தின் கடமைகளைச் சிறிது ஆராய்வோம். ஆரம்பத்தில் இவைகளை இருவகைப் படுத்திக் கொள்ளுதல் நலம். சில கடமைகள் எல்லா ராஜாங்கங்களுக்கும் இன்றியமையாதன வாம்; சில கடமைகள் அநேக ராஜாங்கங்களுக்குப் பொதுவா யிருப்பினும், எல்லாவற்றிற்கும் உரியன வல்ல. ஆனால், இக் கடமைகள் இவ் வகுப்பைச் சேர்ந்தன என்று, நம்மால் முடிவாகக் கூற முடியாது. அபிப்பிராய பேதம் விளைவது நிச்சயம். முற் பகுப்பி லுள்ள கடமைகளை ஒருவாறு கூறலாம்:—

(1) சண்டை சச்சரவு நீக்குதல், ஒருவன் உயிரையும் சொத்தையும் கொலை, களவு முதலிய வற்றினின்றும் காத்தல்; (2) கணவனுக்கும் மனைவிக்கும் தாய் தந்தையர்க்கும் மக்கட்கு முள்ள நியாய சம்பந்தங்களை ஏற்படுத்தல்; (3) பண்டமாற்று பண்டம் கொள்ளல் முதலியன ஸ்தாபித்தல், கடன் தீர்க்காமல் தப்ப முயலுவோர்க்குரிய தண்டனை விதித்தல்; (4) இருவர்க்குள் ஏற்பட்ட ஒப்பந்த உரிமைகளை வரையறுத்தல்; (5) குற்றங்கள் இவை யென்றும் தண்டனைகள் இவை யென்றும் ஏற்படுத்தல்; (6) 'லிவில்' நியாயம் நடத்தல்; (7) ஜனங்களுக்கு ராஜாங்கத்தில் உரிமைகள் இவை யென்றும், கடமைகள் இவை யென்றும் வரை யறுத்தல்; (8) தற் காப்பின் பொருட்டுப் போர் புரிதல், மற்ற நாடுகளோடு உடன் படிக்கைகள் செய்து கொள்ளுதல்.

இவற்றை யெல்லாம் செய்யாமல், ஒருவித ராஜாங்கமும் நடை பெற முடியா தென்பது எளிதிற் புலப்படும். இக்கடமைகள் ஜன சமூக வாழ்விற்கு அடிப் படையானவை.

பிற் பகுப்பிலுள்ள கடமைகள் உலகத்தவரின் மனோபாவத்தையும் நாகரிக விருத்தியையும் பொறுத்தவையாதலால், அடிக்கடி மாறுத லடைகின்றன; எனினும் ஒருவாறு கூறலாம்:—

(1) வியாபார ராஜாங்கம்—இத் தலைப்பின் கீழ் நாணயம் ஸ்தாபித்தலும், ஏற்றுமதி இறக்குமதி வரிகளையும், ஒரே படியான (நீட்டல், முகத்தல், எடுத்தல்) அளவைகளையும் ஏற்படுத்துதலும் அடங்கும்; (2) தொழிற் சட்டங்கள்; (3) ரோடுகள், இருப்புப் பாதைகள் முதலியன ஏற்படுத்தல்; (4) தபால் தந்தி நிர்வாகம்; (5) வெளிச் சமும் நீரும் யாவர்க்கும் கிடைக்கும் படிச் செளகரியங்கள் செய்வித்தல்—மின்சார விளக்குக்களும் குழாய்களும்

ஏற்படுத்தல்; (6) சுகாதார நோக்கங்களுடன் சட்டங்களை ஏற்படுத்தல்; (7) கல்வி விருத்திக்கு வேண்டிய முறைகளை ஏற்படுத்தல்; (8) ஏழைகளையும் வயோதிகர்களையும் அநாதைகளையும் பாதுகாத்தல்; (9) காடு வெட்டிச் சீர் திருத்தம் செய்தல், குளம், ஏரி வெட்டுதல்; (10) அவரவர் பொருள் நிலைக்கும் அந்தஸ்துக்கும் ஏற்றபடி நடக்கும்படி விதி விலக்குக்களை நியமித்தல்; நீச் செயல்களை நீக்க முயலுதல். உதாரணமாக, மதுபான விலக்குச் சட்டங்கள்.

நாகரிகம் விருத்தி யடைவதால் இக் கடமைகள் மாறுபடுகின்றன வென்று முன்பே கூறினேனும். ஆனால் இம் மாறுபாடு, நோக்கத்தில் மட்டும் நிகழ்கின்றதே யன்றி, அவ் வளவாகச் செய்கையில் நிகழ்வ தில்லை. உண்மையில், பண்டைக் காலத்து கிரேக்க ரோம அரசியல்களும் தற்கால ராஜாங்கங்கள் புரியும் கடமைகளையே அநேக மாகச் செய்து வந்தன. இந் நோக்க மாறுபாட்டைச் சிறிது ஆராய்வோம்.

ஆதி ராஜாங்கம், "துரைத்தன உரிமைகள்" என்றும் "ஆளுரிமைகள்" என்றும் இப்பொழு துள்ள வேறுபாட்டை ஒத்துக் கொள்ள வில்லை. ரோம புரி மனிதன் ஒருவன் ரோம ராஜ்யத்தின் அம்சமாகி விட்டான். அவன் எண்ணங்கள் ராஜாங்க நன்மையைக் கோருவன வாகவே இருக்க வேண்டும். அவன் சுவாசமும் உயிரும் துரைத்தனத்தையே சேர்ந்தன. ராஜாங்கம் அற்று விட்டால் மனிதரும் அழிந்தவர் தான் என்பது முன்னோர் அபிப்பிராயம்.

பிளேடோ என்பவர் எழுதி யுள்ள "உண்மையான குடியரசு" என்ற புத்தகத்தில், இவ் வெண்ணத்தின் பிரபலம் நன்கு விளங்கு கின்றது. "உண்மைக் குடியரசில்" மக்களை வளர்ப்பதும் கல்வி போதிப்பதும் ராஜாங்கமே. விவாகம் முதலிய குடும்ப விஷயங்களிலும் ராஜாங்கம் தலையிட்டுக் கொள்கின்றது. ஒருவனுக்கு உரிமையாக ஒரு வகையான செல்வமும் கிடையாது.

ஐரோப்பாவில் கிறிஸ்து மதம் உண்டான காலத்தை யடுத்து சரியான ராஜாங்கம் நடை பெற வில்லை. ஒரு விதமாய் நம் நாட்டுப் பாளையப் பட்டுக்களை யொத்த சிற்றரசர்கள் தமக்குள் தேசத்தை ஆண்டு வந்தார்கள். நிலம் அவர்களைச் சேர்ந்ததா யிருந்தது; சேவைக்கு ஈடாக அது ஜனங்களுக்குள் வகுக்கப்பட் டிருந்தது இவ்விதமான

சம்பந்தத்திலும் ஒரு வகையான சுதந்திரமும் இல்லை. நியாயமெல்லாம் சிற்றரசன் ஆஜ்ஞை தான். அவன் மனச் சாக்ஷியே அக்கிரமத்திற்குத் தடை; காலமும் நாகரிகமில்லாத காலமாதலால், அடிக்கடி அக்கிரமங்கள் நடந்தனவென்று நாம் கூற வேண்டிய தில்லை.

ஆகையால், ஆதி ராஜாங்கத்திற்கும் ஜன சமூகத்திற்கும் வித்தியாசமில்லை. ஜன சமூகத்தின் பழக்க வழக்கங்கள் ஒருவாறு ராஜாங்கத்தைக் கையாண்டவெனினும், இரண்டிற்கும் உண்மையில் வேற்றுமை கிடையாது. ஏனெனில், "ஆளுரிமை" என்பது இன்னும் ஏற்படவில்லை. தற் காலத்திலோ "ஆளுரிமைகள்" என்ற சொல்லைப் பலர் மும்மரமாக உபயோகித்து வருகின்றனர். "மற்றவர் சௌகரியங்கள் கெடாதிருப்பதால், நான் எவ்வளவு மதுபானம் செய்தாலும், வியபசாரத்திற் புகுந்தாலும், ராஜாங்கத்திற் கென்ன?" என்பது பலர் கொள்கை. அதனால், ஆதி ராஜாங்கத்திற்கும், தற்கால ராஜாங்கத்திற்கும் கடமைகளில் வேறுபாடு அதிகமுண்டு என்று நாம் எதிர் பார்க்கிறோம்.

தற்கால ராஜாங்கமும் ரோம புரி ராஜாங்கமும் ஒன்றில்லை தான். முன்பு மனிதன் ராஜாங்கத்திற்காக வாழ்ந்தான், இப்பொழுது ராஜாங்கம் மனிதனுக்காக நடைபெறுகின்றது. இவ் வித்தியாசம் மனோபாவத்திலேயே முக்கியம்.

உதாரணமாக, சொத்து விஷயத்தை ஆராய்வோம். ஸ்பார்ட்டாவில் தனிச் சொத்தென்பது கிடையாது. நிலமெல்லாம் ராஜாங்கத்தைச் சேர்ந்தது. அது சரிபாகமாக ஒவ்வொரு ஸ்பார்ட்டனுக்கும் வகுத்துக் கொடுக்கப்படும். அதை அவன் விற்கவோ மாற்றவோ முடியாது. அதிலுள்ள வருமானத்தைக் கொண்டே அவன் வாழவேண்டியது. மற்ற நாடுகளில் இவ்வளவு கடுமையான விதிகள் இல்லையெனினும், சில விதிகள் உண்டு. ஆதன்ஸில், ராஜாங்கம், செல்வமுள்ள கன்னிகைகளை வறியவர்க்கு மணம் செய்வித்து, சொத்தைச் சமமாக்கியது. ரோம புரியில் நிலங்களெல்லாம் குடும்ப நிலங்களே.

தற்கால ராஜாங்கத்தில் இவ்வாறில்லையென நாம் நினைக்கலாம். தற்கால ராஜாங்கம் சொத்தை முழுவதும் அபகரிப்பதில்லையென்பது உண்மையே. இப்பொழுது நிலம் ஆளைச் சேர்ந்தது; ஆனால் இன்றும் ஒருவன்

சுவீகாரத் தாலோ, அல்லது விவாகத் தாலோ சந்ததி வைக்காமல் இறந்து விட்டால், அவன் பிதுரார்ஜிதம் எல்லாம் ராஜாங்கத்தைச் சேரும். இன்றும் ஒருவன் ஒரு புதையலைக் கண்டெடுத்தால் ஒரு பாகம் ராஜாங்கத் திற் குரியது. "ஆளுரிமை" யென்ப தெல்லாம் பேச்சில் தான். ஆதி கால ராஜாங்கம் அடிமை வியாபாரத்தை ஏற்படுத்தியது. தற்கால ராஜாங்கம் அதை அடியோடு ஒழித்து விட்டது. இரண்டு செயல்களும், "ஆளுரிமை" என்னும் கொள்கைக்கு மாறான வைகளே.

சுகாதாரம், கல்வி, முதலிய விஷயங்களில் தற்கால ராஜாங்கம் அதிகமாகத் தலை யிட்டுக் கொள்கின்றது. இப்பொழுது அநேக தேசங்களில் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்வது அவசியம், 'பிளேக்' முதலிய தொத்து வியாதிகளின் அடையாளங்கள் ஒருவனுக்குத் தோன்றி னால், ராஜாங்கத் தாருக்கு அவன் உடனே அறிவிக்க வேண்டும். இல்லை யெனில் தண்டனைக் குள்ளாவான். குப்பை கூளம் முதலிய தெருவில் விட் டெறிந்தால் தண்டனை உண்டு. ஆகையால் கடமைகளில் மாறுபாடு களை விட ஒற்றுமை களையே அதிகமாகக் காண்கிறோம்.

(இன்னும் வரும்)

ஆசிரியர் அச்சுப் பிரசுராலயம்—புஸ்தகசாலை

எவ்வித அச்சுப்பிரசுரமும், புஸ்தகங்கள் எழுதுகருவிகள் விற்பனையும், தரகுவேலையும் செய்யும் இடம்.

எட்வர்டு எலியட் ரோடு, மயிலாப்பூர், சென்னை

யாதானும் ஒரு வேலை கொடுத்துப் பாருங்கள்.

இப்பொழுதே புதிதாய் வெளி வந்தன

இந்து பாக சாஸ்திரம் :—பி. வி. ஜகதீசையர் எழுதியது—திருத்திய இரண்டாம் பதிப்பு—Dr. ஸர் S. சுப்ரமணிய ஐயரும், பாரிஸ்டர் P. சுப்பராயனும் முகவுரை எழுதியது—பதார்த்தங்களின் குணங்களையும் விளக்குவது	0	8	0
பாரிஸ்டர் பஞ்சாங்கம் :—அ. மாதவையரியற்றிய நாடகம்—பத்திரிகைச் சந்தாதார்க்குப் பாதிவிலை.	0	6	0
செல்வ விருத்தி :—தி. சே. சுப்ரமணிய ஐயர், M.A., L.T. இயற்றியது.	1	0	0
வேடிக்கைக்கதைகள்:— ரா. ராமபத்ர தீக்ஷிதர் —	0	4	0

குசிகர் குட்டிக்கதைகள்

நமது ஸ்திரீகளும் இங்கிலீஷ் பழக்க மில்லாதவரும் அவசியம் படிக்கவேண்டும். படிக்கப்படிக்கத் தெவிட்டாது.

முதற்பாகம்—8 கதைகள்—விலை பத்தணா தான்.

(107-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

13. "தானம் செய்ய இயலாதவன் யாதாயினும் நற் றொழில் புரியக்கடவன்; அல்லது, நீங்கு புரியாம லிருக் கட்டும், அதுவே போதும்"—குரான்.

14. "எப்பொருள் எத்தன்மைத் தாயினும், அப்பொருள் மெய்ப் பொருள் காண்ப தறிவு"—திருக்குறள்.

15. "ஏது வின்றி எனக்குத் தீங்கு செய்பவனுக்கு என் னாலான நன்மையே நான் செய்வேன்; அவனை வெறுக் கவே மாட்டேன்; வெறுப்பை வெறுப்பினால் வெல்ல முடி யாது; அன்பினால் வென்று விடலாம்"—புத்தபகவான்.

16. "ஜிஹோவா கூறினர்:—வீணை காணிக்கைகளை இனிக் கொண்டு வராதேயுங்கள்: தீப தூபங்களை நான் வெறுக்கிறேன்; உங்கள் திருவிழாக்களையும் நோன்புகளை யும் கோஷ்டிகளையும் நான் வெறுக்கிறேன்; உங்கள் ஓயாத பிரார்த்தனைகளுக்கு நான் செவி கொடேன், உங்கள் கை கள் இரத்த மயமா யிருக்கின்றனவே; கழுவுங்கள்; தூய னை ஆக்குங்கள். உங்கள் தீச்செயல்களை யெல்லாம் விட்டு விடுங்கள்; தீமை செய்வதை நிறுத்துங்கள்; நன்றே செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்"—பைபிள்.

17. "உயர்வற உயர் நலம் உடையவன் எவன், அவன்;
மயர்வற மதி நலம் அருளினன எவன், அவன்;
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவன், அவன்;
துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே"

—நம்மாழ்வார்

18. "வாய்மை என்னும் ஈதன்றி, வையகம்,
தூய்மை என்றும் ஒன்றுண்மை சொல்லுமோ?
தீய்மை தான், அதில் தீர்தல் அன்றியே,
ஆய் மெய்யாக, வேறறையல் ஆவதே!"

—கம்பராமாயணம்.



ஐயா :—ஏன்? இவள், 'கூடாது; என் அப்பாவும் அம்மாவும் வருத்தப் பட்டுக் கொள்ளுகிறார்கள், இதெல் லாம் குல ஸ்திரீக்கு அடுக்காது, நான் வர மாட்டேன்' என்று சொன்னால், அவன் கேட்க மாட்டானே? இவளுக் கும் இத்தனையும் வேண்டி யிருக்கு, நடத்துகிறாள். அவன் கையை எதிர் பார்த்து நாம் ஜீவனம் பண்ணு கிறோம், இவர்களுக்கு இவ்வளவு போது மென்று அவர் களும் வைத் திருக்கிறார்கள்.

சுப்பம்மாள் :—கை பார்க்கிற தென்ன, கை? முன் னாலே கேட்ட கைக் கெல்லாம் கொடுத்தீர்கள், இப்போது அவன் சம்பாதிக்கிறான். அப்படி என்ன தந்து விட்டான்? கடனைக் கொடுத்தா லுக்கும்: அவன் குடும்பத்துக்கு இட்டு இட்டுத் தானே கடன் முகலிலே வந்தது? அவன் கொடுக்காமல் யார் கொடுப்பார்கள்? இப்போ தின்கிற சோறென்ன, இரண்டு பேருமாய் உழைக்கிறோம், சாப்பிடு கிறோம். இந்த நாறச் சோறு எங்கே தான் கிடையாது? இதோ, ராணி போல போய் விட்டாளே, நாமில்லா விட்டால், குழந்தைகளை யார் பார்த்துக் கொள்வார்கள்? இராத்திரி வந்த வுடனே யார் சமைத்து வைத்திருப் பார்கள்? மாசா மாசம் பத்து இருபது என்று அவிழ்த்துக் கொடுத்தாலும், இந்த நாளிலே, பட்டணக் கரையிலே, நம்பிக்கை யான ஆள் கிடைக்குமா? நாமிருக்கக் கண்டு தானே அறுத்து விட்டதாம் கழுதை எடுத்து விட்டதாம் ஓட்டம் என்று, மீட்டிங்குக்கும் கூத்துக்கும் போகப் படுகிறது. இளங் கன்று பய மறியுமா? எல்லாம் நாமில்லா விட்டால் தெரியும்.

ஐயா :—இப்படி வயிறு வளர்ப்பதிலும், பிச்சை யெடுத்தாவது பிழைக்கலாம். ஊருக்குப் போனே மானால், எங்கே யாவது ஒரு நம்பர் கணக்கு, சத்திரம் மணியம், ஏதாவது ஒரு வேலை கிடையாமலா போகும்? எப்படி

யாவது மானமாய்க் காலக்ஷேபம் பண்ணிக்கொள்ளலாம். இவ்வளவுக்கு வரவிட்டு, என்னால் இனிமேல் இங்கிருக்க முடியவே முடியாது.

இதற்குள் லோபாவின் மேல் தூங்கின குழந்தை விழித்து, "அம்மா! அம்மா!" என்று அழத் தொடங்கிற்று. சுப்பம்மாள் உள்ளே போய், "அம்மா, அழாதே; என் கண்ணே, அழாதே; என் கண்ணுட்டி, அழாதே. இதோ பிஸ்கோத் திருக்கு, தின்னு." என்று சொல்லிக் குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டாள். அது பின்னும் "அம்மா!" என்று அலறி அழவே, சுப்பம்மாள் கோபம் கொண்டு: "ளொம்மா, ளொம்மா, என்று என்னத் துக்குத் தொண்டையைக் கிழித்துக் கொண்டு கத்துகிறாய் சனியனே? உங்கம்மாவை, கவர்னர் பெண்டாட்டி வரா விட்டால் நீரா தென்று வருந்தி யழைத்தாளாம்; மானங் கெட்ட சிறுக்கிக ளெல்லாம் கூடிக் கொண்டு ஏதோ நம்மைச் சீர் திருத்தப் போகிறார்களாம்; அதற்காக மீட்டிங்குக்குப் போயிருக்கிறாள், மீட்டிங்குக்கு. சோற்றிலே கிடக்கிற கல்லைப் பொறுக்க மாட்ட வில்லையாம், சொக்கனார் கோவில் மதிற் கல்லைப் பிடுங்கப் போகிறார்களாம்! வேலை வேணுமோ வேலை" என்றாள். இந்தத் தாலாட்டைக் கேட்டுக் குழந்தை முன்னிலும் அதிகமாகப் கத்தி விசிக்க லாயிற்று. உடனே சுப்பம்மாள், அதைத் தோளில் அணைத்துக் கொண்டு மெதுவாய்த் தட்டிக் கொடுத்துச் சீராட்டினாள்; அழுகை நிற்கு முன்னமே வாசலில் ஒரு 'கோச்சு' வண்டி வந்து நின்றது. வண்டிக் காரன் கீழே யிறங்கிக் கதவைத் திறக்கவே, நம் கதாநாயகி யாகிய பத்மாவதி யம்மாள் ஒரு குதியிற் படி யேறி ஓடி வந்து வீட்டுள் நுழைந்து, தன் தாயிட மிருந்த குழந்தையை வாங்கி மார் போடணைத்து முத்த மிட்டுக் கொண்டு, "அம்மாடி! உன்னை விட்டு

விட்டுப் போய் விட்டேனு? நீ அழுதையா?" என்று கொஞ்சிச் சமா தானப் படுத்திக், குழந்தைக்குப் பால் கொடுத்தாள். குழந்தையின் அழுகை நிற்கவே, அவள் தன் தாயைப் பார்த்து, "அம்மா! இப்பொழுது தான் எழுந் திருந்தேதா, இல்லா விட்டால் அப் பொழுதே முதல் படுத்துகிறதேதா?" என்று கேட்டாள்.

சுப்பம்மாள் :—"நாலு நாழிகை யாச்சு; கத்து கத் தெனக் கத்துகிறது. வைத்துக் கொண் டிருக்கப் பட்ட பாடு தெய்வம் அறியும். இப்படி யொரு குழந்தையைக் கதற விட்டு விட்டு, 'மீட்டிங்கு' என்ன வேண்டி யிருக்கு 'மீட்டிங்கு'? எல்லாம் தலை கீழாகத் தான் இந்த நாளிலே!" என்று, முகத்தைச் சுழித்து வலித்துக் கொண்டு சொன்னாள். "இம்! எல்லாம் கர்மம்; யாரை என்ன சொல்ல இருக்கு?" என்றார் ஐயாவையர்.

இதற்குள் நாராயணையரும், வண்டியை இராத்திரி எட்டரை மணிக்கு நாடகத்துக்குப் போகக் கொண்டு வரும்படி சொல்லி யனுப்பி விட்டு, உள்ளே வந்து சேர்ந் தார். மருமகனைக் கண்ட வுடன், ஐயாவையர் கொல் லைப் பக்கம் போய் விட்டார்; அவரோ, மேடைக்குப் போய் விட்டார்.

அந்த வீட்டு மாடியில், இரண்டு பெரிய அறைகளும், சூழ 'வராந்தாவும்,' திறந்த நிலா முற்றமும் உண்டு. வராந்தாத் தூண்களைச் சுற்றிப் பூத் தொட்டிகள் வைக் கப்பட் டிருந்தன. உள் ளறை படுக்கை யறை; முன் னறை படிக்கும் அறை. முன் னறையில், ஒரு பெரிய மேஜையும், இரண்டு மூன்று நாற்காலி களும், கண்ணாடிக் கதவுக ளுள்ள இரண்டு புஸ்தக அலமாரிகளும் இருந் தன; சுவர்களில் இரண்டு உடுப்பு மாட்டிகளும், அனேக படங்களும், ஒரு நிலைக் கண்ணாடியும் மாட்டப் பட்டிருந் தன. படுக்கை யறையின் வாசலோ, விசித் திரமான

ஜப்பானியத் திரையால் மறைக்கப்பட்டிருந்தது. வராந்தாவில் இரண்டு சாய்மான நாற்காலிகளும், கையில்லாத சில நாற்காலிகளும் கிடந்தன. நாராயணையர், தலைப் பாகை நீங்கலாக, ஐரோப்பியர் போலவே உடையுடுத்திருந்தார். மேலாடைகளைக் கழற்றி விட்டு, வராந்தாவில் ஒரு நாற்காலியிற் சாய்ந்துக் கொண்டு, நிலா முற்றத்தில் கரிக் கோடிட்டுப் பாண்டியாடிக் கொண்டிருந்த தன் மகனையும் மைத்துனனையும் கூப்பிட்டார். அவர்கள் அவர் வந்ததைக் கவனிக்க வில்லை. அவர் சத்தம் கேட்டவுடன், அவர் மகன் சிதாபதி, "அப்பா, நீ வந்து விட்டாயா?" என்று சொல்லிக் கொண்டே ஓடி வந்து, அவரைக் கட்டிக் கொண்டான். அவனை யெடுத்து முத்தமிட்டுக் கொண்டு, பின்பு, அவர்கள் பாண்டியாட்டத்தின் தோல்வி ஜயத்தைப் பற்றி விசாரித்தார். அவர் மகன்: "எனக்கு நாலு உப்பாச்சு; இராமுவுக்கு ஒன்று தான் ஆயிருக்கும். பாதி யாட்டத்தில் வந்தோம். எனக்குக் கன்னன், அவனுக்கு சமுத்திரம். இராமு, வா; குறையும் ஒரு கை பார்ப்போம்" என்று சொல்ல, இருவரும் விளையாடப் போய் விட்டார்கள். பின்பு நாராயணையர், பக்கத்தில் ஒரு நாற்காலி மேலிருந்த ஹிந்து பத்திரிகையை எடுத்து வாசிக்கத் தொடங்கினர். அதில் எதோ விசேஷத்தைப் பற்றி வாசிக்கவே, "பத்மீ! பத்மீ! இங்கே வா, ஒரு சங்கதி; சீதுவையும் கொண்டு வா," என்று கூப்பிட்டார். கொஞ்ச நேரமாயும் தன் மனைவி வராமையால், அவர், தன் மகனை யழைத்து, "அடே ராஜா, உங்கம்மாவைக் கூட்டிக் கொண்டு வா; அவசரமாம் என்று கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வா," என்று சொன்னார்.

சிதாபதி, "எனக்குத் தானே ஐந்துப்பு! எனக்குத் தானே ஐந்துப்பு!" என்று குதித்துக் கொண்டே கீழே

போனான். "ஹே! ஹே! எனக்கு அன்றைக்கு ஜ்ந்துப்பு ஆக வில்லையோ?" என்று சொல்லிக் கொண்டே இராம பத்திரனும் அவன் பின்னல் இறங்கிப் போனான்.

சற்று நேரத்தில் பத்மாவதி யம்மாள் மேலே வந்தாள்; குழந்தை அவள் தோள் மேல் தூங்கிக் கொண்டிருந்தது. பத்திரிகையை வாசித்துக் கொண்டிருந்த அவள் கணவர், அடிச் சத்தம் கேட்ட வுடன், "இதைக் கேட்டாயா, குட்டி? இந்த வருஷம் எழு இந்தியர்கள் கலெக்டர் பரீக்ஷையில் தேறி யிருக்கிறார்கள். என் சகபாடி செங்கசாமி ஒருவன், 'கேம் பிரிட்ஜ் ஸீனியர் ராங்கிளர்," என்று இங்கிலீஷில் சொல்லிக் கொண்டே அவளைப் பார்த்துத் திரும்பினர். அவள் முகத்தைப் பார்த்த வுடன், "இதென்ன இது? ஏன்? எதற்காக அழுகிறாய்? யார் என்ன சொன்னார்கள்?" என்று பரபரப் புடன் தமிழில் கேட்டுக் கொண்டு எழுந்து போய், அவள் கண்ணீரைத் துடைத்தார். முதலில் அவளால் பதிற் சொல்ல முடிய வில்லை. அவள் தோளில் தூங்கின குழந்தையை மெதுவாய் எடுத்துப் போய் படிப் பறையி லிருந்த ஸோபாவின் மேல் விட்டு விட்டு வந்து, அவளை அணைத்துத் தன் மடியின் மேல் ஒரு நாற்காலியில் உட் கார்த்திக் கொண்டு, மறு படியும், "ஏன்? அதற்குள் என்ன நடந்தது?" என்று கேட்டார்

பத்மா:—இல்லை, ஒன்று மில்லை; அம்மாமி என் னவோ சொன்னாள்; என்னால் பொறுக்க முடிய வில்லை; தன்னை யறியாமல் துக்கம் வந்து விட்டது.

நாரா:—அம் மாமி என்ன சொன்னாள்?

பத்மா:—மாமா வார்த்தையைத் தட்டி விட்டு நாம் 'மீட்டிங்கு' க்குப் போனது அவர் களுக்குக் கோபம்; ஊருக்குப் போகப் போகிறார்களாம். நான் இன்றிராத்திரி நாடகத்துக்கு வர வில்லை.

நாரா :—அதிருக் கட்டும்; இப்படி யானால் என்ன மாய் முடியும்? இந்த மாதிரி விஷயங்களி லெல்லாம் இவர் கள் பிர வேசித்தால் எப்படி? எங் கப்பாவை விட எனக்கு மாமாவைத் தான் நன்றாய்த் தெரியும்; நான் இவ்வளவு தூரம் முன்னுக்கு வந்ததும் அவரால் தான். அம்மா செத்துப் போன நாள் முதல், தெய்வத் துக்கு அடுத்த ஸ்தானமாக அவரை நான் பாவித்து நடந்து வருகிறேன். கொஞ்ச நாளாக என் நட வடிக்கைகள் அவருக்கு அவ்வளவு பிடிக்க வில்லை யென்பதும் எனக் குத் தெரியும்? அவர் கர்னாடக மாதிரி; வைதிகம்; அதை யறிந்தே, அவர் மனசு நோகாதபடி, நான் எவ் வளவோ ஞாபக மாயும் பய பக்தி யோடும் நடந்து வருகி றேன்; உனக்குத் தெரியாதா? பஞ்சம ஸாழை களுக்கு ஒரு நாள் விருந்து செய்ய வேண்டு மென்று எவ்வளவோ ஆசை; பார்கன் துரையையும் துரை சானியையும் இன் னும் சிற்றுண்டிக்கு ஒரு முறை கூட அழைக்க வில்லை; பிராமணரில்லாத கிறிஸ்தவர் ஒரு வரையுமே நான் சாப் பிடக் கூப்பிடுகிற தில்லை. அழைத்து அவமானப் படுத்து வதிலும் சும்மா இருந்து விடுவது நலம் என் றிருக்கிறேன்; உன்னுடன் சாப்பிடுகிறது கூட இல்லை; இதெல்லாம் அவருக்குப் பயந்து தான். இன்னும் அதிக மாக உபத்திரவப் படுத்தினால் எப்படி? இவரைப் போலவே நானும் இருந்து, இவர் அபிப் பிராயங்களின் படியே நானும் நடக்க வேண்டு மென்றால், என் படிப்பி னால் என்ன பலன்? நான் என் மனச் சாக்ஷிக்கே பொய்யனாக மாட்டேனே?

பத்மா :—எனக்கு அதெல்லாம் தெரியாமலா இருக்கு? என்ன செய்கிறது? அவர்களுக் காகத் தெரிய வேணும். இன்று நான் 'மீட்டிங்கு' க்குப் போன தற்காக என்னை ஒரு தேவடியாளிலும் கீழாகத் தான் அம்மாமி நினைக்கி றாள். மாமாவுக்குக் கோபம் ஜாலிக்கிறது. என்னிடத்

தில் பேசவே யில்லை; வலுவே பேசினேன், பதில் கூடச் சொல்ல வில்லை. இன்று நான் நாடகத் துக்கும் போனால் நாளையே ஊருக்குப் புறப் பட்டு விடுவார்கள்.

நாரா:—அம்மா இருக்க வில்லையா? அவளை விடவா இவர்கள் பக்தியும் வைதிக சிரத்தையும்? ஒரு நாள் ஒன்று சொன்ன துண்டா? 'ஆயிரங் காலத்துப் பயிர்கள், நீங்கள் வாழ வேணும், நீங்கள் சந்தோஷமா யிருக்க வேணும், உங்க ளிஷ்டம்,' என்பதைத் தவிர, வேறு பேச் சுண்டா? எதாவது நமக்கு அபாயமோ அவ மானமோ வரலா மென்று பயந்தால் மட்டும், "அப்பா, இது வேண்டாம்; நன்றுய் யோசித்துச் செய்,' என்று சொல்லுவளே யொழிய, வேறு எதற் காவது தடை சொன்ன துண்டா? இது தர்ம சங்கடம். இன்று நாட கத்துக்கு நீ வர வேண்டாம்; நானுமே போக வில்லை என்று வைத்துக் கொள்வோம்; பின்னும் ஒவ் வொரு நாளும் ஒவ் வொன்றிலும் இப்படித் தானே. செக் கடிக் கும் தம் பூருக்கும் ஒத்து வருமோ?

பத்மா:—வேறு என்ன செய்கிறது? எப்படி யாவது கூடிய வரையும் ஒப் பேற்றிக் கொண்டு போக வேண்டி யது தான்.

நாரா:—கூடிய வரை யேது கூடாத வரை யேது? நமக் குள்ளேயே இந்தக் கஷ்டந் தான். தொட்டிலி லிருந்து சுடு காடு மட்டும்,—அப்படிச் சொன்னாலும் போதாது,—பிறப்ப தற்கு முன் தொட்டு இறந்த பின் னும் கூட,-எடுத்ததெல்லாம் மதாசாரம், சாதி யாசாரம் குலா சாரம், குடும் பாசார மென்று, மனுஷனை முன் பின் அசைய வொட்டாமல், ஒய் வொழி வில்லாத நிர்ப் பந்தந் தான். பழைய வழக்கங் களால் இவ்வளவு கட் டுண்டு அடிமை களிலும் அதிகம் கிடந் தழலும் நாம், தலை முறை தலை முறை யாகப் பரா தீனமா யிருந்தலும்

ஆச்சரியமா? நான் இராஜ தானியில் முதலாக எம். ஏ. பரீக்ஷை தேறி, இரண்டு தங்கப் பதக்கப் பரிசுகளும் பெற் றிருக்கிறேன்; நூற்றுக் கணக்கான வாலிபர்களுக்கு ஆசிரிய ஞகவும் இருக்கிறேன்; என் படிப்புக்கும் அந்தஸ் துக்கும் ஏற்றப்படி என் மனை யாளையும் படிப்பித் திருக்கிறேன்; கூழோ கஞ்சியோ ஒருவர் கையை எதிர் பாராமல் சம்பாதித்துச் சாப்பிடுகிறோம்; அதி மேதாவி களும், என்னையும் தங்களில் ஒருவனக மதித்து, எனக்கு மரியாதை செய்கிறார்கள்; 'ஒது வதிற் சிறந் தன்று ஒழுக்க முடைமை' என்றும், 'கற்றபின் நிற்க அதற்குத் தக' என்றும், "தன் னெஞ் சறிவது பொய்யற்க, பொய்த்த பின் தன் னெஞ்சே தன்னைச் சுடும்' என்றும், கூறும் பெரியோர் வாக்கியங் களையே கைக்கொண்டு, என் னலேன்ற மட்டும், என் புத்திக் கெட்டிய மட்டும், நானும் ஒழுங்காய் நடந்து, பிறருக்கும் உதவி செய்ய வேண்டு மென்று ஆசைப் படுகிறேன். பொய் யில்லை, கள வில்லை, புலா லில்லை, களி சூதுக ளில்லை, நமக்கோ பிறர்க்கோ ஸந்தோஷத் தையோ, நன்மையையோ, இரண்டையுமோ கொடுக்கக் கூடிய எதொன்றையும் செய்வதற்கு, எனக்குச் சுதந்தரம் இல்லா விட்டால், என் படிப்பினு லென்ன பயன்? மற்றெதனல் தான் என்ன பயன்? எனக்கும் ஓர் அடிமைக் கும் என்ன பேதம்? பத்மீ, நான் சொல்வதைக் கேள், இது சத்தியம்: இந்த மாதிரியான நிர்ப்பந்தங்க ளெல்லாம் தொலைந்து, பிறர்க்குத் தீங் கில்லாத படி, அவரவர் மனச் சாக்ஷிக்கு விரோத மின்றி நடக்கும் சுதந்தரம் நமக்குள் இப் பொழுதினும் நாறில்லை ஆயிர மடங்கு பெருகும் வரை, வெளி வேஷமும் ஆஷாட பூதித் தனமும் பாசாங்கும் நமக்குள் அனுவசிய மாகும் வரை, நமக்கு வேறு சுதந் தரங்கள் கிடைக்கப் போகிறது மில்லை; நம் முடைய நாடு முன்னுக்கு வரப் போகிறது மில்லை."

(110-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீமதி M. லக்ஷ்மி யம்மாள்,

(B. A., Hons.) லண்டன்

ப்போழுது (சித்திரை-வைகாசி) விடு முறை நாள். என் சிநேகிதி யொருத்தி யுடனும், அவள் தாயார் தகப்பனா ருடனும், நான் 'கான்டினென்டில்' (ஐரோப்பா) ஊரு ராகச் சுற்றிக் கொண்டிருந்ததால், உனக்கு இத்தனை நாளாக எழுத வில்லை. இந்தக் கடிதத்தில் எங்கள் யாத்திரை யைப் பற்றி விவரமாய்ச் சொல்கிறேன்.

நாங்கள் முதலில் லண்டனி லிருந்து நேராகப் பாரி ஸுக்குப் போனோம்; இது பட்டணத்தி லிருந்து பங்களூ ருக்குப் போவது போல்தான்; இங்கிருந்து காலை 10-மணிக் குப் புறப்பட்டால் சாயங்காலம் 6-மணிக்குப் பாரிஸ் போய்ச் சேரலாம்; ஆனால் அதில் மூன்று மணி நேரம் (முக்கால் வாசிப் பிரயாணிகளுக்கு கப்பல் ஆடுவதால் தலை கிறுங்கும்; அப்படிப் பட்டவர்களுக்கு, அந்தப் பொழுதை மூன்று யுகமென்று சொன்னாலும் தகும்) கப்ப லேறிக் கடல் தாண்ட வேண்டும். அக்கரை சேர்ந்த வுடன், ஜனங்கள் எங்களை உற்று நோக்குவதும், கை சைகைகள் செய்து உரத்த குரலில் பேசுவதும் எங்களுக்கு விநோத மாயிருந்தது. ரயிலேறிப் பாரிஸ் போய்ச் சேர்ந்த வுடன் ஸ்டேஷனுக்கு வரும்படி நாங்கள் வேண்டிக் கொண் டிருந்த சிநேகிதர்கள் யாராவது வந்திருக்கிறார்களா என்று நான்கு பக்கமும் சுற்றிப் பார்த்தோம். ஒருவரை யும் காண வில்லை. ஒரு வாடகை மோட்டாரில் ஏறிக் கொண்டு, 'ஹோட்டல்!' என்று வண்டிக்கார னிடம் சொன்னோம். அவன் இரண்டு மூன்று இடங்களில் விசா ரித்து, பிறகு எங்களுக்கு வேண்டிய அறைகள் காலியா

யிருந்த ஒரு ஹோட்டலெதிரில் கொண்டுபோய் விட்டான். எங்களைக் கண்ட வுடன், வேலையாளிகள், காணாத கண்ட சிநேகிதர்களை வர வேற்பவர்கள் போல, முகமலர்ச்சியடைந்தார்கள்; ஒருவன் எங்கள் சாமான்களை உள்ளே கொண்டு வைத்தான்; மற்றொருவன் தன் பையி லிருந்து பணமெடுத்து மோட்டார்க் காரனுக்குக் கூலி பேசிக் கொடுத்தான்; ஒருவன் நாங்கள் அரை நிமிஷம் கூட நிற்காம லிருக்கும்படி, எங்களுக்கு நாற்காலிகள் கொண்டுவர ஓடினான். வந்தவர்களை உபசரிப்பதற் காகத் தானே அவர்கள் சம்பளம் வாங்குகிறார்கள்? மற்றவர்களுக்குத் தொந்தரவு கொடுக்காமல் சுயேச்சையாய்ப் பிரயாணம் செய்வதற்கு, நம்மூர்களை விட இங்கே எவ்வளவு சௌகரியங்கள் இருக்கின்றன என்று, ஒருவருக் கொருவர் சொல்லிக் கொண்டோம்.

அந்த ஹோட்டலில் நாலு நாள் வெகு சௌகரியமாய்த் தங்கி யிருந்தோம். லண்டனை விடப் பாரிஸ் அழகிலும் அலங்காரத்திலும் மேம்பட்டது என்று எங்களுக்குத் தோன்றிற்று. தவிரவும், லண்டனின் கரிக்கோலம் அங்குக் காணப்படவே யில்லை. முதல் நாள் சாயங்கால மெல்லாம் தெருக்களில் அலைந்துவிட்டுத் திரும்பி வந்தவுடன், எங்கள் முகங்களில் கரி பூசி யிராததைக் கண்டு, நாங்கள் அடைந்த ஆச்சரியமும் சந்தோஷமும் கொஞ்ச மல்ல. இதன் காரண மென்ன வென்றால், பாரிஸில் கைத்தொழிற் சாலைகள் அநேகமாய்ப் பட்டணத்தி லிருந்து தள்ளி யிருக்கின்றனவாம்; தவிரவும் எல்லாக் கட்டடங்களிலும் கணப்பிடங்கள் கிடையாது; வெந்நீர்க் குழாய்களால் சூடேற்றுகிறார்கள். அநேக வீதிகளில், வாசலில் பந்தல் போட்டு, பந்தலுக் கடியில் டீக்கடைகளும், பூக்கடைகளும், சில்லறை சாமான் கடைகளும் வைத்திருக்கிறார்கள். நகரத்தின் அமைப்பும், வெயிலின் பிரகாசமும், ஜனங்களின் உல்லாச நடவடிக்கையு மாகச் சேர்ந்து, பாரிஸின் வெளித் தோற்றம் பார்க்க மனோகரமா யிருந்தது.

என் சிநேகிதியும் நானும், வெகு நாளாகக் கஷ்டப்பட்டு, பாடப் புத்தகங்களி லிருந்து கொஞ்சம் பிரென்சு பாஷை கற்றுக்கொண் டிருந்தோம். அதைப்பற்றி நாங்கள் பெருமை பேசினதை நம்பி, அவள் தகப்பனார், முதலில் இங்கிலீஷ் தெரிந்த வழி காட்டியைத் திட்டம் செய்ய வில்லை. அந்த "ஏட்டிச் சுரைக்காய்" கறிக் குதவா

தென்று எங்களுக்குச் சந்தேகந் தான்; இருந்தாலும், நாங்கள் வழி விசாரிக்கப் போன போலீஸ்காரர்களுக்கு, நாங்கள் பேசும் பிரென்ச் புரியா விட்டாலும், இங்கிலீஷ் தெரிவதைக் கண்டு சந்தோஷித்து, மெதுவாய் இங்கிலீஷில் வழி கேட்டுக் கொண்டு, உரத்த குரலில் பிரென்சில்



பாரிஸ் நகரம்

அவர்களுக்கு வந்தனம் சொல்லி விட்டு, எங்கள் அறியாமையை வெளிக்காட்டாமலே நடந்துகொண்டோம். ஆனால் இந்தப் பாசாங்கு எப்படி நீடித்து நிற்கும்? நாங்கள் பகற் போசனம் செய்யப் போன ஹோட்டலில், ஒருவருக்கும் இங்கிலீஷ் தெரிய வில்லை: எங்களுக்கோ மாமிசச் சாப்பாடு உதாவது: எதாவது காய் கறிகள் வேண்டு மென்று அங்குள்ள வேலைக்காரி யிடம் எங்களுக்குத் தெரிந்த விதமாயெல்லாம் பிரென்சில் சொன்னேம்; இங்கிலீஷில் சொன்னேம்; தமிழில் சொன்னேம்; கன்னடத்தில் சொன்னேம்; ஒன்றும் பயன் பட வில்லை. அவள் சரமாரியாகப் பதிற் சொல்வ தொன்றும் எங்களுக்குத் 'தலைகடை தெரிய வில்லை'. 'கம் ஸா, கம் ஸா' வென்று அடிக்கடி அவள்

சொல்வது தான் காது கேட்டது. "ஐயோ, அகசாகி யில்லையே!" என்று, என் சிநேகிதி கையை நெரித்தாள். அவள் தகப்பனார் தனக்குப் புரிந்து விட்ட தென்று சொல்லி, அந்த வேலைக்காரியைப் பார்த்து, "கிருஷ்ணு! கிருஷ்ணு!" என்று பதிற் சொன்னார். அன்று அவளிட மிருந்து சொட்டியும் வெண்ணெயும் வாங்கிச் சாப்பி டுவதற்குள், எங்களுக்குப் போதும், போது மென்றாய் விட்டது.

பாரிஸில் நாங்கள் பார்த்த அழகிய கோவில்களையும், கோபுரங்களையும், காட்சிச் சாலைகளையும் சித்திர சாலைகளை யும் பற்றி வர்ணித்துச் சொல்லப் பொழுது மில்லை; எனக் குத் தெரியவு மில்லை. நாலு நாட்களுக்குள் நாங்கள் எவ் வளவு பார்த்திருக்க முடியும்? நாங்களாக ஊர் பார்க்கப் புறப்பட்டுப் போய் ஒரு நாள் முழுவதும் அலைந்த பிறகு, சுமார் ஒரு மாத மாவது பாரிஸிலேயே இருந்தால் தான் அந்நகரத்தின் முக்கிய காட்சிகளை ஒருவாறுகப் பார்க்க முடியு மென்று எங்களுக்குத் தோன்றிற்று. 'லூவ' முத லிய பேர்போன இடங்களை அரை நிமிஷமேனும் கண்ணாற் கண்டோ மென்று சொல்லிக் கொள்வதற்குக் கூட இடமில் லாமல் பாரிஸை விட்டுப் போவதா, அல்லது எங்கள் 'டிக் கெட்'களை வீணாக்குவதா என்று, யோசனை செய்து மலைத் தோம். மறுநாள், பிரயாணிகளுக்கு ஒத்தாசை செய்யும் ஒரு கம்பெனியா ரிடம் சென்று, எங்கள் கஷ்டத்தைச் சொன்ன வுடன், அவர்கள், தங்கள் வழிகாட்டிகளி லொரு வனை எங்களுடன் அனுப்பினார்கள். அவன் பாரிஸில் நாங் கள் பார்க்க ஆசைப்பட்ட இடங்களின் பெயர்களை யெல் லாம் ஒரு காகிதத்தில் குறித்துக் கொண்டான்; அத் துடன் அவனுக இன்னும் நாலைந்து பெயர்களையும் சேர்த்து எழுதிக் கொண்டான். அன்று சாயந்தரத்துக்குள் பாரி ஸில் நாங்கள் பார்க்காத இடம் பாக்கி யில்லை. அந்த வழி காட்டிக்குத் தக்க இனம் கொடுத்து அனுப்பி விட்டபின், அவன் பிரசங்கம் காதைத் துளையாமல், எந்தக் குட்டிச் சுவரை யாவது காலார நடந்து போய்க் கண்ணாரப் பார்க்க வேண்டு மென்ற ஒரு ஆசையைத் தவிர, எங்களுக்கு வேறொரு ஆசையு மில்லை.

மொத்தத்தில், பாரிஸில் எங்களுக்கு வாய்த்த வழி காட்டிகள் வெகு கெட்டிக்காரர்கள்; அவர்கள் அவசரப் பட்டது எங்கள் அவசரத்தை உத்தேசித்துத் தான்;

ஆனல் அப்பொழுது எங்களுக்கு வழி காட்டிகளின் குண திசயங்களைப் பற்றி அநுபவம் போதாதகினல், அவர்களின் நற்குணங்களைத் தக்கபடி புகழத் தெரிய வில்லை.

பாரிஸி லிருந்தே நாங்கள் ஒருநாள் "பான்டன்ப் ளோ"வையும், ஒருநாள் 'வர்சாயி'யையும் மோட்டார் யாத்திரை செய்து பார்த்து விட்டு வந்தோம். 14-வது லூயி அரசர் அமைத்த வர்சாயி தோட்டமும் அரமனை யும் விஸ்தீரண மாயும் பெருந் தோற்ற முள்ளனவாயு மிருந்தன. அரமனைக் குள்ளே ஒவ்வொரு அறையும், மேலும் கீழும் நாற்புறச் சுவர்களும், சித்திரங்களாலும் சிற்ப வேலைகளாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தது. வெகு நாளாய் இராஜாங்கத் தலைவர் வசிப்பிடமா யிருந்ததால், அவ்விடத்தி லுள்ள ஒவ்வொரு சாமானும் சரித்திர நிகழ்ச்சிகளை நினைப்பு மூட்டத் தக்கதா யிருந்தது. முக் கியமாய், மாரி அன்ட்வானெட்டும், நபோலியனும் கை யாண்டு வந்த சாமான்களையும், மகா யுத்தத்துக்குப் பிறகு சமாதான உடன் படிக்கை எழுதின மேசையையும், எல் லாரும் ஆவலுடன் போய்ப் பார்த்துக் கொண்டிருந்தார் கள். வர்சாயிலும், நாங்கள் பார்த்த மற்ற அரமனைகளி லும், கணக் கற்ற விலை யுயர்ந்த சாமான்கள் நிரம்பிக் கிடந் தன. தங்கக் கால் பிடித்த நாற்காலி மேசைகள், தங்க சரிகைத் திரைச் சீலைகள், இரத்தினங்கள் இழைத்த தந்தப் பெட்டிகள், அசாத்திய விலை பெறத் தக்க அலங் கார சாமான்கள், ஒவ்வொரு அறையிலும் எவ்வளவோ சேர்த்து வைத் திருந்தது. ஆடம்பர சின்னங்கள் ஆசிய தேசத்தவர் மனதுக்கே பொருத்த மானவை என்று இங்கிலீஷ் புஸ்தகங்களில் படித் திருந்த நான், ஐரோப்பிய மாளிகை களில் இவ்வளவு வீண் ஆடம்பரங்களைக் காண லா மென்று நினைக்க வில்லை.

பாரிஸி லிருந்து நாங்கள் ஸ்விட்ஸர் லண்டுக்குப் போனேம்; விடிய நாலு நாழிகைக்கு முன் எழுந்து, ரயில் ஜன்னல் வழியாக எப்பொழுது முதல் முதல் ஆல்ப்ஸ் மலைத் தொடர் தென்படுமோ வென்று ஆவலு டன் பார்த்துக் கொண் டிருந்தோம். ஆரம்பத்தில் அந்த மலைக் காட்சி ஒரு விதத்திலும் சிறப் புற்ற தாகத் தோன்ற வில்லை. கொச்சிக்குப் போகும் வழியில் மேற்கு மலைத் தொடர்க் காட்சி இதை விட எவ்வளவோ கம்பீர மும் அழகும் பொருந்தியது; குளிரில் தூக்கம் விழித்துப்

ஆல்ப்ஸ் மலை

பார்க்கும் படி இக்கு ஒன்றையும் காணேமென்று நாங்கள் சொல்லிக் கொண்டோம். வெகு தூரம் வரை இரு புறமும் சாதாரணக் குன்றுகளும், மரஞ் செடிகளுந் தான் தென்பட்டன. ரயில் செல்லச் செல்ல, அந்தக் காட்சி மாறி, நாங்கள் படங்களில் பார்த்துள்ள ஆல்ப்ஸ் மலைக் காட்சி, எங்கள் கண் முன்தோன்றி, நாற் றிசையையும் ஆகாயத்தையும் அளாவி விரிந்து கிடந்தது; ரயில், மலைத் தொடர்களின் ஊடே கூடிச் சென்றது. பனி மூடிய வெள்ளி மலைகள், மர மடர்ந்த சாரல்கள், நீரோட்டத்தால் உருண்ட பாறைக் குவியல்கள், மலையருவிகள், ஓடைகள், சுவர் போல் செங்குத்தாயுள்ள பாறைகள், மத்தியிலே திடீரென்று காணப்படும் பயிர் பச்சை செழித்த பள்ளத்தாக்குக்கள், கிராமங்கள், இவை யெல்லாந் தான் ஆல்ப்ஸ் மலைக் காட்சி, அதைப் பகுதிகளாய்த் தான் பார்க்க முடியு மெனினும். அம்மலைத் தொடரின் பெருமை, கரை யற்ற கடற காட்சியைப் போல மனத்தைக் கொள்ளை கொள்ளும். ஸ்விட்ஸர்லண்டில் உள்ள மட்டும், வியன்னாவிலிருந்து இடாலிக்குப் போகும் பொழுதும், நாங்கள் அக் காட்சியைக் கண்ணாரக் கண்டோம். அதன் மாட்சிமையையும் அழகையும் எனக்குச் சொல்லத் தெரியவில்லையே யொழிய, ஒரு காலும் மறக்க முடியாது.

நாங்கள் பார்த்த மட்டில் ஸ்விஸ் கிராம வாசிகள் பாதிப் பெயர்களுக்கு, அயல் தேசத்துப் பிரயாணி களுக்குச் சௌகரியஞ்செய்து கொடுப்பது தான், பிழைப் பென்று தோன்றிற்று, சில ஊர்களில் வீடுகளைக் காட்டி லும் ஹோட்டல்கள் அதிக மாகக் காணப்பட்டன; நாங்கள் பேசின ஜனங்கள் எல்லாருக்கும் இங்கிலீஷ் தெரிந் திருந்தது.

'இண்டெர்லாகென்' என்ற ஊரி லிருந்து நாங்கள் 'கிரன்டல்வால்ட்' கிளேசியர் பார்க்கப் போனோம். அதைக் கிட்டப் போய்ப் பார்க்க வெகு தூரம் மலை யேற வேண்டும்; ஐம்பது வருஷங்களுக்கு முன்னல் இது கஷ்ட சாத்திய மான காரியமாம்; வழி தப்பிச் சிலர் இறந்து போவது முண்டாம். இப்பொழுது கிளேசியர் அடி வாரம் வரை வேனிற் காலத்தில் ரயில் போகிறது; மற்றப் பொழுதில் முக்கால் வாசி தூரம் மோட்டாரும், குறை வழி குதிரை வண்டியும் போகப் பாதை யிருக்கிறது. வழிநெடுக டீக் கடைகள் இருக்கின்றன. நாங்கள் இறங்கின இடத்தி லிருந்து மலை யடிவார மெல்லாம், ஓர் ஆள்

இன்டர்லாகென்
(நமது பிரயாணிகளைக் காட்டுகிறது)

புருஷத்துக்கு மேல் பனி குவிந்து கிடந்தது. அங்குள்ள டீ கடையி லிருந்து பனிமிதி சோடுகளும் ஊன்று தடி களும் வாடகைக்கு வாங்கிக் கொண்டு, வழி காட்டி யின் பின்னல், அடிக்கடி பனியில் சாகி விழுந்து கொண்டு,

அடி மேல் அடி வைத்துக் கால் மைல் தூரம் நடந்து, பனிக் கட்டி மலைகள் எதிரில் நின்றோம். கண்ணுக் கெட்டிய வரையில் மலைத் தொடர்கள் பனியால் மூடி யிருந்தன. மலை யடி வாரத்தில் பனி எத்தனை அடி உயரம் விழுந்து கட்டியா யிருக்கிறது என்பதைக் காட்டும் பொருட்டு, அந்தப் பனிப் பாறையில் ஒரு குகை வெட்டி யிருந்தது. அதன் நடுவில் போட்டிருந்த பலகை மேல் நடந்து உள்ளே சென்றோம். இரு புறமும் பனிக் கட்டிச் சுவர்கள் நீல வெளிச்ச மிட்டுச் சுவாலித்தன; அரபியக் கதைகளில் வாசித்த சில அதிசய வர்ணனைகள் எங்களுக்கு நினைவு வந்தன.

குகையி லிருந்து வெளியே வந்து கிளேசியரின் அற்புத மாட்சிமையைப் பார்த்துக் கொண்டு, இது தான் கைலாசக் காட்சி என்று சொல்லிக் கொண்டு, வெகு நேரம் நின்றோம். இருட்டு வரு முன் ஹோட்டலுக்குத் திரும்ப வேண்டி யிருந்ததால், பொழுது சாயு மட்டும் அங்கிருந்து, அஸ்தமன கிரணங்கள் அந்தப் பனி மலை மேல் சோபிக்கும் அழகைப் பார்க்க வேண்டு மென்ற எங்கள் ஆசை நிறை வேற வில்லை.

நாங்கள், பான், லூஸர்ன் முதலிய ஊர்களைப் பார்த்து விட்டு, ஸுரிச்சுக்குப் போய்ச் சேர்ந்த தினம், அவ் வூரில் வஸந்தோத்ஸவம். தெருக்களி லெல்லாம் கொடிகள் நாட்டித் தோரணங்கள் கட்டி யிருந்தார்கள். நூற்றுக் கணக்கான சிறுவர் சிறுமியர், விதம் விதமாக வேஷங்கள் போட்டுக் கொண்டு, கையில் பூக் கொத்துக் களையும், காகித 'பலூன்' களையும் வீசிக் கொண்டு, பவனி வந்தார்கள். ஒரு மைதானத்தின் நடுவில், உட லெல்லாம் நரைத்து வெளுத்த பெருங் கிழவன் மாதிரி ஒரு புல் ஆரு நிறுத்தி யிருந்தது. "அவன் தான் குளிர் கால ராக்ஷஸன்; செத்துப் போய் விட்டான்; இன்று ராத்திரி வாண வேடிக்கைகளுடன் அவனை எரித்து விடுவார் கள்" என்று, எங்கள் வழி காட்டி சொல்லக் கேட்டு, நாங்களும் மிகவும் சந்தோஷ மடைந்தோம்.

இவ் வூரில் ஒரு புஸ்தகக் கடையில், மகாத்மா காந்தி யின் படத்தையும், அவரைப் பற்றிய ஒரு புஸ்தகத்தையும் கண்டேன்; எங்கள் வழி காட்டிக்குக் கூட அவர் பெயரும் கீர்த்தியும் தெரிந் திருந்தது.

(இன்னும் வரும்)

(112-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சித்திரை மாதச் சிறப்புப் பரிசு விஷயம்.

I. "தீண்டாமை என்னும் தீங்கு" என்பதைப் பற்றி இரண்டு வியாசங்களே கிடைத்தன. அவற்றுள் யாழ்ப் பாணத்து ஸ்ரீ மாந் வே. ஆ. சிதம்பரப் பிள்ளை யவர்களது கட்டுரை பரிசில் பெற்றது. அதன் முதற் பகுதியை இக் காசில் 208-ம் பக்கத்தில் காணலாம்.

மூன்றினை—வைகாசி—மாதப் பரிசு விஷயம்.

II. பொதுப் பரிசு—சரியான விடைகள் (1) வைக்கம் (2) பஞ்சாமிர்தம் மென்னும் பத்திரிகைக் கின்றே நீர் சந்தாதா ராகத் தகும். (3) வழிப் பாதை (4) உண்மை தெரிந்து, உண்மை (உள்+மை) தெரிந்து. இப் பரிசுக்கு எவரும் விடைகள் அனுப்ப வில்லை.

இந்த (ஆனி) மாதப் பரிசு விவரம்.

எல்லார்க்கும் போதுவான பரிசு—ஒரு தமிழ்ப்புத்தகம். விஷயம். திருக் குறளில் அடங்கிய 1330 கவி களில் உம் அபிப் பிராயத்தில் மிகச் சிறந்தன வாகத் தோற்றும் பத்துக் கவிகளே மட்டும் 20-7-24-க்குள் எழுதி யனுப் புக. எல்லோருடைய "வோட்டு"க்களின் படி எவர் விடை மிஞ்சு கிறதோ, அவர்க்குப் பரிசளிக்கப் படும்; மொத்தம் பத்து விடைகளுக் காவது குறையாமல் வந் தால் தான் பரிசுண்டு.

விஜயமார்த்தாண்டம்—காதற்பத்து-கற்புப்பத்து. 2-ம் பதிப்பு—நவரஸம் கொழிக்கும் நாவல்-பழமொழிக் களஞ் சியம்-விலை 1—4—0.

பாலராமாயணம்—இராமாயணக் கதையை இனிமை யாய்க் கூறுவது—விலை 0—12—0.

பாரிஸ்டர் பஞ்சநதம்—புதிய சிறிய ரஸிக நாடகம்—0—6—0. பஞ்சாமிர்தம் சந்தாதாரர்க்குப் பாதி விலை—மூன்றணு தான்.

மதிப்புரை

வரவு—I.—புஸ்தகங்கள்— (1) சத்திய வீரதன்—[S. பார்த்தஸகன், நரசிம்மபுரம், கரூர்—விலை எட்டணை—நாவல்] (2) சென்னிமலை ஆண்டவர் காதல் [B. P. சாம்பமூர்த்தி அய்யர் சன்ஸ், கச்சேரி வீதி, மயிலாப்பூர்—விலை நாலணை—பாட்டு] (3) சிவசம்பவம் அல்லது சிவாஜி மகாராஜாவின் பிறப்பு— V. கோவிந்த ராவ் இயற்றியது—மராடா பிரசு ராலயம், 37, சுந்தர தாஸ் குளத்தெரு, திருச்சிஞப்பள்ளி–8 அணை] இந்த நாடகத்தின் பின் பாகம் நன்ரு யிருக்கிறது. ஆனல் புஸ்தகம் எங்குமே அச்சுப் பிழைகள் மலிந்து காண்கின்றன. முன் பாகத்தை ஆராய்ந்து திருத்தி யெழுதி, அச்சுப் பிழைகளேயும், அசந்தர்ப்ப மான சம்பாஷணைகளேயும், உயர் நடையாகவும் சிருங்கார ரஸ மாகவும் நினைத்து எழுதப் பட்டிருக்கும் சிற் சில பாகங்களேயும் நீக்கிவிடுதல் நலமாகும்.

4. பல்லவர் சரித்திரம்—[தென்னிந்தியா வரலாற்றின் இடைப் பகுதி. இரண்டாவது–மூன்ரு வது பாகங்கள்—ஸ்ரீ. பி.தி.ஸ்ரீனிவாஸையங்கார் இயற்றியன. ஒவ்வொரு பாகத்தின் விலே பத்தணை—கிரந்த கர்த்தரிடம்—திருச்சி, தெப்பகுளம் போஸ்டு விலாசத்தில், கிடைக்கும்.] சென்ற காஸில் (110-ம் பக்கம்) எதிர்ப் பார்த்த இரண்டு பாகங்களும் கிடைத்தன. எளிய இனிய நடையில், பல மேற்கோள்க ளுடன், எழுதப் பட்டிருக்கும் இந் நூல்கள், பல அழகிய சித்திரங்க ளுடன் விளங்குகின்றன. நமது மாணவர்கள் படித்தற்கு இவை ஏற்றவைகளாம். அந்த அந்தக் காலத்துக் குரிய விசேஷங்கள் நன்கு எடுத்துக் காட்டப் பட்டிருக் கின்றன.

5. மகாத்மா காந்தி—[ரோமேன் ரோலண்ட் எழுதியதை ஸ்ரீமான் M. S. சுப்பிரமணிய ஐயர் தமிழில் மொழி பெயர்க்க, திருவல்லிக்கேணி, ஸ்ரீ. எஸ். கணேசன் பிரசுரம் செய்தது—158 பக்கம்—விலை 0—12—0]. ஒரு மகானேப் பற்றி மற்ரொரு மகான் எழுதிய இந்த ஜீவிய சரித்திரம், தெளிவான இனிய நடை யில் செவ்வையாய் மொழி பெயர்க்கப்பட் டிருக்கிறது. மகாத்மா வின் மகத்துவத்தை நன்கு அறியாத தமிழர்க ளெல்லாரும் இதை வாங்கிப் படித்து நற்பயன் அடையக் கடவர். ஸ்ரீ. எஸ். கணேசன் வெளியிட்டு வரும் தேசிய் நூல்களில் இஃது மிகச் சிறந்த தொன் ரூகும். நமது மாணவர்க ளெல்லாம் இதைப் படித்தல் நலமாகும்; ஆயின், இத்தகைய நூல்களேக் கல்வி யிலாகா அதிகாரிகள் பேணும் காலம் இன்னும் வர வில்லேயே, என் செய்வது? ப-ம் ப-ர்.

6. காந்தி புராணம்—(ஸ்ரீமதி பண்டிதை அசலாம்பிகை யம்மாள் இயற்றியது. பி. ஆர். ராம ஐயர் கம்பெனி, சென்னை-விலை ஒரு ரூபா). மதிப்புரை யாசிரியர்— ஸ்ரீ. வே. நாராயணையர், (M.A., M.L., சென்னை) எழுதுகிறார் :—

சென்னை 'நவ சக்தி' ஆசிரியர் ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியா ரவர்களின் முன்னுரையை முதலில் வாசித்தேன். 'காந்தி புராணம்' இயற்றிய அம்மையாரை அதிகம் புகழ்ந்து எழுதியதைக் கண்டதும், மூலத்தை வாசிக்க வேண்டு மென்ற அவா அதிகரித்தது. ஆயினும் இவர் பண்டையப் பண்டிதர்களின் முறையைக் கைப் பற்றிக் காரணமின்றியே விதந்து ஒரு வேளை எழுதி யிருக்கலாமோ என்றெண்ணி, சென்னைச் 'சுதேச மித்திரன்' ஆசிரியர் ஆங்கிலக் கல்வியிலும் பத்திரிகை நடத்து வதிலும் அபிப் பிராயங்களை உள்ளபடி உரைப்பதிலும் அதிகம் மேம் பட்டவ ராயிற்றே, அவர் மதிப் புரையையும் வாசிக்கலாம் என்று, அதையும் வாசித்தேன். அதுவும் முழுவதும் புகழ்ச்சி யாகவே யிருந்தது. இவற்றுல் தானே, வேறு யாது காரணம் பற்றியோ, நூலை வாசிக்கும்போது, எனக்கு அதின் தோஷங்களே தோன்றின.

இக் காலத்தில் 'காந்தி' என்று எதற்குப் பெயர் வைத்தாலும், அதைப் புகழ்வது முறையாகக் கருதி யிருப்பவர் சிலர்: புகையிலைச் சுருட்டுக் களுக்குக் கூட, அம் மகாத்மாவின் பெய ரிடுகின்றனர். காந்தியின் ஜீவிய சரித்திரத்தை எழுதியவர் பலர். தமிழ் மக்கள் பெரும் பாலார்க்கும் அவ்விதசரித்திரங்கள் பயன் படுவதற்கு, வசன நடையே பொருத்தமாக விருக்கும். அதை விடுத்துப் பாக்களினுல் யாத்திடலே மரபு என்று எழுதப் பட்ட இந்நூல், பாமரர் பலருக் கும் பயன் படா திருப்பதுடன், வேண்டிய புராணங்களோடு புராண மாய், படிப்பா ரற்று நசிக்கும். மேலும், நாம் கேள்வியுற்ற புராணங்கள் புராண விஷயங் களையே கூறுவன. புராணத்தில் விருப்ப முடையவர்களேனும் அவற்றை வாசிப்பார்கள். இந் நூலோ, பெயரில் மட்டும் 'புராணமாய்' ஆதுனிக விஷயங்களைக் கூறுவது. இங்கிலீஷ் வருஷம் மாதம் தேதிகளைக் குறிப்பிட்டும்; சட்டப் புஸ்தகங்களின் பிரிவுகளைச் சுட்டிக் காட்டியும்; சன்னது, மனு, அமுல், மஹஜர், கதர் போன்ற நிசைச் சொற்களே யன்றி, Barrister, Assessor, Congress, Government, Police, Company, Governor, Viceroy, Collector, Plague, Commissioner, Engine, Civil, Section, Advocate, Indian Penal Code முதலிய ஆங்கில மொழிகளையும் விரவி, இப்பொழுது பலர் கண்காண நடக் கும் நாடோடிச் செய்திகளை, தினசரிப் பத்திரிகையைப் போலக் கூறும் ஒரு நூலையும் புராணம் என்கலாம் என்பதை, இன்றே அறிந் தேன். எடுத்துக் கொண்ட விஷயத்தைக் கேலி பண்ணுவதா யிருப்பின், ஒருவித இலக்கிய முறைப்படி, இது பொருந்த லாகும். பண்டிதை யாரோ, அவ்வா றின்றி, மகாத்மா காந்தியின் வர லாற்றை, பக்தி சிரத்தைகளுடன் கூறுகின்றார். ஒரு விஷயத்தைச் செய்யுள் நடையில் எழுதி விட்டால் மட்டும், அஃது அழியா வாறு நிலை பெற்று விடாது. ஸ்ரீமான் கிருஷ்ணசுவாமி சர்மா எழுதி யுள்ள "இனிய தெள்ளிய நடை வசன நூலே," மகாத்மாவின் சரித்திரத்தை யறிய விரும்பும் தற்காலத் தமிழ் மக்களுக்குப் போதுமான தாகும். புராணங்களிலும் அவை பாடும் விஷயங்களி லும் தேர்ச்சியும் அபிருசியும் உடையவர், சிறந்த புராணங்களி லுள்ள

சொல் லழகையும் கவி யழகையும் கதை யழகையும் விடுத்து, ஆங்கிலம் முதலிய பிற கடுஞ் சொற்களை யிடையிட்டு, நவீன விஷயங்களைக் கூறி, ஒருமை பன்மை கூடக் கவனியா தெழுதப் பட்ட இந்நூலை * ஆதரிப்பரோ? இவ்வாறு எவருக்கும் பயன் படாத நூலை யியற்றி, நாமும் காந்தி மகாத்மாவுக்கு நம்மா லியன்ற உபகாரம் செய்தோ மென்று இவ் வாசிரியர் நினைப்பது வீணே. மகாத்மா வேண்டும் கைம் மாறும் இஃதன்று. இந்நூல் புனைவதில் செல விட்ட பொழுதைக் கதர் புனைவதில் போக்கினால், காந்தி யடிகளைப் போற்றிய தாகும்.

புராண முறையைக் கைவிடுத்து, உள்ளதை உள்ளபடி எங்கும் கூறி யிருந்தாலும், அதுவும் ஒரு மேம் பாடாக விளங்கும்; அப்படியு மில்லை. சில இடங்களில் உண்மையைத் தழுவி எழுதுவதே நோக்கம் போல், பல கடினமான பதங்களை யிட்ட பாக்களும்; அவற்றிடையே,

"செம் போதில் உறை திருவும் சிரம் துளக்கும் எழில் வளரும்
அம் பேய்ந்த விழி மடவார் விளையாடும் அணிமாடம்
தம் போதம் இழந் தமரர் தமில் மயங்க விளங்கு மெழில்
பம்பாயை"

என் றிவ்வாறான பாக்களையும் விரவி வைத்திருப்பது, படிப்போரை வருத்து கின்றது. "காந்தியைச் சிறை செய்தார்கள் எனுமொழி கடிதி லெங்கும் போந்த திந்தியர்க ளெல்லாம் புற்றெழும் ஈசல் போலச் சார்ந்தனர்."—

என்றது, எவ்வளவு அருவருப்புக் கிடமாக இருக்கிறது! காந்தி யடிகளைப் பற்றி மேனாட்டிலும் நம் நாட்டிலும் பல பிரமுகர்கள் எழுதி யுள்ள புகழ்க் கூற்றுக்களையும், காந்தி யடிகள் "யங் இந்தியா" முதலிய வற்றில் எழுதிய வற்றையும் படித்த வருக்கு, இந்நூலில் அவ்வடிகள் உணர்த்திய உண்மைகளுள் ஒன்றும் நன்கு வரையப்பட வில்லையே, யாதொரு மேன்மையும் இதில் தென்பட வில்லையே, என்ற விசனமே மேலெழும்பும். அடிகளின் வாக்கு மூலத்தின் கௌரவங் கூட, இந்நூலில் மழுங்கி யிருக்கின்றது. அதிகம் சொல்வா னேன்: காந்தி யடியா ரேனும் தமிழுல கேனும் உவக்கும் நூல் இது வாகாது. வே. நா.

II. பத்திரிகைகள்—(1) கம்பநாடர் (2) கொங்குவேள் (3) லோகோபகாரி (4) லக்ஷ்மி (5) பிரஜாபந்துகூலன் (9) இந்தியன் புக்மன் (7) குமரன் (S) தாருஸ் இஸ்லாம் (6) இந்து சாதனம் (10) எடுகேஷனல் ரிவியூ (11) இந்து நேசன்—இவற்றை அனுப்பினோர்க்கு என் வந்தனங்கள் உரியன.—ப-ம் ப-ர்.

---

* இந் நூல் அச் சேறிய காலத்தில், ஆக்கியவர் நோயுற்றிருந்த தாகவும், பிழை திருத்தங்களை நேரில் கவனிக்க முடிய வில்லை என்றும் அறிகிறோம்; இவ்விதத் தவறுகள் அதனாலிருக்கும்.—ப-ம் ப-ர்.

விகடப்பா

ஸ்ரீ. அ. மாதவையர், சென்னை

க்கும் பிராணி என்று, ஒரு பெரியவர் மனிதனைச் சிறப்பித்துச் சொல்லி யிருக்கிறார். இது பொருந்தும்; ஏனெனின், பறவை விலங்குகள் முதலிய மற்றப் பிராணிகள் எதுவும் சிரிப்ப தில்லை. இது மட்டுமோ: மனிதன் சிரிப்பது போல ஒருவாறு சில பிராணிகள் பல்லை இளிப்ப தானது, மன மகிழ்ச்சியையன்றி, அச் சத்தை யேனும் கோபத்தை யேனும் குறிக்கின்றது. இதனால், சிரிப்பு மனிதனுக்கே சிறப்பான தென்பது விளங்கும். நன்கு சிரிப்பதனால் பல நோய்கள் குணப்படு மென்றும், உடல் கொழுத்து வலி பெறு மென்றும் வைத்தியர் சொல்கின்றனர். "சிரித்துக் கொழுத்தல்" என்பது ஆங்கில வசனம். மனக் கவலைகளும், மூப்பும், உலக அநுபவமும் பெருக பெருக, இளமையிற் போல நம்மால் நன்கு சிரிக்க முடியாது என்பதை யாவரும் அறிவர். மிகச் சிலரே முதிசா இளமையினராய், குழவிப் பருவத்திற் போலக் கிழப் பருவத்திலும் சிரிக்க வல்லவரா யிருக்கின்றனர்.

'ஹாஸ்ய ரஸம்', அல்லது 'நகைச் சுவை' யால் உண்டாகும் இந்தச் சிரிப்பை, நாம் பல விதங்களில் பல வழிகளில் அடைகிறோம். விகடப்பா (Parody) அவற்றுள் ஒன்று. வசன நடையையும் விகடமாக மாற்றலா மாதலால், விகட கவனம் என்று பொதுப் படக் கூறுதல் பொருந்து மாயினும், செய்யுள்களையே இப்படி மாற்றியெழுதுவது தான் பெரு மரபா யிருத்தலால், 'விகடப்பா' என்றோம். இனிச் சில உதாரணங்களை எடுத்துக் காட்டுவோம்:—வடமொழியிலே இவ்விதப் பாவினங்கள் பல இருக்கலாம். அம்மொழிப் பயிற்சி யில்லாதவரும் அறிந்திருக்கக் கூடும் ஒன்றை மட்டும் இங்கே கூறுவோம். வேதங்களி லிருந்து பிராமணர் அத்தியயனஞ் செய்யும் பஞ்சாகியைப் பரிகசித்துக் கீரைப்பஞ்சாதி என்று வழங்குவ தித:

கிரையோ வஸாவஸதி ; வேப்பம்பூ தாள்ஸீ கொட்டி ;
மார்ஜாரம் கமயதி; அந்தப்புரம் கமயதி ;
உரீம் தாவயதி ; நவநீத பக்ஷயதி ;
பாண்டஸ் படக் ; எஜமானஸ்ய பத்னைஸ்ய கோபயதி ;
சும்சும் சப்தம் கரோதி ; எஜமானஸ்ய கோபயதி ;
அக்னிர் தண்டம் ப்ரகரதி ; மியாவ்மியாவ் சப்தம் கரோதி ;
புனர் தண்டம் ப்ரகரதி ; மார்ஜாரம் வைஸ்வத பட்டணம்
மேவாயெதந்தி !

தமிழில் வழங்கும் சில விகடப் பாக்களை இனிக் கூறுவோம் :—பின்வரும் இரண்டும் வைஷ்ணவர் திவ்ய ப்ரபந்தப் பகுதிகளைப் பரிகசிப்பன :—

(1) மார்கழித் திங்கள் மடிநிறையப் பச்சரிசி
வாயாலே தின்னுல் வயிற்றுல் எடுக்கும்.

(2) பச்சைமா ; மலைபோல் மேனி ; பவளவாய் ; கமலச்
[செங்கண் ;
அச்சுதா ! அமரர் ஏறே ! திருவரங் கத்துள்ளானே !
இச்சகம் அனைத்தும் வேண்டேன் ; இந்திரபோகம் வேண்
[டேன் ;
நிச்சலும் இந்த த்தோசை நேர்ந்திடா தருளுவாயே.

பின்னதில் நகைச் சுவை முதலடியின் சிலேஷை பற்றியது. பின்வரும் பாக்கள் சைவ சமய நூல்களின் செய்யுள்களைப் பரிகசிப்பன.

(1) முற்றின முருங்கைக் காயை, மோர்க்கறி வைக்கச்
சொன்னேன்,
அத்தையைப் படைக்கச் சொன்னேன், தொப்பையைக்
[காட்டினளே !
திருச்சிற்றம்பலம்—பொரிச்சுத்தின்கலாம்.

(2) அண்ண னெனவன் தம்பிக்கு மூத்தவன் ;
திண்ணை யானது தெருவிற் குயர்ந்தது ;
பண்ணை யானது மூங்கிலின் பண்ணையே ;
எண்ணெ யானது வாணியன் எண்ணெயே.

"நெடுமால் திருமருகா" என்று வரும் செய்யுளையும், "ஆனை எருத்தம் பொலிய" என்று வரும் செய்யுளையும் பரிகசிக்கும் பாக்களைப் பலரும் அறிந்திருப்பர்.

ஆண்டிகள் "சங்கர சங்கர சம்போ !" என்று பாடுவதைப் பின்வருவது தழுவியது :—

தருவைக்கு மேற்கே சங்காணி—வெள்ளம்
தானே வரும்போது விடுவானே தோணி
இரும்பால் அடித்ததே ஆணி—எருமை
என்னத்தைத் தின்னுலும் போடுமே சாணி—சங்கர.

இனி, ஸங்கீத ஸம்பந்தமான சில விகடப் பாக்களை எடுத்துக் காட்டுவோம்:—பரத நாட்டியத்தில் வழங்கும் காம்போதி வர்ணத்தின் ஒரு பகுதியைப் பரிகசிப்ப தாவது:—

கம்பைக் குத்தடி, களியைக் கிண்டடி,
கலவன் கீரையைச் சுண்டடி;
இலையைப் போடடி, எடுத்து வையடி
தின்பெலெ நின்கமாட்டேலெ? ஓனனே வகலேமிரா?

பின்வரு மிரண்டும் கல்யாணப் பந்தரில் பாடும் பாட்டுக்களைப் பரிகசிப்பன:—

(1) சோமாம் மிளகாமாம்;
சேர்த்தரைத்தால் விழுதாமாம்;
கரைத்து விட்டால் ரஸமாமாம்
மாப்பிள்ளைக்கு கடுப்புவலி இதமாமாம்.
உப்பாமாம் புளியாமாம்,
ஒன்று சேர்ந்தால் குழம்பாமாம்;
மாக்கரைத்தால் மணமாமாம்;—மாப்பிள்ளை
மண்டுவனும் ஒரு சட்டி.

(2) பட்டுப் பாவாடை தாரேன், தட்டுத் தக்காணிதாரேன்,
மிட்டாயி வாங்கித்தாரேன் வா வா வா!

இதுவரை தமிழி லிருந்து எடுத்துக் காட்டிய விகடப் பாக்களுக்கும் ஆங்கிலத்தில் பிரபலமாய் வழங்கும் விகடப் பாக்களுக்கும் சில பேதங்கள் இருக்கின்றன. இவை பெரும்பாலும் கொச்சையான, கீழ்த் தரமான நகைச் சுவையையே விளைப்பன; பண்டிதரன்றி சாமானிய ஜனங்களே உகப்பன; மேலான சுவை நலம் இல்லாதன என்றே சொல்லலாம். ஆங்கிலத்திலும் இவை போன்ற கொச்சையான விகடப் பாக்கள் உளவெனினும், அந்தப் பாஷையிலே, பலகலைப் பண்டிதரும் இன் கவி வாணரும் நற்சுவையறி மேதையரும் மெச்சிப் புகழ்ந்து அநுபவித்தற் குரிய விகடப் பாக்கள் மிகப் பலவுள. அவை, வம்பராலும் வீணராலும் விகட கவிகளாலும் கொச்சை மக்களாலும் செய்யப்பட்டன வல்ல; கல்விப் பயிற்சியும் புலமையும் கவித்திறனும் ஒருங்கு வாய்ந்த மேதாவிகளால் செய்யப்பட்டன. நாம் பரிகசிக்கப் புகுந்த புலவனது கவி நடையையும் சிறப்புக் களையும் பதப் பிரயோக விசேஷங்களையும் கருத்துப் போக்கையும் கூட, "பருந்தொடு நிழல் சென்றன்ன" உடன் தழுவிச் சென்று, நயமாய், சாதுர்யமாய், ரஸமாய்ப் பரிகசிப்பன. அத்தகைய விகடப்பா ஒன்றினைக் கேட்ட மாத்திரத்திலே, அது இன்ன கவியைப் பரிகசிப்

பது என்று அறிஞர் கூறலாகும். இது வன்றி, ஆங்கில விகடப் பாக்கள், கீர்த்தி பெற்ற கவிஞ்சர்களின் கியாதி பெற்ற காவியப் பகுதிகளைப் பரிகசிப்ப துண்டெனினும், தேவாரம் திருவாசகம் திருவாய்மொழி போன்ற சமய நூற் பகுதிகளைப் பரிகசிப்ப தில்லை. ஒரு கவியினது நடை நயங்களையும் துட்பங்களையும் கற்றுக் கரைகண்ட புலவனே அத்தகைய விகடப் பாக்கள் எழுதலாகும். ஆங்கிலத்தில் சிறந்து திகழும் விகடப் பாக்களின் முக்கிய அம்சங்களா வன :—(1) பரிகசிக்க எடுத்துக் கொண்ட பகுதி, மூலத்தில் மிகச் சிறந்ததாய், பேர் போனதாய், பலர் அறிந்ததா யிருக்க வேண்டும் (2) மூல கவியின் நடை துட்பங்களை யும், சொல்லாட்சியையும், பாவினம் அல்லது 'வர்ணமெட் டை' யும், கருத்துப் போக்கையும், அவனுக்கே சிறப்பாக வுள்ள பிற அம்சங்களையும் நெருங்கித் தழுவிச் செல்ல வேண்டும். (3) மூல கவியின் கவிநடை, கருத்தொழுங்கு களிலுள்ள குற்றங் குறைகளை, துரும்பைத் தூணாக்குவது போல முற்படுத்தி விளக்கி எடுத்துக் காட்டிப் பரிகசிப்ப தா யிருக்க வேண்டும். (4) சிற்சில விடங்களில், மூலமோ விகடப் பிரதியோ என்று பலர் சந்தேகிக்கும்படி அவ்வ ளவு பொருந்தி யிருத்தல் வேண்டும். (5) விகடப்பா வானது பொருத்தமான பொரு ளில்லாததாய், அல்லது இழி பொருள், பயனில் பொருள் தருவதாய் இருத்தல் வேண்டும்.

இவ்வண்ணம் இயற்றப்படும் விகடப் பாக்கள், மேலாக எழும் நகைப்பு மட்டோடு நில்லாது, மூளைக்கும் நல்விருந் தாகும். பழைய காலத்தில் "ஊசிமுறி" என்று, இவ்வ கை நூல் ஒன்றிருந்ததாம். இக்காலத்தில், "கீத்திசூடி" "கிறள்" என்று இரண்டு நூல்கள் அச்சேறி யுளவாம்.

இவற்றை அறிந்தோர் எழுத வேண்டுகிறேன்.

(இன்னும் வரும்)

உதயணன் நாடகம்

ஷேக்ஸ்பியர் கவிஞ்சரது மிகச் சிறந்த ஒதெல்லோ நாடகத்தை மிகப் பொருத்தமாய் அழகாய்த் தமிழில் அமைத் தெழுதியது.

இது வரை படித்திரா விட்டால் இன்றே வாங்குங்கள்

இரண்டாம் பதிப்பு—விலை 0—12—0

தென்னிந்திய விளையாட்டுக்கள்

1. பச்சைக் குதிரை தாண்டுதல்

ஸ்ரீ. P. V. ஜகதீசையர், சென்னை

இந்த ஆட்டம் மணற் பாங்கான இடங்களிலும் புல் தரை வெளிகளிலும் விசேஷமாய் ஆடப்படும். இப்பெயர் என் வந்ததோ தெரியாது. ஆங்கில தேசத்தவர் இந்த ஆட்டத்தைத் 'தவளைக்குதி' என்பர். கீழே விழுந்தால் காயம் படக் கூடிய ஆட்டமாகையால் பத்திரமாய் ஆட வேண்டும். இதை ஆடும் முறை:—

ஒருவன் இடுப்பை வளைத்துக் கைகளால் முழங்காலைத் தொட்டுக் கொண்டு நிற்க, வரிசையாக ஒரு பக்கமாக நிற்கும் மற்றைய விளையாடுபவர்கள், கொஞ்ச தூரத்திலிருந்து ஓடி வந்து,

அவனைத் தாண்டிக் குதிப்பார்கள். அப்படித் தாண்டிக் குதிக்கத் தவறினவன், தான் குனிந்து நின்று, முன்னின்றவனும் மற்றவர்களும் தன்னைத் தாண்டிக் குதிக்க விட வேண்டும். இவ்வாறு எவ்வளவு பெயர்கள் வேண்டு மானலும் எவ்வளவு நேரம் வேண்டு மானலும் விளையாடலாம். இது, சிறுவர் ஆடுவதன்றி, சிறுமிகள் விளையாட்டில்லை.

தென் இந்தியாவில், சங்கிராந்திப் பண்டிகை முதலிய காலங்களில், சிறுவர்கள் மாத்திரமே யன்றி வயது வாய்ந்தவர்களும் கூட "பலீன்சடு குடு" என்ற ஆட்டத்தையும், பச்சைக் குதிரை தாண்டல் என்ற மேற்கூறிய ஆட்டதையும் ஆடிப் பொழுது போக்கும் வழக்கம் ஏற்பட்டிருப்பது, அவ்வாட்டங்கள் ஜனங்களுக்கு எவ்வளவு பிரியமானவை என்பதைக் காட்டுகிறதே யன்றே? மூச்சைப் பிடித்துக் கொண்டு, சிறுவர்களும் மற்றவர்களும் ஒருவரை விட ஒருவர் ஜாஸ்தியான உயரத்தைத் தாண்டிக் குதிக்க முயற்சி செய்யும் இந்த ஆட்டம், ஒரு விதத்தில் சாதாரணமான ஆட்டமெனக் கருதப் படினும், தேகப் பயிற்சி விஷயத்தில் சிறந்த தெனவே கொள்ள வேண்டும்.



பத்மாவதி சரித்திரம்.

தமிழ் நாவல்களில் எல்லாம் முதன்மை யுற்றது.
ஐந்தாம் பதிப்பு—முதலிரண்டு பாகங்களும் சேர்ந்தது.
416 பக்கங்களும் 10 படங்களும் உள்ளது
விலை ரூ. 2—0—0.

பாரிஸ்டர் பஞ்சாதம்.

நாலு காட்சிகளில் ஒரு சிறிய இனிய ரஸிக நாடகம். வீடுகளில் சிறுவர் சிறுமிகள் கூட ஆடிப் பார்க்கலாம். கிளேஸ் கடிதத்தில் முகப்புச் சித்திரப் படத்துடன் அழகாய் அச்சிடப் பெற்றது. நமது நாட்டுப் பழக்க வழக்கங்களை நன்கு பாராட்டுவது. படிக்கப் படிக்க வேடிக்கையா யிருக்கும்.

விலை--ஆறணாத்தான். தபிப்பு.—பஞ்சாமிர்தம் பத்திரிகைக்கு வருஷச் சந்தாதார் ஆகுபவர்க்கு இந்த இனிய நாடகம் பாதி விலை (0–3–0) க்குக் கொடுக்கப்படும்.

புது மாதிரிக் கலியாணப் பாட்டு.—யாவரும் கட்டாயம் வாசிக்க வேண்டியது. விலை 0—2—0.

பஞ்சாமிர்தம் ஆபிசு, மயிலாப்பூர், சென்னை.

பத்திராதிபர் குறிப்புக்கள்

(178-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

லீ கமிஷன் ரிப்போர்ட்—நம்மை ஆளும் துரைத்தன அதிகாரிகளில் மேல் வகுப் பாரான இந்தியன் ஸிவில் ஸர்விஸ் (I. C. S.) முதலிய உத்தி யோகஸ்தர் களுக்கு அதிகச் சம்பளமோ சௌகரியங் களோ வேண்டு மானால், ஒரு ராயல் கமிஷனை, அதாவது, சக்கர வர்த்தி யாரால் நியமனம் பெற்ற ஒரு விசாரணை சங்கத்தை, ஏற் படுத்தி விடுகிற தென்பது வழக்கம். அவ் வாறே, முற்றிலும் அனுவசிய மாக, ஏற் பட்டது இந்த லீ கமிஷன். அப் பொழுதே 'இது வேண்டாம், வேண்டாம்' என்று இந் நாட்டார் முறை யிட்ட தெல்லாம், செவிடன் காதில் சங்கை ஊதியது போலாயிற்று. ஐந்து வருஷங் களுக்கு முன் ஆட்சித் திருத்தங்கள் ஏற் பட்ட தன் பலனை, ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்கு மட்டும், அதிகச் சம்பளமும் பென்ஷன் வகையராக்களு மாக, நாலு கோடி ரூபா வரை அதிகச் செலவு ஏற் பட்டது; இப் பொழுது, இந்த ரிப்போர்ட்டின் பலனை, கோடி ரூபா வுக்கு மேல் அதிகச் செல வாகுமாம். அன்றியும், இந்தியாவின் கீழான நிலைமையையும் பரா தீனத்தையும் சாசுவத மாகக் கருதியே, இந்த ரிப்போர்ட் எழுதப் பட் டிருக்கிறது. ஆதலால், இந்த ரிப்போர்டை, நாட்டி லுள்ள எந்தக் கட்சி யாருமே ஒப்புக் கொள்ள வில்லை. நாட்டார் என்ன என்ன சொன்னாலும், ரிப்போர்ட்டின் படி நடந்தே தீரு மென்பதே, இப் பொழு துள்ள துரைத்தன நீதியை அறிந்தவர் நம்பிக்கை. என்ன செல வேற் பட்டாலும் சுமந்து வரிக் கொடுக்க இந்தியக் குடி யான வர்கள் இருக்கிறார்க ளன்றோ?

(யுத்த வீரரைப் பற்றி ஆங்கில கவி பாடி யிருப்பதுபோல)

"ஏன்"? என்று கேட்க அவர்க்கு உரிமை யில்லை;
உழைத்து, உயிர் விடுவதே அவர் கடனாகும்!"

ஸர் சங்கர நாயர்-ஓட்வியர் வழக்கு—நம் நாட்டுத் தலைவர் களில் ஒரு வாரா யிருந்து, பிறகு ஸர்க்கார் அதி காரம் வகிக்கத் தொடங்கி, இந்திய கவர்ன் மெண்டு நிர் வாக கவுன்ஸிலர்களில் ஒருவ ராக விளங்கின ஸர் சங்கரன் நாயர், மகாத்மா காந்தியைப் பற்றி எழுதின புஸ்தகத்தில் அவரைப் பழித்ததால், நாட்டார் பலர்களின் வெறுப்பை யடைந்தார்: ஆனல், ஸர்க்கார் அதிகாரிகள் எல்லோரை யும் திருப்தி செய்யவ மில்லை. தன்னை அந்தப் புஸ்தகத் தில். அவதூறு செய்ததாக, பஞ்சாப் மாகாண கவர்னரா யிருந்த ஸர் மைக்கேல் ஓட்வியர், ஸர் சங்கரன் நாயர் மீது மாநஷ்டி வழக்குத் தொடர்ந்து, கேஸையும் ஜயித்து விட்டார். 500 பவுன் நஷ்டியும், இருபதி னாயிரம் பவுன் வரை வழக்குச் செலவும் கொடுக்கும் படித் தீர்மான மாகி விட்டது. நாடெங்கும் வரி வைத்து ஸர் நாயருக்கு ஏற் பட்ட நஷ்டத்துக் காக ஈட்டுப் பரிசு கொடுக்க வேண்டு மென்று பல பத்திரிகைகள் கூறு கின்றன. வழக்கை விசாரித்துத் தீர்ப்புச் சொன்ன பிரிட்டிஷ் நியாயாதி பதி, ஜூரி களுக்கு வழக்கு விவரத்தையும் சட்டத்தையும் எடுத் துரைக்கும் பொழுதும், விசாரணை முழுவதுமே, வாதி பக்க மாகவே முனைந்து நின்று, ஓர வஞ்சக மாக நடந்து கொண்டதை, பிரிட்டிஷ் பத்திரிகை களுமே கண் டிக் கின்றன. வேலியே பயிரைத் தின்னல் தெய்வம் தான் காக்க வேண்டும்.

இப்பொழுதே ஆர்டர் செய்யுங்கள்!

1. குசிகர் குட்டிக் கதைகள்—முதல் பாகம்—எட்டுக் கதை——விலை 0—10—0.

2. ஷெ இரண்டாம் பாகம்—எட்டுக் கதை 0–10–0.

இந்த இரண்டாம் பாகம் இன்னும் ஒரு வாரத்தில் வெளி வந்துவிடும். இரண்டு பாகங்களையும் சேர்ந்து வாங்கு வோருக்கு—மொத்தம் 16 கதைகளுக்கும் விலை ஒரு ரூபா தான். ரூ. 1—4—0 இல்லை. இதைக் கவனிக்கவும்.

THE AUTHORS' PRESS
& PUBLISHING HOUSE
PRINTERS, PUBLISHERS, BOOK-SELLERS,
EDWARD ELLIOT ROAD, MYLAPORE, MADRAS

சென்னை மாகாண உபாத்தியாயர் சங்கம்—திருநெல் வேலியில் கூடிய பொழுது தலைமை வகித்த ஸ்ரீமான் எஸ். ஸத்திய மூர்த்தி யையர் பேச்சில் ஒரு விஷயம் மக்களைப் பெற்றோர் எல்லோரும் கவனிக்கத் தக்கது: ஒவ் வொரு மானவனும் (1) தன் தாய் மொழியையும் (2) இந்தியாவின் பொதுப் பாஷையாக ஹிந்து பாஷையை யும் (3) ஹிந்துக் களின் நாகரிகக் களஞ்சிய பாஷையான ஸம்ஸ் கிருதத்தையும் படிக்க வேண்டு மென்று சொல்லி யிருக்கிறார். இங்கிலீஷைப் படிக்க வேண்டும், அல்லது படிக்க வேண்டா மென்று தெளிவாய்ச் சொல்ல வில்லை. தற் காலத்தில் நாடுள்ள நிலைமையினால், எக் காலத்திலுமே இனிமேல் இணைத்துத் தவளையைப் போல் இந்தியா இருக்க முடியாது; உலகத்தி லுள்ள வேறு பல நாகரிக சாதியார் களுடன் பல விதங்களில் உற வாடியே வாழ வேண்டும்; எவருமே இதை மறுக்கார்; ஆயின், அவ்வா று உறவாடுவ தற்கு இங்கிலீஷ் இன்றி யமையாதது; ஆகவே (4) இங்கிலீஷையும் படிப்பது அத்தி யாவசிய மாகிறது. இதனால், ஒவ் வொரு தென் னிந்திய வித்தி யார்த்தியும் நான்கு பாஷைகளை யாவது கற்க வேண்டு மென்று ஏற்படு கிறது. தமிழ் மக்களுக்கு, ஹிந்தியும் ஸம்ஸ்கிருதமும், இங்கிலீஷைப் போலவே, அந்நிய பாஷைகளை யாகும். எனவே, தாய் மொழி தவிர, மூன்று அந்நிய பாஷைகளை ஒவ் வொருவரும் படிப்பது எப்படி? நம்மவர்களின் ஜீவிய காலமோ குன்றி வருகின்றது; தரித்திரம் பிடுங்கித் தின்கின்றது; ஏழைப் பிள்ளைகள் (பணக்காரர் மிகச்சிலரே) சிறு பிராயத்திலேயே ஏதாவது சம்பாதித்தால் தான் பிழைப்பென் றிருக்கின்றது. வர்ணாசிரம தர்மமாவது மீண்டும் நிலைத்து, பிராமண ரெல்லாம் ஸம்ஸ்கிருதமும் தாய் மொழியும், க்ஷத்திரிய ரெல்லாம் ஹிந்தியும் தாய்மொழி யும், வைசிய ரெல்லாம் இங்கிலீஷும் தாய்மொழியும், சூத் திர ரெல்லாம் தாய் மொழி மட்டும் கற்க தென்று ஒரு வாறு பொதுவா யேற்பட்டாலும், சுலபமா யிருக்கும். அதுவோ முடியாத காரியம்; கை கூடுவ தாயினும் விரும்பத் தக்க தன்று. ஹிந்திக்கும் இங்கிலீஷுக்கு மூள்ள போட்டி விஷயம், விவாத விஷய மென்பதையும், நாட்டுத் தலைவர் களில் அநேகர் மனப் பூர்வமாய்ப் பலத்த கொள்கையைக் கொண் டுள்ள விஷயம் என்பதையும், நான் நன்கு அறிவேன். அவர்கள் கொள்கையின் மூலா தாரங்களை அறியாதவனு மில்லை. எனினும், தென்

னிந்தியா மட்டும், இவ் விஷயத்தில், இந்தியாவின் மற்றப் பாகங்களைப் போலில்லை என்பதை, மறக்க லாகாது; சாத்தியா சாத்தியத்தையும் கவனித்தே தீர வேண்டும்.

இந்தியன் நாஷனல் காங்கிரஸ்—இந்திய தேச பக்தர்களுடன் சில ஐரோப்பியரும் அதிகார வர்க்கத் தாருமே கூடிக் கலந்து ஸ்தாபித்த இந்த ஸபை, ஆண்டு தோறும் பிறந்த நாளை மட்டும் கூடிப் பேசிக் கொண்டாடிச் சில வருஷங்களைக் கழித்தது. பிறகு அதிகார வர்க்கத்தினரின் அப் பிரியத்தை யடைந்து சில வாண்டுகள் கழிந்தன. அப்பால் இந்த அப் பிரியம் முதிர்ந்து, துரைத்தனத்தார் இச் சபையை அஞ்சவும், அதைச் சேர்ந்தாரை இம்சிக்கவும், அல்லது உத்தியோகங்களைக் கொடுத்து வாயடைத்து விடவும், தொடங்கினர். இப் பொழுது சில வருஷங்களாக உலகப் பிரசித்தி யடைந்து, துரைத்தனத்தாரின் அச்சத் துடன் மதிப்பையும் பெற்று, நிலையான நீடித்த நன்மைகளை நாட்டுக்குச் செய்யவும், அதிகாரிகளின் அதிக் கிரமச் செயல்களை அடக்கவும், துரைத்தனத்தின் தூராலோசனைகளைத் திருப்பவும் மாற்றவும், பிரிட்டிஷ் பார்லி மெண்டாரின் மதிப்பையும் கவனத்தை

விஜயமார்த்தாண்டம்

ஸ்ரீ. அ. மாதவையர் எழுதியது.

திருத்திய இரண்டாம் பதிப்பு—276 பக்கங்கள்—விலை 1—4—0.

I. காதற் பத்து.—(1) குப்பை யுயரக் கோபுரந் தாழ்ந்தது. (2) கஷ்ட காலத்தில் இஷ்டனை யறி (3) இலவு காத்த கிளி (4) சுண்டெலியும் சிங்கமும் (5) மூர்க்கராஜா துர் மந்திரி 6) வெளுத்த தெல்லாம் பாலா? (7) சாகத் துணிந்தால் சமுத்திரம் முழங்கால். (8) ஆறிலும் சாவு நூறிலும் சாவு, (9 தானொன்று நினைக்கத் தெய்வ மொன்று நினைத்தது. (10) தன்வினை தன்னைச் சுடும்.

II. கற்புப் பத்து.—(1) ஆடு பிழைத்தால் ஆட்டு மயிர்தான் தருவார் யார்? (2) எரிகின்ற வீட்டில் பிடுங்கினது லாபம் (3) ஊக்கமது கைவிடேல் (4) புலி பசிக்கினும் புல்லைத் தின்னுமா? (5) வேலியே தின்றால் தெய்வமே காவல் (6) பெண் ஜன்மமோ புண்ஜன்மமோ? (7) மூடன் வாழ்வு மூன்றே நாள். (8) மந்திரம் கால் மதி முக்கால், (9) எரிகிற தாடியில் சுருட்டுப் பற்ற வைத்தல் (10) அடாது செய்வார் படாது படுவார்.

III. நிகழ்கால நிலைமை.————அடுத்த பக்கம் பார்க்க,

யும் கவரவும் வல்லதாய், இச் சபை விளங்கி வருகின்றது. இந்தியாவைப் போன்ற இவ்வளவு பெரிய நாட்டிலே, பல சாதிகளையும் மதங்களையும் ஆசார அநுஷ்டானங்களையு முடைய பல கோடி மகா ஜனங்களின் பிரதி நிதி ஸ்தானத்தை வகிக்கும் ஒரு சபையார், பெரும் பாலும் ஆலோசனை சபையாராக வேலை செய்வ தன்றி, காமே நேரில் ஒவ் வொருவரும் நாட்டுக்கு நல மெனக் கருதப் படும் கைங்கிரியங்களைக் கட்டாயமாய்ச் செய்வ தென்பது பொருந்காத தாகும். அந்தக் கைங்கிரியங்கள் தாமும், எல்லாருமே ஏகோபித்து மன மொப்பினவைகளா யின்றி, அபிப்பிராய பேத முள்ளவைக ளாயிருப்பின், அவ்விதப் பிர வர்த்தியில் இவ்விதச் சபையார் தலை யிடுவது தவறே யாகும். இப்படிப் பட்ட நிர்ப்பந்தங்கள் இல்லாமலே, நாடு பல பிளவு பட்டு, கட்சிகள் பெருகி, காங்கிரஸ் சபை பிறர் மதிப்பையும் தன் சக்தியையும் கொஞ்ச நாளாய் இழந்து வருவது பிரத்தி யக்ஷம். இப்படியிருக்க, மகாத்மா காந்தி, இன்னும் இப் பிளவுகளை விரித்துப் பெருக்கும் விவாத விஷயங்களை இந்தத் தறு வாயில் உட் புகுத்தி, ஒவ் வொரு காங்கிரஸ் அதிகாரியுமே நூல் நூற்க வேண்டு மென்றும், இன்னார் இன்னார் விலகி விட வேண்டு மென்றும், குறுகிய நோக்கத் தோடும் வைராக்கிய புத்தி யோடும் வற் புறுத்துதல், நாட்டின் தூர்ப் பாக்கிய மென்றே சொல்ல வேண்டும். இந்தச் சமயத்திலே நாட்டிலுள்ள எல்லாக் கட்சியினரையும் ஒன்று சேர்த்துப் பலப்படுத்தி, ஒரே முகமாகச் சுயராஜ்யத்தை நாடுவது தான் நல் மதியாகும்.

தற்ப்பு.—பழமொழிக் களஞ்சியம் போன்றதும், அரிய இனிய பல கவிகளைத் தன்னுள் விரவப் பெற்றதுமான இந்த நாவல், ஜமீன்தார்கள், நாட்டுக் கோட்டைச் செட்டிகள், கொள்ளைக்காரர், முதலிய பல்லோரது மர்மங்களையும் நடவடிக்கைகளையும், கோற்று விசாரணைகளையும், வெகு ரசமாய்க் கூறுவது. கதா நாயகன் கதா நாயகி இவர்களுடைய காதலின் சரித்திரமும், போ. சுப்பையர், சப்பாணித் தேவர் சூடலி முதலியோரது வேடிக்கை விநோதங்களும், படிக்கப் படிக்கத் தெவிட்டாது. இதைப் போன்ற நாவல் இதுவரை தமிழில் இல்லை யென்றே சொல்லலாம். மன மகிழ்ச்சி யோடு நல்லறிவையும் ஊட்டத் தக்கது.

உடனே வாங்கிப் படித்துப் பாருங்கள் !!
ஆசிரியர் அச்சுப் பிரசுராலயம், புஸ்தகசாலை,
மயிலாப்பூர், சென்னை.

பத்திரிகைக் குறிப்பு.—மாதந் தோறும் 80 பக்கங்களும் சில படங்களும் இருக்க வேண்டும் என்பதே முதல் உத்தேசம். நடப்பிலோ மாதந் தோறும் எட்டு—பதது பக்கங்கள் அதிகமாயும், பல படங்களும் ஆகிவிடுகின்றன. இவ்வாறு அதிகப் பக்கங்கள் கொடுத்தும், வரி பிளவாதும் (சிலவற்றை) ஸ்மால் பைகாவிலும் அச்சடித்தும் கூட, இடம் போதாமல் பல கட்டுரைகள் மிகுந்து கையிலிருக்கின்றன. அடுத்த மாதத்துச் சீமைக் கடிதத்தில் மட்டும் பன்னிரண்டு படங்கள் வரை இருக்கும். அக் கடிதத்தை விளக்கக் கூடிய படங்கள் இன்னும் மிகப் பல கையில் இருக்கின்றன. அவற்றையெல்லாம் பிளாக் ஆகச் செய்து பத்திரிகையில் பிரசுரிக்க மிக்க பணம் பிடிக்கும். சந்தாதார்களின் தொகையோ, படங்களே யின்றி வெறும் பத்திரிகையை (80 பக்கம்) மட்டும் பிரசுரிப்பதற்கு வேண்டிய அளவு கூட இன்னும் ஆனபாடில்லை. என் செய்வது? ஆசை யொரு பக்கமும் பணக் குறை யொரு பக்கமுமாக மனத்தை வருத்துகின்றன. "இருந்து தெரிந்து கொள்" (Live and Learn) என்னும் ஆங்கில வசனத்துக் கிணங்க, இந்தப் பத்திரிகையைத் தொடங்கிய பின்னர், என் ஆயுளில் இதுவரை யான் அறிந்துகொள்ளாத அநுபவ ஞானத்தை இந்த மூன்று மாதங்களில் அடைந்து விட்டேன். அவற்றையெல்லாம் பின்பு விஸ்தரித்து எழுதுகிறேன். தற்காலம், பத்திரிகை இன்னும் மேம்பட்டு இனிது நடந்தேறும் வண்ணம், நண்பர்களும் அபிமானிகளும் அதிகச் சந்தாதாரர்களையும் விளம்பரஞ் செய்வோரையும் சேர்த்துதவ வேண்டுகிறேன்.

அ. மாதவையர்

உதயணன் நாடகம்

ஷேக்ஸ்பியர் கவிந்திரரது மிகச் சிறந்த ஒதேல்லோ நாடகத்தை மிகப் பொருத்தமாய் அழகாய்த் தமிழில் அமைத் தெழுதியது.

இது வரை படித்திராவிட்டால் இன்றே வாங்குங்கள்

இரண்டாம் பதிப்பு—விலை 0—12—0